
காவே
கர-ஆனி JUNE 1951
8
அணா




# ஷெல்



**X-100 மோடார் ஆயில்**

BSY 183 TM



கோபால்: (தன்னுடன் பிரயாணம் செய்யும் ஒருவரைப் பார்த்து) என் ஸார், இப்படி ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் 'டீ' சாப்பிடுகிறீர்களே!

அவர்: நீங்கள் எல்லோரும் சோர்வுற்று எவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். நான் அப்படியா இருக்கேன், பாருங்கள். களைப்பையும் சோர்வையும் போக்கி ஊக்கமூட்ட நான் 'டீ'யை நம்பியிருக்கிறேன். எத்தனைபேர் 'டீ' 'டீ' என்று கூவுகின்றனர். 'டீ'யின் குணம் அவர்களுக்குத் தெரியும். நீங்களும்தான் 'டீ' சாப்பிட்டுப் பாருங்கள். பிறகு என்னையே முந்தி விடுவீர்கள்.

**டீ**

'டீ' என்றால் என்ன? அதுதான் சிக்கனமானதும், களைப்படைந்த உடம்புக்கு ஊக்கத்தையும், தளர்ந்த மனதிற்கு உற்சாகத்தையும் மீட்டுக் கொடுக்க ஒப்பற்றதும், சுலபமாக தயாரிக்கக்கூடியதும், எங்கும் கிடைப்பதுமான தேசீயபானம். ஒரு கோப்பை 'டீ' சாப்பிட்டுப்பாருங்கள் அப்பொழுதே அதன் குண விசேஷங்களை உணர்வீர்கள்.

CTB 38

'சென்ட்ரல் டீ போர்டா'ரால் வெளியிடப்பட்டது.

நீங்கள் உங்கள் பற்களை

இன்று **மக்லீன்** செய்தீர்களா?



வருஷக் கணக்காக நான் மக்லீன்ஸ் உபயோகித்து வருகிறேன். என் பற்கள் அழகாகவும் வெண்மையாகவும் இருக்கின்றன. நான் வேறு எந்த டூத் பேஸ்டும் உபயோகிக்கமாட்டேன்.

வாயைச் சுத்திகரித்து
மூச்சின் நாற்றத்தை
போக்குகிறது

உமிழ்நீர்
கெடுதலைத் தடுத்து
ஈறுகளைப் பாதுகாக்கிறது.

மேலே உள்ள கறைகளை அகற்றி
பற்களுக்கு
**வெண்மை**
தருகிறது

பளபளப்பாகவும் கவர்ச்சிகரமாகவும் தோன்றும் பற்களை அளிக்கவல்லதும், அத்துடன் அதிகமான சுத்தமும் பாதுகாப்பும் தரத்தக்கதுமான டூத்பேஸ்ட் உங்களுக்கு வேண்டுமானால் மக்லீன்ஸ் பெராக்ஸைட் டூத்பேஸ்டையே உபயோகியுங்கள்.

பிரத்யேகமானதும் பிறர் பின்பற்ற முடியாததுமான தயாரிப்பு இது. வாயில் ஊறும் உமிழ்நீர் மூலம் பல் சொத்தை பிடிப்பதையும் பல்மேலே பாசி படருவதையும் மக்லீன் தடுத்து உதவுகிறது. பல்லின்மீது விகாரமான கறை படிந்திருந்தால் அதை அகற்றிவிடும். பற்களை வெண்மையாக்கி, பளபளக்கச் செய்து சுவாசத்தை சுகந்தமுடையதாக்குகிறது.

**இன்றே மக்லீன்ஸ் வாங்குங்கள் !**




MTX-I-TM




Sub Distributors for Tanjore Dt.

**Selva Electric Stores**

Pothamarai South

KUMBAKONAM


29 MAY MADRAS

# பொருளடக்கம்

மலர் 10 | ஆனி இதழ் 11


பாசிக் கொடி — 5
எஸ். பி. ஹர்ஷன்

மூன்றும் குழந்தை — 11
ர வேங்கடரத்னம்

முதல் குழந்தை — 17
கௌரீ

மாவலிப் பொறிகள் — 27
ராமய்யா

ஸ்ரீ ஸ்துதி — 31
ஏ. கே. ராகவாச்சாரியார்

எது இன்பம் (தொடர் கதை) — 33
வே. ரங்கராஜன்

லண்டன் கடிதம் — 51
லீலா கோபாலன்

பிரார்த்தனை — 57
கே. வி கே.

சரபோஜி மணிக்குட்டி — 65
எம். எஸ். சுப்பிரமணிய ஐய்யர்

போட்டியில் வெற்றி — 70
ஆர். சுப்பிரமணியன்


குறிப்பு: 'காவேரி'யில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனயே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

# ARMSTRONG
## THE BETTER BICYCLE

# ஆம்ஸ்டிராங்
## சிறந்த பைசைகிள்



சிறந்த பைசைகிளாகிய **ஆம்ஸ்டிராங்** ஒன்று உங்களிடம் இருந்தால் போதும்; வேலை நிமித்தமாகவோ வேடிக்கையாகவோ எவ்வித தொந்தரவும் இன்றி நீங்கள் ராஜபாட்டை போல சவாரி செய்யலாம். ஒரு **ஆம்ஸ்டிராங்** வாங்குங்கள். ஸைகிள் தொழிலில் பிரசித்திபெற்ற தயாரிப்பாளர்களின் சிறந்த தயாரிப்பு உங்களுக்குச் சொந்தமாயிருக்கிறது என்கிற பெருமை உங்களுக்கு விரைவில் ஏற்படும். அதன் பெயரே குறிப்பிடுவதுபோல், வலிவாகவும், இந்தியாவின் கரடுமுரடான ரஸ்தாக்களில் நீடித்து நின்று வருஷக்கணக்கில் நம்பிக்கையளிக்கத் தக்கவாறு உழைப்பதாகவும் அது விளங்குகிறது. **ஆம்ஸ்டிராங்** — மிகவும் பிரபலமான பைசைகிள்—ரஸ்தாவில் அதை நம்புங்கள். அதற்குக் கொடுக்கும் விலை அதற்குத்தகும்.

விநியோகஸ்தர்கள் :

**ராயல் ஸைகிள் அண்டு மோட்டார் கம்பெனி**

13/14, பிராட்வே, தபால் பெட்டி நெ. 219, சென்னை-1.

ARMSTRONG
The BETTER BICYCLE
ARMSTRONG CYCLES LTD
BIRMINGHAM

காவேரி

கர வருஷ
மலர் 10

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார்

MADRAS

ஆனி
இதழ் 11

# பாசிக் கொடி

**எஸ். பி. ஹர்ஷன்**

*ஸுமுகீ நளினீ ஸுப்ரு:*
*ஶோபனா ஸுரநாயிகா!*
*காலகண்டீ காந்திமதீ*
*க்ஷோபிணீ ஸூக்ஷ்மரூபிணீ!!*

**ய**முனை நதிக்கரையில் அமைக்கப்பட்டிருந்த அந்தப் பர்ணசாலையில் அம்பிகையின் படத்திற்கு முன்பாகச் சப்பளம் இட்டு உட்கார்ந்தபடி முனிவர் அவ்யக்தர் ஸஹஸ்ரநாமம் பாடிக்கொண்டிருந்தார். அவர் மனம், கவனம் அனைத்தும் அவள் ரூபத்திலேயே ஒன்றிப்போயிருந்தது. எனவே, பயமும் பக்தியும் ஒருங்கே சேர நாதரூபன் அங்கே வந்து நின்றதை அவர் கவனிக்கவில்லை.

பூஜை முடியும்வரை பொறுமையாகக் காத்திருந்தான் நாதரூபன். ஸஹஸ்ரநாமத்தின் பொருள் எதுவும் அவனுக்கு விளங்கவில்லை; என்றாலும், அவ்யக்தர் படித்த தோரணையில் அவன் சிலையென நின்றான்.

ஒருவாறு பூஜை முடிந்து அபிஷேகம் செய்த ஜலத்தைத் துளசிச்செடியில் ஊற்றுவதற்காக அவர் வெளியே வந்தபோது நாதரூபனை அவர் பார்த்தார். அவருக்குப் பேசக்கூடச் சந்தர்ப்பமளிக்கவில்லை நாதரூபன். அவர் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்து கதறிக் கதறி அழுதான்.

முனிவரின் சாந்தமான முகத்தில் புன்னகை அரும்பிற்று. அவனை ஆசுவாசப்படுத்தி இரு தோள்களிலும் கை கொடுத்து எழுப்பினார். "அப்பா, நாட்டையும் காட்டையும் தாண்டி இவ்வளவு தூரம் வந்து என் காலில் விழக் காரணம் என்ன?" என்று கேட்டார்.

நாதரூபன் தன்னை ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "ஸ்வாமி நான் என்றைக்குப் பூமியில் பிறந்தேனோ அன்றைக்கு முதலாகவே என்னைக் கஷ்டம் சுவீகரித்துக்கொண்டுவிட்டது. அதோடு போராடிய போராட்டத்தில் எனக்கு வெற்றியே கிடைக்கவில்லை. எனக்குத் துறவறம் அளித்துவிடுங்கள். இறைவனின் நாமங்களை ஜபித்துக்கொண்டே காட்டில் என் காலத்தைக் கழித்துவிடுகிறேன்" என்றான்.

"வாழ்க்கையில் கசப்பு ஏற்பட்டதற்காகத் துறவறம் ஏற்றுக்கொள்வதென்பது முறையல்ல குழந்தாய். சாதாரண வாழ்வின் ஏற்றத் தாழ்வுகளையே சகித்துக்கொள்ள இயலாத உன்னால் துறவறத்தின் கட்டுப்பாடுகளை ஓரளவுக்குக்கூடச் சகித்துக்கொள்ள முடியாது. நான் இந்த நிலையில் உனக்கு உதவ இயலாதவனாக இருக்கிறேன்" என்றார் அவ்யக்தர்.

நாதரூபன் கண்கள் கலங்கின. "நீங்கள் மறுத்தாலும் நான் இந்த இடத்தைவிட்டு நகரப்போவதில்லை. நட்ட நடுக் காட்டிலே இரவைக் கழித்தால் புலியோ, நரியோ என்னைச் சூறையாடட்டும். நான் ஊருக்குத் திரும்பமாட்டேன்" என்றான்.

முனிவர் ஒரு நிமிடம் யோசித்தார். "அப்படியானால் என்கூட வா" என்று சொல்லிவிட்டு யமுனையை நோக்கி நடந்தார்.

பசுவைப் பின்தொடரும் கன்றென நாதரூபன் அவரைப் பின்தொடர்ந்தான். அவன் உள்ளத்தில் ஏதோ ஒன்று நீ அடையக்கூடாத ஒன்றை அடைந்துவிடப்போகிறாய் என்று அறைகூவிற்று.

யமுனையில் வெள்ளம் பொங்கிப் பெருகிக்கொண்டிருந்தது. "நாதரூபா, அதோ அந்த அலைகளைப் பார். அவற்றில் நீ என்ன காண்கிறாய்?" என்று கேட்டார்.

நாதரூபன் அந்த அலைகளைப் பார்த்தான். "ஸ்வாமி, அந்த அலைகள் காற்றின் வேகத்தை உணர்த்துகின்றன. கதிரவனின் கிரணங்கள் அதில் பட்டுப் பிரதிபலிப்பதால் கண்கள் கூசுகின்றன. மீன்கள் அந்த அலைகளோடு துள்ளி விளையாடுகின்றனவே, அவற்றிற்கு மனிதனைப்போலக் கஷ்டங்களே கிடையாதோ" என்றான்.

அவ்யக்தர் சிரித்தார். "எனக்குச் செய்யக்கூடிய சில உதவிகளைச் செய்துகொண்டு என் கூடவே இரு. உன் உள்ளம் பக்குவமடைய என்னால் என்ன செய்ய முடியுமோ அவ்வளவும் செய்கிறேன். உன் மனதின் பாகுபாடுகளை அளந்து காட்டும் கருவியாக யமுனை நதி உனக்கு உதவும்" என்றார்.

நாதரூபனுக்கு அவர் சொன்னது எதுவும் விளங்கவில்லை. ஆனால், அவர் தனக்கு அபயம் அளித்தது அவனுக்குப் பாந்தமாக இருந்தது.

ஐந்து மாதங்கள் சென்றன.

நாதரூபன் குருவுக்கு எல்லாப் பணிவிடைகளும் செய்தான். அவரோடு அவர் உண்ணும் உணவில் பங்கு கொண்டான், அவனுக்கு அவன் வாழ்க்கை ஆனந்தமாக இருந்தது.

மறுபடியும் ஒருநாள் யமுனையைப் பார்க்கச் சொன்னார் முனிவர்.

இந்தத் தடவை யமுனையின் அலைகள் நாதரூபனுக்கு வேறு வகையாகக் காட்சியளித்தன. யமுனை தன் அலைகளின் மூலம் குழந்தாய், என் தன்னலமற்ற சேவையைப் பார். இறைவனின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடப்பதில் எனக்கு ஏற்படும் ஆனந்தம் குருவுக்குப் பணிந்து சிசுருஷை செய்வதில் உனக்கு ஏற்படுகிறதா?" என்று கேட்பதைப்போல இருக்கிறது என்றான் அவன்.

அவ்யக்தர் திருப்தி கலந்த குரலில், "அப்பா, துறவறம் ஏற்றுக்கொள்ள கால்பங்கு பக்குவம் பெற்றிருக்கிறாய். மற்றப் பங்கையும் பெற்றுவிட்டால் உனக்குத் தீக்ஷை செய்துகொடுக்கத் தடை எதுவும் இராது" என்றார்.

* * *

மேலும் ஆறு மாதங்கள் பறந்தன.

யமுனையின் அதே கரையில் அதே கேள்வியைத் திரும்பக் கேட்டார் முனிவர். "நாதரூபா! பொங்கிப் பெருகும் யமுனை நதியின் அலைகளில் நீ எதைக் காண்கிறாய்?"

"ஸ்வாமி அந்த அலைகளின் நடுவே மீன்கள் காணப்படவில்லை கதிரவனின் ஒளி பிரதிபலிக்கவில்லை எனவே நிர்மலமாக இருக்கிறது அந்த அமைதியான சூழ்நிலையில் நான் உங்கள் உருவத்தைக் காண்கிறேன் நான் என்ன முயன்றும் அது மறையவே இல்லை. நீங்கள் என் அருகிலேயே இருக்கிறீர்கள் என்ற உணர்வு ஏற்பட்டாலும்கூட எனக்கு உங்கள் உருவம் அலைகளின் ஊடே தெரியத்தான் செய்கிறது" என்றான்.

முனிவர் சிரித்தார். யமுனையில் இறங்கி அதன் நீரை அவர் வழக்கம்போலத் தலையில் தெளித்துக் கொண்டபோது அவர் மனம் அவரைத் தட்டிக் கொடுத்து, "உனக்கு வாரிசை ஏற்படுத்தப்போகிறாய் நீ. இன்னும் குறுகிய காலத்திலே துறவிகளின் எண்ணிக்கையில் ஒன்று அதிகப்படப் போகிறது" என்றது.

* * *

நான்கைந்து மாதங்களுக்குப் பிறகு!

யமுனை நதியின் கரையிலே அவ்யக்தரும் நாதரூபனும் நின்றுகொண்டிருந்தனர்.

"நம் குடிசையில் மாட்டியிருப்பதைப்போன்ற படம் ஒன்று அலைகளினூடே தெரிகிறது. அதன் முன்னிலையில் தாங்கள் அமர்ந்திருக்கிறீர்கள், உயரே பறக்கும் பறவைகளும், அலைகளின் ஓசையும் லலிதா ஸஹஸ்ரநாமம் படிப்பதைப்போல என் செவிகளில் எதிரொலி செய்கின்றனவே," என்றான் நாதரூபன்.

"நீ பக்குவம் அடைந்துவிட்டாய். நாளைக் காலை நகரத்திற்குச் சென்று பஞ்சாக்ஷர உபதேசத்திற்கென்று தேவைப்படும் சில பொருள்களைச் சேகரித்து வா. பிறகு நீ வேண்டிய துறவறம் உனக்குக் கிடைத்துவிடும்" என்றார் அவ்யக்தர்.

நாதரூபனின் உள்ளம் ஆனந்தத்தில் மூழ்கித் திளைத்தது.

* * *

மறுநாள் விடியற்காலையிலேயே எழுந்து நகரத்திற்குச் சென்றான் நாதரூபன். தேவைப்பட்ட பொருள்களை வாங்கிக்கொண்டு திரும்புவதற்குள் அன்றையப் பொழுது கழிந்துவிட்டது. விளக்கு வைத்து ஒரு நாழிகை சென்றபிறகே குடிசைக்குள் நுழைந்த அவன் முகம் பேயறைபட்டவன் முகத்தைப்போல வெளிறிக் கிடந்ததைக் கண்ணுற்ற அவ்யக்தர் துணுக்குற்றார்.

"நாதரூபா ஏன் கலக்கம்? நாழி ஆகிவிட்டதற்காகவா? அட அசடே. இவ்வளவு நாள் பொறுத்தவன் இன்னும் ஒரு நாள் பொறுக்கக்கூடாதா? நாளைக்கு உன் துறவுச் சடங்கை நிறைவேற்றிவிட்டால் போகிறது" என்றார் அவர். அவர் குரலில் தெளிந்த பரிவும் அன்பும் யமுனைக்கரை பூராவும் எதிரொலித்தது.

நாதரூபனின் கண்களில் நீர் துளித்தது. "ஸ்வாமி, நேற்று இருந்த நாதரூபன் அல்ல நான். இன்றைக்கு வேற்றாள். யமுனை நதி என் உள்ள வேறுபாட்டை வெளிப்படுத்திவிட்டது" என்றான்.

அவன் குரலோடு இறைந்த சோகம் அவ்யக்தரைக்கூட ஒரு கணம் நிலைகுலையச் செய்தது. "நாதரூபா, உள்ளே சென்று ஒரு குவளை தண்ணீர் குடித்துவிட்டு வா. முதலில் உன்னைச் சாந்தப்படுத்திக் கொண்டு பிறகு நடந்ததை விவரமாகச் சொல்" என்றார்.

நாதரூபன் அப்படியே செய்தான்; "நேரமாகிவிட்டதால் மாலைக்கடன்களை முடித்துக்கொள்ள விரைந்து யமுனைக்குச் சென்றேன் அங்கே நான் நேற்றுப் பார்த்ததைப்போல அம்பிகையின் உருவத்தைக் காணவில்லை. அதற்குப் பதில் ஒரு மானிடப் பெண்ணின் மோகன உருவம் காட்சியளித்தது. இதைத் தங்களிடம் சொல்லாமல் இருக்க முடியவில்லை" என்று அலறினான் அவன்.

முனிவர் உடல் சிலிர்த்தது. "மானிடப்பெண்ணின் உருவமா?"

"ஆமாம் ஸ்வாமி, ஆமாம். மத்தியான்னம் சுமார் இரண்டு மணிக்கு எனக்குத் தாகமாக இருக்கவே தாகசாந்திக்காக ஒரு வீட்டிற்குள் நுழைந்தேன். அங்கேதான் அவளைச் சந்தித்தேன். அவள் கொடுத்த நீர்மோர் எவ்வளவு ருசியாக இருந்தது! அப்போது அவளைப் பார்த்ததுதான். அவளையே பார்த்துக்கொண்டிருக்க வேண்டும்போல இருந்தது. ஆனால் உருத்திராக்ஷ மாலையும் தர்ப்பைக் கட்டும் எனக்கு என் உண்மை நிலையை விளக்

கின. என்னை எப்படியோ சமாளித்துக்கொண்டேன். இங்கே வந்தாலோ யமுனையின் அலைகள் எனக்கு அவள் உருவத்தையே காட்டுவானேன்! அதே இளமை ததும்பும் முகம்!! புருவம், கொப்புளிக்கும் அங்கங்கள்... உருண்டு திரண்ட அழகிய கரங்கள்...... மோகனப்...... பார்வை......"

நாதரூபன் தன்னை மறந்து ஏதேதோ உளறிக்கொண்டே சென்றான். முனிவர் இடையே குறுக்கிட்டார். "நாதரூபா, போதும் நிறுத்திக்கொள். என் கடைசிப் பரீக்ஷையில் தோல்வியடைந்துவிட்டாயே! உன் பரிபூரண நிலையை எண்ணி இன்பக் கனவு கண்டுகொண்டிருந்த என்னைப் பகற் கனவு காண்பவனாகச் செய்துவிட்டாயே,"

நாதரூபன் குலுங்கக் குலுங்க அழுதான். "ஸ்வாமி, என்னை மன்னித்துவிடுங்கள். எனக்குத் தீக்ஷை கொடுக்கும் நாளைத் தள்ளிப் போடுங்கள். அதற்குள் என் மனதில் ஏற்பட்டுள்ள சலனத்தை அடக்கிக்கொண்டுவிடுகிறேன்."

ஆசிரமத்தில் வளர்ந்துவந்த பெண் மான் ஒன்று ஆண் மான் ஒன்றின் வரவைத் தொடர்ந்து துள்ளிக் குதித்துக்கொண்டு ஓடிற்று. முனிவர் அதைச் சுட்டிக் காட்டிச் சிரித்தார் "இயற்கையின் வலையிலே நீயும் மாட்டிக்கொண்டுவிட்டாய். இனி வலை வீசிய வேடனே இரங்கினால் அன்றி உனக்கு விமோசனம் கிடையாது" என்றார் அவர்.

அந்த நாளைப் பின்தொடர்ந்த நாட்களில் நாதரூபன் ஒருநாள்கூடச் சிரிக்கவில்லை. அவன் உள்ளம் இயற்கையை அளவுக்குமீறி ரஸிக்கத் துவங்கிற்று. காட்டிலும், மேட்டிலும், செடியிலும், கொடியிலும், மிருகங்களின் நடமாட்டத்திலும், யமுனையின் அலைகளிலும் அவன் ஏதோ ஒரு புதுமையை உணர்ந்தான். இந்தப் புதுமையின் முதிர்ச்சியில் அவன் தான் எதையோ இழந்து சோகப்படுபவன் என உணர ஆரம்பித்தான்.

அவ்யக்தர் நாதரூபனின் இந்த அபூர்வ மாறுதலை உணராமலில்லை. அவர் அவளைத் தேடிப் பிடித்து அவனுக்கு திருமணம் செய்துகொடுத்தார். இடைக்காலத்திலே அவளிடம் சேர்ந்து, இனி தம்முடனே தங்கிவிடுவான் என்று ஆவலோடு காத்துக்கொண்டிருக்கையில் தம்மை விட்டுப் பிரிந்துவிட்ட அவனை நினைத்து வருந்தினார். ஆனால் முனிவரல்லவா? இந்தக் கலக்கம் அவரிடம் கொஞ்ச நேரத்திற்கே இருந்தது. அடுத்த நிமிடம் அவருக்கே இயல்பான அமைதியைப் பெற்றுவிட்டார்.

* * *

இப்போதெல்லாம் அவ்யக்தர் மறுபடியும் ஓரியாகிவிட்டார். அந்த சமயம் நாதரூபனோ எல்லாச் சாதாரண மானிடர்களைப்போலே அந்ஞானத்தில் உழன்று மனைவி மக்களோடு காலம் கழித்துவந்தான். இயற்கையின் ஆசாபாசங்கள் ஒவ்வொன்றும் அவனைப் பாதிக்கத் தவறவில்லை.

ஆம். அவனுக்கு இரண்டு பிள்ளைகளும், ஒரு பெண்ணும் ஏற்பட்டுவிட்டன.

அன்றைக்கு அவன் அவ்யக்தரைப் பார்ப்பதற்காக வந்திருந்தான், அவர் அவனை அழைத்துக் கொண்டு பழையபடியே யமுனா நதிக்கரைக்குச் சென்றார் இந்துவுக்கு ஞானாபிஷேகம் செய்து கிறித்தவனுக்குவதிலே எவ்வளவு பரபரப்பு ஒரு பாதிரிக்கு இருக்குமோ அவ்வளவு பரபரப்பு அவ்யக்தருக்கும் இருந்தது. இருக்காதா என்ன? ஆரம்பத்திலே ஒன்றும் இல்லாமல் துறவு வேண்டும் என அடைக்கலம் புகுந்த அவனுக்கு, ஆத்மார்த்தமான முறைகளைச் சொல்லிக்கொடுத்து,

---

# ஸ்தோத்ர ரத்னமாலா

***ஸ்தோத்ர ரத்னமாலா***—ஸ்ரீரங்கம்கோடி கன்யகாதானம் தாதாசாரியார் தொகுத்தது. 172 பக்கங்கள் கொண்டது. விலை ரூ 1.

இந்தப் புத்தகம் புராணங்களிலிருந்தும் ஸ்தோத்திர பாடங்களிலிருந்தும் அனுபவ பூர்வமாயும் உபதேச பரம்பரையிலும் வந்த சில ரத்தினமான ஸ்தோத்திரங்களின் கோவை. நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்வதோடு தெய்வத்தை மனதில் இருத்தி, சில காலமேனும த்யானிக்க எண்ணும் ஆஸ்திகர்களுக்கு இது மிகச் சிறந்த புத்தகம்.

இதில் பூதேவீ ஸ்தோத்திரம், லக்ஷ்மீ ஸ்தோத்திரம், மஹா புருஷ ஸ்தோத்திரம், ருக்மிணீ பிரார்த்தனை, கிருஷ்ண கர்ணாமிருதம், ராம கர்ணாமிருதம, பாகவத ஸங்கிரஹம், கோபிகா கீதம், கிருஷ்ணாஷ்டகம், கீத கோவிந்தம், சரணாகதி மந்திரம, பகவத் கீதை, ராமாயண சங்கிரகம், ஸ்ரீரங்க மகாத்மியம் இன்னும் பற்பல ஸ்தோத்திரங்களின் முக்கியமான பாகங்கள் நாகர அக்ஷரத்திலும் தமிழிலும், தமிழ் அர்த்தத்துடன் பிரசுரிக்கப் பட்டுள்ளன.

ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டிய புஸ்தகம். மூலம் அனைத்தும் படித்துணர அவகாச மில்லாத இக்காலத்தில் ஒவ்வொரு குடும்பத்தினரும் பெண்களும் அவசியம் படித்துப்பாடம்செய்ய வேண்டிய நூல் இது. ஸ்ரீரங்கம் முதல் திருமாளிகை தாதாசாரியார் வம்சத்தினர் இவ்வெளியீட்டால் தமிழ் மக்களுக்குப் பேருபகாரம் செய்துள்ளார்கள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. (தபாற் செலவு தனி)

புத்தகம் கிடைக்குமிடங்கள்:-

1) முதல் திருமாளிகை, தெற்குச் சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்.

2) ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ், ஸ்ரீரங்கம்.

3) காவேரி காரியாலயம், பெஸண்ட் ரோட் கும்பகோணம்.

SERVING AGRICULTURISTS THROUGH CHEMISTRY

# என்ன பயிரிட வேண்டு மாயினும் சரி.........



நெல், கோதுமை, ராகி, சோளம், கரும்பு அல்லது வேறு என்ன பயிரிடவேண்டுமாயினும் ஏ. ஸி. ஸ்பெஷல் எரு மிகவும் உகந்தது. அமோகமான விளைச்சல் அளிக்கிறது. ரஸாயன எருக்களை யுக்திகரமாகச் சேர்த்து தயாரிக்கப்பட்டிருப்பதே ஏ. ஸி. ஸ்பெஷல் எரு. உணவுத் துறைக்கு சேவை புரிவதன் நிமித்தம் நீண்ட காலம் நடத்திய ஆராய்ச்சியின் பரிசு இது.

இந்தஸ்பெஷல்எருவை இம்முறை உபயோகித்து பாருங்கள்

LOTUS BRAND MF

**THE MYSORE FERTILISER COMPANY**, POST BOX No. 1206, MADRAS. 1.

Offices : BANGALORE, KUPPAM, ERODE, METTUPALAYAM, COONOOR & OOTY.

FEDERALS.582.



# இளமையைப் பாதுகாருங்கள்

[உலகப் பிரசித்திப்பெற்ற சிகிச்சை]

[பயனில்லை என்றால் கிரயம் வாபஸ் செய்வதற்கு கியாரண்டி.]

புருஷர்களின் வியாதிக்கு :—

*ரீஜெனுவேஷன் மாத்திரை & தைலம் :* வீரியம் இன்மை, உடல் தளர்ச்சி, அகால வயோதிகம், காதுக் கோளாறுகள் முதலியவைகளுக்கு உத்தரவாதம் பெற்ற வலிவுள்ள நரம்புகளுக்கான டானிக். இந்த டானிக்கை இட்டாலி [ஐரோப்பா]யில் நடந்த இண்டர் நேஷனல் கண்காட்சியில் முறைப்படி காண்பிக்கப்பட்டது.

| | |
|---|---|
| ரீஜெனுவேஷன் மாத்திரை | ரூ. 5—0—0 |
| ரெஜ தைலம் | ரூ. 4—8—0 |

ஸ்திரீகளின் வியாதிக்கு :—

*மாதவிடாய் கோளாறுகள் :* எஸ்டிரெயின் மாத்திரைகள் உங்களுடைய தாமதமான பிரச்னைகளையும், சரியான போக்கை மீட்பதற்கும், கருப்பையைத் திரும்ப இயக்கச்செய்வதற்கும் உடனே சுவஸ்தப்படுத்துகிறது.

அபாயமற்றது—நம்பிக்கையானது, எஸ்டிரெயின் ரூ. 5—0—0 ஒரு பாட்டில்.

*லூகோரியா :* உங்கள் அழகையும், இளமையையும் இழக்காதீர்கள். லூகோரைம் மாத்திரைகள்—லூகோரியா வியாதியை நிச்சயமாக நிவர்த்திக்கிறது.

லூகோரைம் ரூ. 5—0—0

இங்கிலாண்டில் வினியோகஸ்தர்கள் : **YOUNG & Howard Limited.**

இந்நாட்டில் ஸ்டாகிஸ்ட்கள் :

(1) **Allbutt & Co. 182, Mount Road, Madras 2.**

(2) **Sree Girija Medical Stores, Arcot Sreenivasachar St. Bangalore City.**

அவன் பக்குவமடைவதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள் எல்லாம் கடைசி சமயத்தில் பாழாகி விட்டனவே!

யமுனையின் அலைகளைப் பார்த்தான் நாதரூபன். "ஸ்வாமீ ஆணும் பெண்ணும் சேர்ந்ததே உலகம். எட்டிப்பிடிக்க இயலாத சலிப்பென்பதே இல்லாத இந்த இன்பத்தைக் காட்டிலும் வேறு இன்பமே இல்லை. ஆகவே மனிதன் அவன் வாழ்க்கையில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளுக்கு ஈடு கொடுத்துக்கொண்டு இயற்கையோடு இயைந்து செல்வது தான் சிறந்த தர்மம். என்று தோன்றுகிறது" என்றான் அவன்.

அவன் பதிலால் அவ்யக்தருக்கு அவர் வேண்டிய திருப்தி கிடைக்கவில்லை "அப்பா, பாசிக் கொடியிலே காலைச் சுற்றிக்கொண்டுவிட்டாய் நீ. ஒவ்வொரு கொடியாக அறுத்தெறிந்தாலும் நீ அவற்றிலிருந்து மீண்டு கரை ஏறுவதென்பது இயலாத காரியம். எனவே நான் என் வழியே போகிறேன். நீ உன் வழியே செல். இமயமலையின் அடிவாரத்திற்குச் சென்று சமாதியில் ஆழ்ந்து என் கடைசி நாட்களைக் கழிக்கவேண்டும்" என்றார் அவர்.

"என்னை வளர்த்து ஆளாக்கினீர்கள். வாழ்க்கையில் கஷ்டத்தைத் தவிர வேறு எதையும் அநுபவித்தறியாத எனக்கு நான் விரும்பிய பெண்ணை மணம் செய்துகொடுத்து, பிழைக்கத் தெரியாத நான் உயிர்வாழப் பொருள் உதவியும்செய்தீர்கள். உங்கள் பிரிவை நான் எப்படிச் சகித்துக்கொள்வேன். மேலும் தங்கள் உதவிக்குப் பிரதியாக நான் ஏதாவது செய்யவேண்டாமா?'' முன்னுக்குப் பின் முரணாக என்ன பேசுவது?'' என்றே தெரியாமல் ஏதோ உளறிக்கொட்டினான் நாதரூபன்.

"எனக்காக நீ துறவறம் மேற்கொள்ள வேண்டாம் அப்பா. ஆரம்பத்தில் துறவுக்காக நீ என்னை நாடினாய் நடுவிலே ஏற்பட்ட பந்தம் உன்னை இயற்கைக் குக்கவர்ந்துவிட்டது. குறுக்கே நான் நிற்பானேன்'' என்றார் முனிவர்.

"என் மகன் பெரியவனாகிவிட்டான். இந்த ஆண்டிலே அவனுக்குத் திருமணம் செய்ய நிச்சயித்துவிட்டேன். திருமணம் முடிந்தபிறகு எனக்கு அங்கே என்ன வேலை? மறுபடியும் தங்களிடம் தீக்ஷை பெற்றுக்கொள்ளும்வரையாவது தாங்கள் தங்கியிருங்கள்'' எனக் கெஞ்சினான் நாதரூபன்.

முனிவரும் வகையின்றி ஒப்புக்கொண்டார்.

* * *

நாதருபனின் மகனுக்குத் திருமணம் நடந்து அவனுக்கு ஒரு குழந்தையும் பிறந்தது. பேரனைக் கையில் எடுத்துக்கொண்டு அவ்யக்தரின் குடிசைக்கு வந்தான் நாதரூபன்.

"உன் கையில் என்ன குழந்தையா? துறவறம் மேற்கொள்ளும்போது குழந்தையைமாத்திரம் உன்னோடு வைத்துக்கொள்ள விரும்புகிறாயா, என்ன?'' என்று பரிகாசமாகக் கேட்டார் அவ்யக்தர்.

நாதரூபன் சிரித்தான். "துறவறமா? இப்போதைக்கு ஏது துறவறம்? இவன் வளர்ந்து பெரியவனாகவேண்டாமா? அவன் தன் தந்தையிடம் போகும் நாழியைவிட என்னிடமே அதிகமாகத் தங்குகிறான். கடவுளும், குழந்தையும் ஒன்று என்ற தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு பார்த்தால் துறவு மேற்கொள்வதற்காக அதன் மூலம் கடவுளை அடைவதற்காகச் சிறு குழந்தையைப் பாசத்தால் துடிக்கவைப்பது தவறு எனப் படுகிறது." என்றான் அவன்.

முனிவர் சிரித்தார். "நன்றாயிருக்கிறது நாதரூபா, உன் வாதம், நாளைக்கு அவன் வளர்ந்தால் அவனுடைய திருமணத்தையும் பார்க்கவேண்டும் என்பாய். சொல்லக்கூடாத ஒரு உண்மையைச் சொல்கிறேன் கேள். உன் ஆயுள் இன்னும் ஓர் ஆண்டிலே முடிந்துவிடும். இளம் வயதிலே உனக்கு ஏற்பட்ட ஆசையை இப்போதாவது பூர்த்தி செய்துகொண்டு கடைசிக் காலத்தை ஆண்டவன் பணியிலே செலவிடு. வீணாக ஆசையிலும் பாசத்திலும் உழன்று நாட்களைக் கழிக்காதே.''

நாதரூபன் கண்கள் கலங்கின. "ஸ்வாமீ. இந்தக் குறுகிய காலத்தையாவது என் மனைவி மக்களோடு முக்கியமாக இந்தச் சின்னஞ்சிறு குழந்தையோடு கழிக்க அநுமதி கொடுங்கள். என் ஆயுள் முடிவதற்குப் பத்து நாட்கள் முன்னதாகத் துறவறம் பூண்டால் போதாதா?''

"நீ அப்போதும் கூடத் துறவு மேற்கொள்ளத் துணியப்போவதில்லை. வீணாக என் என்னையும் கெடுத்து உன்னையும் கெடுத்துக்கொள்கிறாய்? குடும்பம் என்னும் தடாகத்தில் ஆசாபாசங்கள் கொண்ட பாசிக்கொடிகளில் வகையாக மாட்டிக் கொண்டுவிட்டாய் நீ. நீ அதிலேயே கிட. நான் என் வழியைப் பார்த்துக்கொண்டு போகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே அவ்யக்தர் இமயமலையை நோக்கி நடந்தார்.

நாதரூபன் தன் கால்களில் ஏதோ சுற்றிக் கொண்டதை உணர்ந்தான். அவன் மனம் அவனுக்குச் சொல்லிற்று பாசிக்கொடி!

"சி இது என்ன?'' என்று அலுப்புடன் சொல்லிக்கொண்டே கால்களை உதறிய அவன் குழந்தையின் அழுகுரல் கேட்டபோதுதான் தன் கால்களைச் சுற்றிக்கொண்டது பாசிக்கொடியல்ல, பேரக்குழந்தையின் கைகள் என்பதை உணர்ந்தான்.

ஆசையோடு குழந்தையை வாரி எடுத்துக் கொண்ட அவன் தன்னையும் அறியாமல் யமுனை நதியின் அலைகளைப்பார்த்தான். நீர் தேங்கியிருந்த ஒரு மூலையில் படர்ந்திருந்த பாசிக்கொடி அவன் கண்களில் பட்டது.

யமுனையின் அலைகள் இந்தத் தடவை அவனுக்கு குடும்பம் என்பது பாசிக்கொடி. காலைச் சுற்றிக் கொண்ட பாசிக்கொடியிலிருந்து மீட்சி பெறுவதென்பது எவ்வளவு கடினமோ அதைவிடக் கடினம், குடும்பத்தில் ருசி கண்டுவிட்ட ஒருவன் அதிலிருந்து மீட்சி பெறுவதும்' என்று சொல்வதைப் போல இருந்தது.

# பரிசு ரூ 6000

**முதற்பரிசு ரூ 3000**
**2வது பரிசு ரூ 2000**
**3வது பரிசு ரூ 1000**

விசேஷப் பரிசு. சரியான விடை அனுப்பும் ஒவ்வொருவருக்கும் ஒரு அழகிய பௌண்டன் பேனா.
இப்போட்டியின் சீலிட்ட விடை சென்னை ப்ரீமியர் பாங்க் ஆப் இந்தியாவில் டிபாசிட் செய்யப்பட்டுள்ளது
★ பிரவேசக் கட்டணம். கூப்பன் ஒவ்வொன்றுக்கும் அணா நான்கு மட்டுமே. ★
சலுகை: பத்து கூப்பன் அனுப்பும் ஒவ்வொருவரும் மேற்கொண்டு ஒரு கூப்பன் இலவசமாக அனுப்பலாம்.

## முடிவு தேதி 11—7—51

| | | விடைகள் 1 | 2 |
|---|---|---|---|
| 1 | அவரவர்கள் சொந்த வேலை என்றால் இப்படியாகச் செய்து முடிப்பது சகஜம் தானே ! | சீக்கிரம் | சாக்கிரதை |
| 2 | சில குழந்தைகள் இதாய் இருப்பதற்கு மூல காரணம் பெற்றோர்களாயிருப்பது முண்டு. | சீக்கு | பக்கு |
| 3 | நல்ல இது உள்ள மங்கை என்றால் ஒரு கண் பார்ப்பதுண்டு சில வாலிபர்கள். | உருவம் | பருவம் |
| 4 | ஒருவர் கோபமாய் இருப்பதை அவருடைய ஒரு இதனாலேயே தெரிந்து கொள்ளலாமே ! | பார்வை | வார்த்தை |
| 5 | இது இல்லாமல் ஒருவர் பேசிக்கொண்டே யிருந்தால் எத்தனை நேரம்தான் கேட்க முடியும் ? | உணர்ச்சி | கவர்ச்சி |
| 6 | பெரிய பட்டணத்திலுள்ள வீடுகள் என்றால் பல......கள் இருப்பதுண்டு. | மாடி | குடி |
| 7 | சிலருடைய இது பிறரை அருவருப்படையச் செய்யும். | போக்கு | வாக்கு |
| 8 | இதனாலும் ஒருவர் முகம் சிவப்பாக மாறும். | வெட்கம் | வெப்பம் |
| 9 | வரவர காங்கிரஸ் கட்சிக்குள் இது அதிகமாகி வருகிறது. | ஊழல் | பூசல் |
| 10 | முன்காலத்தவர்கள் நீண்ட ஆயுள் பெற்றிருந்ததன் காரணம் அவர்களது...... முறைகள்தான். | ஆசாரம் | ஆகாரம் |
| 11 | இப்படியாகப் பேசி தன் காரியத்தை சாதித்துக் கொள்பவர்களுமுண்டு. | சுருக்கம் | உருக்கம் |
| 12 | இது நடக்குமிடத்தில் இரைச்சல் இல்லாதிருக்குமா ? | சண்டை | சந்தை |
| 13 | உற்சவத்தில் விசேஷமான இது உள்ள தினம் கூட்டமும் நன்கு சேரும். | வாகனம் | வாத்தியம் |

மேலே உள்ள கட்டத்தில் பதிமூன்று குறிப்புகளும் அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டுஇரண்டு விடைகளும் தரப்பட்டுள்ளன. அதில் குறிப்புக்கு மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும். விடைகளைச் சாதா காகிதத்திலும் எழுதலாம். அச்சுக் கூப்பன்களும் தேவையானவர்களுக்கு இலவசமாக அனுப்பப்படும். விடைகளை வார்த்தைகளாகவும் எழுதலாம். 1-2 என்ற எண்களை உபயோகித்தும் எழுதலாம், பர்முடேஷன் முறையும் அனுமதிக்கப்படும்.

கட்டணத்தை மணியாடர் மூலமேதான் அனுப்பவேண்டும். ம. ஆ. ரசீதும் கண்டிப்பாய் கூப்பனுடன் சேர்த்தனுப்பவேண்டும். ம. ஆ. பாரத்தின் அடிக் கூப்பனிலும் அனுப்புபவரின் முழு விலாசம் கட்டாயம் எழுதவேண்டும். இப் போட்டியின் சரியான விடை ஆடி இதழ் காவேரியில் வெளிவரும். நேயர்களுக்குத் தபால் மூலமும் அனுப்பப்படும். மானேஜரின் தீர்ப்பும் எமது நிபந்தனைகளுமே முடிவானதும் சட்டபடிக் கட்டுப்படுத்துவதுமாகும். நிபந்தனைகள் வேண்டுவோர் எழுதவும்.

கூப்பன்களும் கட்டணமும் அனுப்பவேண்டிய விலாசம் :- **மானேஜர், வரலக்ஷ்மி கம்பெனி**
"ஸ்ரீவாஸ்" பல்மநேர் P. O. (சித்தூர் ஜில்லா)

போட்டி 15–ன் சரியான விடை:— (1) நிழல் (2) அதிசயம் (3) தேவை (4) கருணை (5) கல்வி (6) பணியாள் (7) நாடு (8) வேகம் (9) சரணம் (10) ஆதாயம் (11) இனிமை (12) கட்டில் (13) சுயம்
**2 1 1 1 1 1 1 2 2 2 2 1 1**

**போட்டி 14ன் பரிசு விவரம் :**

முதற் பரிசு தலைக்கு ரூ. 185—3—0 விதமும், 2வது பரிசு தலைக்கு ரூ. 6—3—0 விதமும், மூன்றாவது பரிசு தலைக்கு ரூ. 1—1—0 விதமும் வழங்கப்பட்டன. பரிசுகள் யாவும் 21—5—51 அன்று அனுப்பப்பட்டுவிட்டன. முழு விவரங்கள் "வரலக்ஷ்மி க்ராஸ் வொர்ட்ஸ்—16" இதழில் பார்க்கவும். இதழ் முற்றிலும் இலவசம்.

எல்லா ஊர்களிலும் கலக்டர்கள் தேவை. நல்ல கமிஷனும் மெரிட் பரிசும் உண்டு.




ர. வேங்கடரத்னம்

சாவித்திரி கேட்டுக்கொண்டுதான் இருந்தாள். கூடத்தில் அவளது மாமியார் பார்வதி சொல்லிக்கொண்டிருந்தது அனைத்தும் அவள் காதில் விழுந்தன. பார்வதியின் குரல் நல்ல நாளிலேயே கேட்கவேண்டாம். நாலாப்புறமும் நன்கு கேட்கும். அதுவும், இப்பொழுது தன் மனக்குறையை, உள்ளத் தாங்கலை அடி வயிற்றி னின்று வெளிப்படுத்தும்போது, குரல் எப்படி இருக்கும்!

"அதென்னவோம்மா, என் நாட்டுப் பெண்ணுக்குப் பிறந்த குழந்தை ஒன்றுமே தங்கவில்லை. இந்த வயிற்றெரிச்சலை யாரிடம் சொல்லியழுவது?"

"அதென்ன, அதற்குள்ளேயே அப்படிச் சொல்லிவிட்டாய்? என்னவோ பிரமாதமாய் அவள் நூறுதரம் பிரசவித்தவள் போலவும். அந்த நூறு குழந்தைகளும் தங்காததுபோலவும் சொல்லுகிறாயே. இப்போதுதானே ஒருதரம் பிரசவித்திருக்கிறாள்? இரண்டாம் தரம் இப்பொழுது பிள்ளையாண்டிருக்கிறாள்போல் இருக்கிறது. இந்தத் தடவை பார்ப்போம்."

"ஒன்றல்ல, இரண்டு குழந்தைகள் பெற்றுப் பெற்று பறி கொடுத்தாகி விட்டாது. இது மூன்றாவது பிரசவமாக்கும். இந்தத் தடவை குழந்தை எத்தனை நாள் தங்கப் போகிறதோ, யார் கண்டார்கள்?"

"அதெல்லாம் ஒன்றும் பயப்படாதே. இந்தத் தரம் ஜமாய்த்து விடுவாள், பார். ஜோரான பேரன் பிறப்பான் உனக்கு, பார்த்துக்கொண்டே இரு."

"ஜோரான பேரன் தான் பிறக்கிறான். யார் இல்லை என்றார்கள். பிறந்த குழந்தை கையில் தங்கத்தான் மாட்டேன் என்கிறது."

"ஒருதரம் செத்துப் போகும், இரண்டுதரம் போகும். பிறக்கிற குழந்தையெல்லாம் கையிலிருந்து நழுவிக் கொண்டே இருக்குமா? நன்றாய் இருக்கிறது உன் நியாயம்!"

"இப்படித் தான் நான் போன தரமும் எண்ணிக் கொண்டிருந்தேன். தலைச்சன் குழந்தைதான் போய்விட்டது; இரண்டாம் குழந்தையாவது தங்கும் என்று தான் நினைத்து ஏமாந்தேன். இந்தத் தரம் மட்டும் என்ன வாழ்ந்துவிடப் போகிறது?

"நீ அப்படியே நினைத்துக்கொண்டிரு. குழந்தை பிறந்து, தானே சிரஞ்சீவிபோல் இருக்கும், பார்."

"என் நாட்டுப் பெண்ணுக்கு அத்தனை ஏது அதிர்ஷ்டம்? அது ஒரு துக்குறி. அது கிட்டேயாவது குழந்தை தங்குகிறதாவது! ஊஹூம், எனக்கு நம்பிக்கை இல்லை."

"உன் நாட்டுப் பெண்ணுக்கு என்னடி குறைச்சல்? அழகில்லையா, அடக்கமில்லையா? அல்லது வேறு எதிலாவது மட்டமா?"

"வேறு எதிலே மட்டமாய் இருக்கவேண்டும்? ஒன்று போதாதா? குழந்தை தங்கமாட்டேன்கிறதே. அதைச் சொல்லு. அழகும் அடக்கமும் நிறைய இருக்கின்றன; இருந்து என்ன பிரயோஜனம்? பெண்ணுக்கழகு குழந்தைதானே?"

"நீ பேசுகிறது வேடிக்கையாய் இருக்கிறதே. அவளுக்குக் குழந்தை பிறக்கவில்லையா? மலடி

யாய்ப் போய்விட்டாளா? குழந்தை செத்துப் போய் விட்டதற்கு, என்னவோ ரொம்பத்தான் குதிக்கிருயே''

''மலடியாய் இருந்தால், இவ்வளவு தூரம் சொல்லப் போகிறேனு? ஏதோ, நம் அதிர்ஷ்டம் அவ்வளவதான், நாம் கொடுத்து வைக்கவில்லை என்று நினைத்துக் கொண்டு பேசாமல் இருந்து விடலாம் இது இரண்டுங் கெட்டானுய் அல்லவா இருக்கிறது?''

''அவள் என்ன பண்ணுவாள் அதற்கு? வேண்டுமென்றே குழந்தைகளைச் சாகக் கொடுத்தாளா? உன் அத்தனை ஆசை குழந்தைகளிடம் அவளுக்குக் கிடையாதா? ரொம்பத்தான் பிரமாதமாய்......!''

''ஆமாம், நீ இன்றைக்கு எனக்கு எதிர்க்கட்சி பேசவேண்டுமென்று வந்திருக்கிருய்போல் இருக்கிறது. அதனுல்தான் இப்படிக் கோணல் கட்சியே பேசிக்கொண்டிருக்கிருய்''

''பெருவிட்டால், மலடி எனலாம். பெற்ருலும் அவளை நீ ஏதும் சொல்லிக்கொண்டிருந்தால்?''

''பெற்றுப் பெற்றுச் சாகக் கொடுப்பதில், யாருக்கடி லாபம்?''

''மூன்ரும் குழந்தை பிழைத்துவிடும்; நான் சொல்வது நிச்சயம் பலிக்கும்''

''பலித்தால், ரொம்ப சந்தோஷம்தான்! என் நாட்டுப்பெண்ணை நான் தலைமேல் வைத்துக் கொண்டு, கூத்தாடக்கூடத் தயார். நான் அவளைப்பற்றி இப்போதுதான் வேறேதாவது மட்டமாய்ச் சொல்கிறேனு? ஒரு குழந்தை கையில் தங்கி நிற்கட்டும். வேறென்ன கேட்கிறேன் நான்?''



"பிறக்கப் போகிற பேரனுக்கு இப்போதே பிடித்துக் கிலுகிலுப்பை—எல்லாம் வாங்க ஆரம்பித்துவிடு."

"அது மட்டும் நான் ஏமாறமாட்டேன். போன தடவையே நான் குழந்தையைப் பார்க்கப் போகவில்லை. முதல்தரம்தான் போனேன், இரண்டாவது பிரசவத்தின்போதும் கடுதாசி போட்டிருந்தார்கள். நான் நகரவேயில்லை; இரண்டு நாளில் போகப்போகிற குழந்தைக்குப் பார்வை என்ன கேடு என்றிருந்துவிட்டேன் இந்தத் தடவையும் அப்படித்தான் பண்ணப்போகிறேன். வரிந்து, வரிந்து உபசாரம் பண்ணிக் கடிதம் வரும். நான் இங்கேயேதான் இருக்கபோகிறேன். உயிரோடிருந்தால், அவள் கொண்டுவரத்தானே போகிருள்? இங்கே பார்த்துக்கொள்கிறோம். கையில் தங்கப் போகிறதா, இல்லையா என்று தெரியாமல் அதைப் போய்ப் பார்ப்பானேன்? என் பிள்ளையாண்டானையும் அனுப்பப்போகிறதில்லை. இங்கே வந்தப்புறம் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிடப்போகிறேன்."

"நீ இப்படிச் சொல்லிக்கொண்டிருப்பதற்கு உன் நாட்டுப்பெண் இத்தடவை நல்ல சிரஞ்சீவிக் குழந்தையாய் ஒன்று பெற்று, உன்னைத் திணற அடிக்கப்போகிருள்."

"கிழித்தாள் போ! அவள்தான் துக்குறியாச்சே! அவளிடம் குழந்தை ஏன் தங்குகிறது? சில ஜாதக விசேஷங்கள் அப்படி! நமக்கு அப்பேர்ப்பட்ட தொன்று எங்கிருந்தோ வந்து வாய்த்திருக்கிறது அவள்தான் அப்படி இருக்கிருளே ஒழிய அந்தத் தாற்போல அவளுடைய அம்மாவைத்தான் எடுத்துக்கொள்ளேன். இவளுக்கு அப்புறம் ஐந்தாறு பெற்றுவிட்டாள். ஒவ்வொன்றும் கொழுக்கட்டையாய் இருக்கிறது. இப்பொழுதுகூட, அவள் பிள்ளையாண்டிருக்கிருளாம். பெண், அம்மாக்காரி—இரண்டு பேருக்கும் மாதம்கூட ஒன்ருய்த்தான் இருக்கும்போல் இருக்கிறது. ஒத்தாசைக்கு யாரோ, இந்தப் பெண்ணின் சித்தி தான் வருகிருளாம். இவள் குழந்தை தங்குகிறதா இல்லையா—பார்க்கவேண்டும். புண்ணியவதி வாய்த்தாளே!"

"நான் போய்விட்டு வருகிறேனம்மா. அவளுக்காகப் பரிந்துகொண்டு பேசுவதாக எண்ணிக்கொண்டு நான் பேசுவது ஒவ்வொன்றும் அத்தனைக்கத்தனை அவளுக்கு எதிராகத்தான் கிளப்பிவிடுகிறது. நான் நல்ல வேளையில் போய்ச் சேருகிறேன்."

பார்வதியின் சிநேகிதி போய்விட்டாள், சாவித்திரி இவ்வளவையும் கேட்டுக்கொண்டுதான் இருந்தாள். தன் மாமியாருடன் பேசிக்கொண்டிருந்தாளே, அந்த அம்மாளுடைய ஒவ்வொரு சொல்லும் சாவித்திரிக்கு நம்பிக்கையை ஊட்டியது. பார்வதியின் வார்த்தைகள் அவளுக்குச் சோர்வைத்தான் அளித்தன.

துக்குறி என்ற பட்டம் நேற்று இன்று வந்ததல்ல. முதல் குழந்தையின் மூச்சு நின்றபோது, எழுந்த கௌரவப்பட்டம் அது. இரண்டாம் குழந்தை அதை உறுதிப் படுத்தியது. ஈசுவரா, இம்மூன்ருும் குழந்தை என்ன பண்ணப்போகிறதோ? அந்த அவப்பெயரை அழிக்கப் போகிறதோ அல்லது...... சாவித்திரி கண்ணை இறுக மூடிக்கொண்டாள்.

"வெறும் கையோடு வருவதானல் நீ தயவு செய்து வரவேண்டாம், அம்மா. உனக்கு ரொம்பப் புண்ணியம் உண்டு. குழந்தையும் கையுமாய் வருவதானல், வா. இல்லாவிட்டால் நீ வர வேண்டாம் குழந்தையைப் பறிகொடுத்துவிட்டு வரும்போதே தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு, நீ வந்து, ஒன்றும் ஆகவேண்டாம்" எனக்கூறி, பார்வதியம்மாள் சாவித்திரிக்கு விடை கொடுத்தனுப்பினள்.

இதை யெல்லாம் கேட்டுவிட்டு, அவளுடைய அப்பா—அம்மா இருவரும் கதிகலங்கிப் போய் விட்டனர். மீண்டும் புக்ககத்தில் நுழையவேண்டுமானல், அதற்கு பார்வதி இட்ட நிபந்தனையைக் கேட்டதும் மனம் ஒடிந்து போய்விட்டனர். துக்குறி, அதிர்ஷ்டக்கட்டை என்றெல்லாம் மாமியார் பெண்ணைத் திட்டுவது அவர்களுக்குத் தெரியும். அவற்றை யெல்லாம்கூட அவர்கள் சமாளித்துக் கொண்டனர். ஆனல் கடைசியாகக் கிளம்பும்போது அவள் கூறிய சொற்கள்தான் அவர்களைத் தூக்கி வாரிப் போட்டன.

பிறக்கும் குழந்தை பறந்து போய்விடாமல் தங்கி நிற்க வேண்டுமே என்று எல்லோருக்குமே கடைசிவரை திகிலாய்த்தான் இருந்தது.

சாவித்திரியின் தாய் பிரசவித்து, நான்கைந்து நாட்களுக்குள் அவளுக்கும் குழந்தை ஒன்று பிறந்தது. இரண்டும் ஆண் குழந்தைகள் தாம் இரண்டுமே பார்ப்பதற்கு இலட்சணமாய்த்தான் இருந்தன. வேற்றுமை ஒன்றுதான் இருந்தது! சாவித்திரியின் குழந்தை தான் பிறந்தது வீண் ஆகாமல், சமுதாய ரிஜிஸ்டரில் தன்னைப் பதிவு செய்துகொள்ளும் முறையில், பெயர் ஒன்றைப் பெற்றுக்கொண்டு, கண்ணை இறுக மூடிவிட்டது. ஆம், நாமகரணத்தன்றே அது சாவித்திரியை நட்டாற்றிலே நிறுத்தி வைத்துவிட்டு, வந்த வழியே சென்றுவிட்டது.

இவை ஒன்றுமே பார்வதிக்குத் தெரியாது. அவள் "கடிதம்—போக்குவரத்து ஒன்றும் வேண்டாம். பிறந்திருக்கிறது—தாயும் குழந்தையும் சௌக்கியம் என்ற தந்தி, அடுத்து நாமகரணத்திற்கு அழைப்பு என்ன பெயர் இடலாம் என்ற கேள்வி என்று ஒரு இழவும் வேண்டாம். குழந்தை தங்கினல் இங்கே கொண்டுவா, பார்த்துக்கொள்ளலாம் கடிதாசு ஒன்றும் வேண்டாம்" எனக் கூறியிருந்தாள். எனவே அவ்விடத்திற்குக் கடிதம் ஒன்றும் செல்லவில்லை. முன்னல், ஏக ஆர்ப்பாட்டமாய்க் குழந்தைப் பிறக்கப்போவது, பிறந்தது, பெயர் வைக்கப்போவது, அப்புறம்

புராண கதாநாயகர்கள்போல் நாளொரு மேனியும் பொழுதுதொரு வண்ணமுமாய் வளருவது ஆகியவற்றை யெல்லாம் கடிதம் மேல் கடிதமாய் வரைந்து தள்ளிவிட்டு, பின்னுல் கையை விரித்துக்கொண்டு, குனிந்த தலையுடன் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு குற்றவாளியைப்போல் செல்வானேன்? என்று சாவித்திரியும் இருந்துவிட்டாள், அந்த இரண்டு இரண்டரை மாதங்களும். அவள் ஒருவாறு கிளம்பவேண்டிய நாளும் வந்தது. ஆமாம், பின்னே எத்தனை நாள்தான் இங்கேயே உட்கார்ந்து கொண்டிருப்பது? மீண்டும், போய் வார்த்தை வாங்கிக் கட்டிக் கொள்ளவேண்டும் என்றிருந்தால், எப்படித் தப்புவது? பழைய படி 'துக்குறி', 'இவள் வைத்தது துலங்காது', என்ற சொற்களையெல்லாம் காது கொடுத்துக் கேட்க வேண்டுமென்ருல், என்ன செய்வது?

"ஏண்டியம்மா, நீ போனுல் உன் மாமியார்க்காரி சுமுகமாய் இருப்பாளா?" என்று நாத்தழுதழுக்க, சாவித்திரியை அவள் தாய் கேட்டாள்.

அதே குரலில் சாவித்திரி பதில் கூறினுள்—பரவாயில்லையம்மா அப்பாவை ஆபீசில் லீவு கேட்டு எழுதிப் போட்டுவிடச்சொல்லு. என்னை அங்கே கொண்டு போய் விட்டுவிட்டு வந்துவிடட்டும். வந்தது வரட்டும். நான் சமாளித்துக் கொள்கிறேன்."

"என்னவோ உன்னை இப்படி சோதிக்கவேண்டாம் தெய்வமும்."

சாவித்திரிக்குக் கண்களில் நீர் சுரந்து, பெருகி வந்தது. அவளுக்குத் தன் மாமியார்மீது கொஞ்சம்கொஞ்சம் இருந்த கோபமும் போய்விட்டது. அவளுக்குத் தன்மீதே ஓர் அருவருப்புத் தோன்றியது. பார்வதியம்மாளுக்குப் பரிந்துகூட அவள் மனம் எண்ணமிட்டது.

"நிஜமாகவே, துக்குறி என்று உண்டானுல், நான் அப்படி ஒருத்தி தான்போல் இருக்கிறது. அவர் சொல்கிறுரே என்று கோபித்துக்கொண்டு, என்ன பயன்? அவர் உண்மையைத்தானே சொல்கிருர்? ஒன்றில்லை, இரண்டில்லை; பிறந்த குழந்தைகள் மூன்றுமே தங்கவில்லை யென்றுல், துக்குறி என்று சொல்லாமல், பின்னே, வைத்துக் கும்பிடுவார்களா?......"

அவளுக்குத் தன் உடலே அப்போது மிகவும் பயங்கரமாகத் தோன்றியது. ஒரு குழந்தையையும் தங்கவிடவில்லையே நான் என்று அவள் தன்னையே நினைத்துக்கொண்டு விசிக்க ஆரம்பித்து விட்டாள். அதற்குள் அவளது தாய் வந்தாள்.

"சாவித்திரி, நான் ஒரு யோசனை பண்ணியிருக்கிறேன். உன் அப்பாவும் சரி என்கிருர். கண்ணைத் துடைத்துக்கொள். இனிமேல் கவலையில்லை."

சாவித்திரி விழித்தாள்.

"நீ நான் சொல்கிறபடி, கேள். யோசனை ஏதும் பண்ணுதே."

பொறுமையை இழந்து "சொல்லேன்" என்று சாவித்திரி ஆசை பொங்கக் கேட்டாள்.

"நீ இந்தக் குழந்தையை வளர்த்து வா. நீ கொண்டுபோய் விடு இதை. சுவாமி நல்ல வேளையில்தான் இதையும் கொடுத்திருக்கிருர் இதை நீயே தாயாய் இருந்து வளர்த்துவா. இது உன் குழந்தையாகவே இருக்கட்டும்."

"என்னம்மா, இது? நீ சொல்வது வேடிக்கையாய் இருக்கிறது!"

"வேடிக்கை என்னடி? வினையாய்த்தான் சொல்கிறேன். மறு வார்த்தை பேசாமல் இதை நீ எடுத்துக்கொண்டு போ. பார், உன்னைப் பார்த்துச் சிரிக்கிறது" என்று பொக்கை வாயின்வழியே குறுநகையை ஓடவிட்டுக்கொண்டிருந்த தன் குழந்தையை அவள் சாவித்திரியினிடம் நீட்டினுள்.

சாவித்திரியின் உடல் முழுதும் நடுங்கியது.

"அம்மா, வேண்டாம் தயவுசெய்து"

"நன்ருய் இருக்கிறதடி உன் பேச்சு. இந்தக் குழந்தையை எடுத்துக்கொண்டு போவதற்குக் கசக்கிறதோ என்ன?"

சாவித்திரி திணறினுள்.

"இதுக்கு உன்னைத்தான் பிடித்திருக்கிறது. அப்பொழுதிலிருந்து உன்னையே பார்த்துப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருக்கிறது பார். எடுத்துக் கொண்டு போ. உன் மாமியார்க்காரியைக்கூட இது சாந்தமூர்த்தியாய்ப் பண்ணிவிடும்; பார்த்துக் கொண்டே இரு."

"அதற்குச் சொல்லவில்லையம்மா"—உள்ளத்தில் உள்ள எதையோ எடுத்துச் சொல்லமுடியாமல், சாவித்திரி தவித்தாள்.

"நான்தான் சொல்கிறேனே! அப்புறம் உனக்கு வேறென்ன வேண்டும்? உன் அம்மாவும் பிள்ளையாண்டிருந்தாளே' என்று உன் மாமியார்க்காரி ஏதும் கேட்டாளானுல், அந்தக் குழந்தை செத்துப்போய்விட்டதென்று சொல்லிவிடு."

சாவித்திரிக்கு 'பக்'கென்றது. ஏன், அவளுடைய தாய்க்கும் எதற்காகத் தன் குழந்தை செத்துப்போய்விட்டதாகத் தானே குறிப்பிட்டிருக்க வேண்டும் என்று முகம் அசடு வழிந்தது.

சாவித்திரியின் மனம் ஒப்பவில்லை.

"அம்மா, எனக்கு அப்படிச்செய்ய இஷ்டமில்லை உன் குழந்தையை நீயே வைத்துக்கொள்."




"உளறாதே ஏதாவது! ராஜாபோல இருக்கிறான்; இவனைக் கொண்டுபோகக் கசக்கிறதோ?"

சாவித்திரியின் மனம் படாதபாடு பட்டுக்கொண்டிருந்தது. தன்னிடமோ குழந்தைகள் தங்குவதில்லை. தானோ துக்குறி, அதிர்ஷ்டக் கட்டை இத்தியாதி. ஏன் இந்தக் குழந்தையையும் எடுத்துக்கொண்டு போகவேண்டும்? தன்னுடைய ஜாதக விசேஷமோ உலகப் பிரசித்தமானது.

"அம்மா, என்னிடமோ குழந்தைகள் தங்குகிறதில்லை. உடனே உடனே, எல்லாக் குழந்தைகளையும் சாகக்கொடுத்தவள் நான். என்னிடம் இதை ஏன் ஒப்படைக்கிறாய்? மோசடிப் பாங்கு என்று தெரிந்தும், பணம் போடுகிற சங்கதியாய் இருக்கிறதே"—இவ் வார்த்தைகள் வாயிலிருந்து கிளம்பவேயில்லை. நல்லவேளையாய் வாயில் வந்ததை வெளியே சொல்லாமல் இருந்தேனே என்று சாவித்திரி எண்ணிக்கொண்டாள்.

அவள் தாயின் குழந்தையை எடுத்துக்கொண்டு புக்ககத்திற்குப் பயணமானாள்.

சாவித்திரியைக் காப்பாற்றுவதற்கென்று தோன்றினாற்போல் பிறந்த தன் குழந்தையை அவளோடு அனுப்பிவிட்டதில், அவளுடைய தாய்க்குச் சற்று வருத்தம்தான். குழந்தையை ஒருநாள் போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டும் என்று அவள் கணவனிடம் நச்சரித்துக்கொண்டு தான் இருந்தாள். அதுவும், "குழந்தைக்கு இரண்டு வாரமாய் உடம்பு சரியாய் இல்லை. லொங்கு லொங்கென்று இருமுகிறது, கவலையாய்த்தான் இருக்கிறது" என்று எழுதியிருந்த சாவித்திரியின் கடிதம் கண்டதிலிருந்து அவளுக்கு அங்கே இருப்புக்கொள்ளவில்லை. அவள் மனம் பல்வேறு திக்கிலும் எண்ணமிடலாயிற்று.

அவள் பெண்ணைப் பார்க்க—உண்மையில் தன் சிசுவைப் பார்க்க, புருஷனோடு கிளம்பினாள். ஏற்கனவே மூன்று குழந்தைகளைச் சாவித்திரி பறி கொடுத்திருந்ததால், அப்போது அவளுக்குத் தன் குழந்தையைப் பற்றியும் கிலி பிடித்துக்கொண்டு விட்டது. "ஏனோ இந்த விஷப் பரீட்சை பண்ணினேன்? அவள் சமாச்சாரம் தான் தெரிந்து கிடக்கிறதே. இதையும் பறி கொடுத்துவிட்டு நிற்கிறாளோ, என்னவோ!"



சாவித்திரியின் மாமியார் அப்போது ஆற்றங் கரைக்குப் போயிருந்தாள். நல்லவேளையாக அவள் புருஷனும் வெளியே சென்றிருந்தான்.

"குழந்தை எங்கேடி, சாவித்திரி?" என்று படப் படப்புடன் விசாரித்துக்கொண்டேதான் சாவித் திரியின் தாய் உள்ளே நுழைந்தாள்.

"கடிதம் வந்து விட்டதா உங்களுக்கு?"

"என்னடி கடிதம்?"

"குழந்தை நேற்றுக் காலையிலே,......" என்று ஆரம்பித்தவளது குரல் அடியோடு அடங்கிவிட் டது.

வந்தவள் வாய் வெறுமனே இருக்குமா? "அட, துக்குறி, அந்தக் குழந்தையையும் சாப்பிட்டு ஏப் பம் விட்டு விட்டாயா? உன்னிடம் போய்க் குழந் தையைக் கொடுத்தேனே? என் மூளையைச் சொல்லவேண்டும்! நான் நினைத்தேன், அந்தத் துக்குறி இந்தக் குழந்தையை மட்டும் விட்டு வைக் கவாப் போகிறாள் என்று! அப்படியே ஆகி விட்டது."

உலகத்தினின்றே தனித்துப் பிரிந்து விட்டவள் போல் சாவித்திரி ஒதுப்புறமாகச் சென்று நின் றாள். அப்போது அவளது உடலும் உள்ளமும் ஒருங்கே நடுங்கின. ●




## கலியாண காலம்



# ராதா ஸில்க் எம்போரியம்

(டெலிபோன்: 84188)

**மயிலாப்பூர் :: மதராஸ்**

கலியாண காலங்களுக்கேற்ற பட்டுச்சேலைகள்: கெட்டிச்சாயமும் உத்தரவாதமுள்ளவை. அவரவர்களுக்குப் பிடித்த பல தினுசு களிலும், நாகரிக மோஸ்தர்களிலும் ஏராளமாகக் கைவசம் உள்ளன. பிடித்தமானவைகளைப் பொறுக்கி எடுக்க நேரில் — விஜயம் செய்யுங்கள். —

————————: பிராஞ்சு :————————

## ருக்மணி ஸில்க் எம்போரியம்,

**டெலிபோன்: 58,**

**பெரியதெரு, கும்பகோணம்.**



# முதல் குழந்தை

கௌரீ

"அடே, இதை அப்படியே கலைக்காமே வச்சுக்கணும்டா'' என்றாள் மல்லி சந்தோஷம் பொங்கும் கண்களுடன்.

"தினம் இப்படியே விளையாடலாம்டா பொன்னு.''

"அடீ, போரவங்க வரவங்க அப்படியே வைத்திருப்பாங்களா? நீயும் சொல்றீயே?'' என்றாள் கனகம் முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு.

"கலைத்தா உட்டுடுவேனா லேசில்? பலிவாங்கி விடமாட்டேனா?'' என்றான் பொன்னு.

தோட்டத்தில் விளையாட்டு வெகு மும்முரமாய் இருந்தது. மலை வளர்ந்து, காடுகள் பயிராகி ஏக அமர்க்களம். முருகன் குழந்தைகள் எல்லோரும் விளையாட்டில் புதைந்து எல்லாவற்றையும் மறந்திருந்தார்கள். விளையாட்டுத் தொடங்கி வெகு நேரமாகியும் வீட்டிற்கு போகவேண்டுமே, பச்சை கூப்பிடுவாளே என்ற எல்லாம் மறந்துவிட்டனர் பச்சை எவ்வளவு நேரமாய்க் கூப்பிட்டுக்கொண்டு இருந்தாளோ. இப்பொழுது போடும் சத்தம்தான் அவர்கள் காதில் விழுந்தது.

"எலே அம்மா வராடா பொன்னு"

"வரட்டும். மலையை மறைத்துக்கொண்டு நில்லுங்கடா ரெண்டுபேருமா"

"போடா — அம்மா வைய்யப்போரு பாரு. அப்பவே சொன்னேனே இல்லியோ" என்றாள் கனகம் உற்சாகமிழந்து. இவ்வளவு நேரம் அரும்பாடுபட்டுக் கட்டியதெல்லாம் ஒரு கணத்தில் பறக்கப்போகிறதென்று அவளுக்கு நிச்சயம். பச்சை வெகு வேகமாக வந்து பார்த்தாள் எல்லாவற்றையும் — கண்ணில் கோபம் ஜ்வலித்தது.

"எவ்வளவு நேரமாய்க கூப்பிடுகிறேன் காதிலே விழுவலே? கழுதேங்களா!" என்று பொன்னுவின் காதைப் பிடித்துக் கொண்டாள்.

அன்று காலை முதல் மணி பகல் ஒன்றடிக்கும் சமயம். இதுவரையில் ஒன்றாவது வீட்டில் எட்டிப் பார்க்காதது மிகுந்த கோபம். மலை, காடு, செடி எல்லாவற்றையும் ஒரு உதை விட்டாள்.

"வாங்கடா சிறுக்கிகளா ஊட்டுக்கு — தெருவு திரிஞ்சுட்டு நிக்கலாம்னு உத்தேசமா? வரட்டும் சொல்றேன் அப்பா—பலி வாங்கிப்புடச் சொல்றேன் எல்லாரையும்!" என்று சொல்லிக் கொண்டே பொன்னுவைத் தரதரவென்று உள்ளே இழுத்துச் சென்றாள்.

மலையும் காடும் ஒரே கணத்தில் இக்கதிக்கு உள்ளாகியது தண்டனையைவிட அதிகமாய்த் தோன்றியது பொன்னுவிற்கு. கனகமும மல்லியும ஒருவரை ஒருவா பார்த்துக்கொண்டனர் எல்லோரும் சேர்ந்து விளையாடிவிட்டுத் தண்டனைக்கு மட்டும் பொன்னு அகப்பட்டுக் கொண்டது அவர்களுக்கு வேதனை. பின்னால் என்ன காத்துக் கொண்டிருக்கிறதோ என்று தயங்கிக்கொண்டே உள்ளே வந்தனர். உள்ளே இருந்த காட்சி அவர்கள் வேதனையை இன்னும் பெருக்கியது. பச்சையின் கையில் கரிச்சட்டி இருந்தது.

"ம்................ எடுடா கையில்"

"பொன்னு பேசாமல் நின்றான்."

"பிடிக்கிறியா இல்லியாடா இப்போ?"

"அவங்களை கழுவச் சொல்லேம்மா"

"அவுங்களைச் சொல்ல எனக்கும் தெரியும் இன்னக்கி நீ தான் கழுவணும்—உம்.............. எடு கையில்"

"முடியாதும்மா"

"உம்......... அம்மாங் தூரத்துக்கு வந்துடுச்சா உன் திமிரு? காலையிலேருந்து ஒருத்தருக்காவது ஊட்டு நினைவு இல்லே! கழுதேங்க மாதிரி ஊர் திரிஞ்சுட்டு நிக்கலாம்னு பாக்றீங்க எல்லோரும்? ஊட்டுச்கு மொதக் குழந்தை! நீ படிக்கிற பாடத்தைதாண்டா எல்லாம் படிக்கும்? வயசு ஆவுது குட்டிச் சுவருமாதிரி. நாளைக்கு ஒரு வெடத்திலே பிளச்சுப் பேர் வாங்கிப் பிழைக்கணும். இந்த திமிர் பொடைச்சா எங்கே போய் முட்டி வாங்கறது நீ? இப்படி இருந்தயானு சந்தி சிரிச்சிப் போவும் நாளைக்கி? சோமாறிப் பயலே! எனக்கு எதுத்தா பேசக் கத்துக்கிட்டே?" என்று பொன்னுவின் காதைப் பிடித்து முறுக்கினாள் பச்சை.

பொன்னுவின் உள்ளத் தத்தளிப்பு கனகத்திற்கும் மல்லிக்கும் கைக்கண்ணாடிபோல் விளங்கியது. ஜாடையாகக் கரிச்சட்டியை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டனர். முருகன் வந்ததும் மேலும் பொன்னுவிற்கு என்ன காத்திருக்கிறதோ என்ற வேதனை அவர்களுக்கு ஒருவர் காதை ஒருவர் கடித்துக்கொண்டனர்.

* * *

சுற்றிலும் தோப்பும் துரவுமாய், பச்சை அடர்ந்த தோட்டத்தில் இருந்தது முருகனுடைய குடிசை. நாகரத்தின முதலியார் பங்களாத் தோட்டம் அது. முருகன் அவரிடம் சேவகம் செய்து வந்தான். முருகனும் பச்சையும் ஒத்த தம்பதிகள். இன்பமாய்க் கூழோ கஞ்சியோ குடித்து வந்தனர் பச்சை வருவதற்கு முன்பே முருகன் அங்கு வந்துவிட்டான். இப்போது மூன்று குழந்தைகளுக்கும் தகப்பனாகிவிட்டான். பிறந்து வளர்ந்து எப்படியானாலும் புகுந்த இடமோ புழங்கும் இடமோ அதை ஒத்தேதான் மனிதனுடைய நடை, உடை, பாவனை எல்லாம் வளர்கின்றன. நாளடைவிலே இடத்திற்கு ஏற்ற குணங்களும், நாசூக்கும், நாகரிகமும் வளர்ந்து விடுகின்றன. அதை ஒத்து முருகனுடைய எளிய சம்சாரமும நாகரிக முறையிலே நடந்து வளர்ந்து வந்தது. பச்சையும், குழந்தைகளும் பளீரென்றே தோற்றமளிப்பார்கள்.

பச்சையின் முதல் கவலை பொன்னுவைப்பற்றியதுதான். வீட்டிற்கு முதல் குழந்தை. தகப்பனுக்கு அடுத்த ஸ்தானம் வகிப்பவன். முருகனைப் போலவே ஒழுங்காக உழைத்துப் பெயர் எடுத்துப் பிழைக்கவேண்டுமென்ற ஆசை: அதற்கு வேண்டிய பாடுபட்டுக் குழந்தைகளை வளர்த்து வந்தாள். கண்டபடி அலையவோ திரியவோ விடமாட்டாள். சோம்பலுக்கு இடம் கொடுக்க மாட்டாள்.

முதலியாருடைய முதல் குழந்தை வேலாயுதமும் பொன்னுவின் வயதுக் குழந்தைதான். எப்பொழுதும் இருவரும் சேர்ந்து விளையாடுவார்கள்,

பொன்னு பங்களாவிற்கு வரச் சிறிது நேரமாகி விட்டால் வேலாயுதம் மீதடிக்கொண்டே வந்து விடுவான். இருவர் பேச்சிலும் அன்பு ததும்பும். வேலாயுதத்திற்கு என்ன சாமான் வந்தாலும் பொன்னுவிற்குப் பாத்தியம் உண்டு. எங்கே சென்றாலும் பொன்னுவை மறக்கமாட்டான் விடமாட்டான். அழகிய பளபளவென்ற சொக் காய்கள் போட்டுக்கொண்டு ஓடிவருவான். பொன்னு அதைக்கண்டு அசூயையோ ஆத்தி ரமோ படவேமாட்டான். அழகிய வேலாயுதத் திற்கு எதுவும் நன்ருக இருக்கிறதென்று மகிழ்ந்து போவான். சட்டையைத் தொட்டுப்பார்ப்பான். முகத்தைத் தடவிக் கொஞ்சுவான். வழவழ வென்று கொழுத்த வேலாயுதத்தைக் கட்டித் தழுவுவான். எப்பொழுதும் அவனைத் தொட்டுக் கொண்டே இருக்கவேண்டுமென்ற ஆசை அவ னுக்கு. ஒருநாள் பச்சை இதைப்பற்றிக் கொஞ் சம் எச்சரிக்கையும் செய்தாள்.

"எலே பொன்னு" எஜமான் கொழந்தை தெய்வம் தெரியுமா? பயபத்தியோடே நடந் துக்கோ. யானையும் பூனையும் ஒண்ணுயிடாது" என்ருள்.

பொன்னுவும் கூடியமட்டில் நல்ல பிள்ளையா கவே வளர்ந்துவந்தான். கழிந்த இரண்டு மூன்று நாட்களாக அவன் செய்யும் ஆட்டி பச்சைக்குக் கோபத்தை உண்டாக்கிக்கொண்டே வந்தது. 'இனிமே ஒரு இடத்தில்போய் பொளைக்கவேண்டி யவன். எல்லாம் தெரிந்துகொள்ளவேண்டும்' என்று சொல்லிக்கொண்டே வந்தாள். இனி இவ னைப் பொறுப்பாக ஒன்றில் அமர்த்தவேண்டும் என்ற நிச்சயத்திற்கும் வந்து அதைப்பற்றி முருகனிடம் சொல்லிக்கொண்டே இருந்தாள். இன்று அவன் சொல்லச் சொல்லக் கேட்காமல், கூப்பிடுவதையும் கவனிக்காமல் விளையாடிவிட்டு எதிர்த்துப் பேசியது அவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. இனி ஒருவழிசெய்துதான் ஆக வேண்டும் என்று முருகன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

அன்று முருகன் வர வெகுநேரமாகிவிட்டது. ஒரே அவசரமாய் வந்தான். பச்சைபோட்ட திட் டத்திற்கு ஒன்றும் இடமே இருக்கவில்லை.

"ம்......ம்......சோறுபோடு. போவணும் பங்க ளாவுக்குத் திரும்பவும்" என்ருன்.

"என்னமோ எப்பவும் கஞ்சியைக் கையில் வடித்துக்கொண்டமாதிரி அவசரம்தான். ஊட் டுலே ரெண்டு நாளா இந்தப் பொன்னுப்பய என்ன பாடு படுத்துகிருன் தெரியுமா?" என்ருள் பச்சை அவசரத்தோடு அவசரமாய்.

"சும்மா இரு. எல்லாம் பிறக்குது வழி தன்னுலே" என்று சாவதானமாகப் பேசி மடக்கிவிட்டுக் கிளம்பிவிட்டான் முருகன். படுக்க வந்து விடுவ தாகவும் அப்பொழுது எல்லாம் பேசிக்கொள்ள லாம் என்றும் சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டான் பங்களாவைப் பார்க்க, "இப்படியே அசரப்போட் டுப் போட்டுத்தான் எல்லாம் குட்டிச் சுவராய்ப் போகிறது." என்று தனக்குள் பேசிக்கொண்டே முருகனுக்குக் காத்திருந்தாள் பச்சை.

* * *

மறுநாள் போக மறுநாள் முதலியார் குழந்தை வேலாயுதத்திற்குப் படிக்க வைக்கும் கல்யா ணம் நடத்துவதாக ஏற்பாடு நடந்துகொண்டிருந் தது. இதை ஒட்டி முருகனுக்கு அதிகப்படிவேலை. முதலியார் அவனை வைத்துக்கொண்டு மும்முர மாய் ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். இது பச் சைக்கு இன்னும் தெரியாது. ஏனே முருகனும் இதுவரையில் சொல்லவில்லை என்ருல் அதற்கும் ஒரு காரணம் இருந்தது. பச்சை கவலைப்படும் பொன்னுவைப்பற்றி முதலியாருக்கும் இவனுக் கும் ஏதோ பேச்சு நடந்துகொண்டிருந்தது. இன்று இரவு ஒரு முடிவு தெரிந்த பிறகுதான் பச்சையிடம் சொல்வதாக நிச்சயம் செய்திருந் தான். முதலியாருடன் பேசிவிட்டு வேலை எல் லாம் பார்த்துக்கொண்டு வீடு திரும்பும் சமயம் இரவு மணி சுமார் பன்னிரண்டாகிவிட்டது. பச்சை ஒரு தூக்கம்போட்டுக்கூட விழித்துக் கொண்டுவிட்டாள்.

"தூங்கிட்டயா பச்சை?" என்று சத்தம் போட்டுக்கொண்டே வந்தான் முருகன்.

பச்சை பாயில் எழுந்து உட்கார்ந்துகொண்டு, "என்ன இவ்வளவு மும்மரமான வேலை?" என்ருள்.

"உச்.........அப்பா........."என்று பாயில் காலை நீட்டியபடி, "அதை ஏன் கேக்கறே? எல்லாம் உன் பயலைப் பத்திதான்." என்ருன் சற்றுக் குறும் புடன்.

"ஆமாம்! எம் புள்ளையைப் பத்தி உங்களுக்கு வெளையாட்டா தோணுது. நாளை ஒரு வழிக்கும் வராமே நின்ருல்லே தெரியப்போவுது. நானும் சொல்றேன் சொல்றேன் விளையாடிகிட்டே இருங்க நீங்கபாட்டிலே"

"இல்லே பச்சே, நெசம்மாதான் கேளு. எனக் கும் கவலை இல்லாமே இல்லே. அதுக்கு வேணுங் கிறது எல்லாம் செய்துகிட்டுத்தான் வாறேன். கேட்டியா? நாளைக்கு முதலியார் புள்ளையைப் பள்ளிக்கூடத்துலே போடப்போருரு. அதோடே நம்ப பயலுக்கும் வேலைபோட்டுத் தாரேன்னு ஒத்துகிட்டாரு. அதுதான் இம்மாநேரம் போதுமா?

"நெசம்மாதான் சொல்றீங்களா? நீங்க பேசறத் திலே வெளையாட்டு இருக்குண்ணுது புரியமாட் டேங்குதே எளவு"

"நீ நம்பாட்டிபோ பச்சே. எதுசொன்னலும் இப்படித்தான் ஒனக்கு. வேலாயுதத்தோடே கூடப் பை பொத்தகம் எல்லாம் தூக்கிகிட்டுப்

போவணும் அவனை ஜாக்கிரதையா பார்த்துக் கணும். இதுதான் வேலை சரிதானே?''

பச்சைக்குச் சிறிதுநேரம் ஒன்றுமே தோன்றவில்லை. இருந்த இடத்திலேயே பொன்னுவுக்கு இந்த வேலை அதிருஷ்டம் என்றே தோன்றியது. மேலும் முருகன் உழைத்துப் பெயர் எடுத்த எஜமானனின் குழந்தையுடன் என்பது அதற்கு மேல்திருப்தி. இவ்வளவு பக்கத்தில் இருக்கும் பிழைப்பிற்குத் தான் அதிகமாகக் கவலைப்பட்டுவிட்டதாகவே பட்டது. ஆனால் பொன்னு ஒழுங்காகப் பிழைக்கவேண்டுமே]என்ற கவலை தலை தூக்கிவிட்டது.

''முதலியார் சம்மதம்னு சொன்னாரா?'' என்றாள் மறுபடி சந்தேகத்துடன்.

''உம்......அவரும் சொன்னாரு. அம்மாவும் சொல்லிச்சு. என்னைபத்தியும் ஒன்னைப்பத்தியும்



தான் கேட்கவாணும். புள்ளே சம்பாரிச்சு கை நிறைய காசு கொணுந்தா அவனைச் சொல்லமாட்டேல்லே நீ—சும்மா சொல்லிக்கிட்டே கிடக்கிறியே தினம்''

''அதென்ன சொல்லப்போவுதோ கடசியில்'' என்ருள் பச்சை ஒரு பெருமூச்சுடன்.

''அதெல்லாம் மூசசு விடாது பார்த்துக்கோ. வேலே என்ன கசக்குதோ? புள்ளேயோடே விளையாடிகிட்டுருக்க?''

''அது ரொம்பப் பொல்லாதா போயிடுச்சிங் கறேன்''

''ஒண்ணுமில்லே—ஒனக்குத்தான் பயித்தியம்'' என்று கொட்டாவி விட்டுக்கொண்டே திரும்பிப் படுத்துக் கொண்டான் முருகன். பல யோசனைகளோடு பச்சைக்கு மட்டும் தூக்கமே பிடிக்கவில்லை.

பொழுது புலர்ந்து பொன்னு விழித்துக்கொள்வதற்குக் காத்துக்கொண்டிருந்தார்கள் பச்சையும் முருகனும். முருகன் மகனை அழைத்து வேண்டிய புத்திமதிகள் புகட்டினுன். எச்சரிக்கை செய்யவேண்டிய விஷயங்களை செய்தான்.

மகனைப் பார்த்து உள்ளம் பூரித்தாள் பச்சை. அவன்பேரில் இருந்த கடுமை எல்லாம் இரக்கமாக மாறியது. மகனை வாரி அணைத்துக்கொண்டாள்.

''பாத்தியாடாலே. மொதலியார் நல்ல தங்கமானவர். அவர் மனசு கோணுதபடி நடக்கணும். உனக்கு என்ன வேலே தெரியும் என்று ஏழு ரூபாய் தாரேன்னுரு? எல்லாம் உங்கப்பா முகத்தைப் பார்த்துத்தான். குளந்தையைக் கண்ணு போலப் பார்த்துக்கணும். அந்தாண்டை இந்தாண்டை போவப்படாது சாமா எல்லாம் கருக்கா இருக்கணும்.'' என்றெல்லாம் எவ்வளவோ சொன்னுள்.

தன் மகன்! வயிற்றில் பிறந்த முதல் குழந்தை! சம்பாதிக்கப் போகிருன்! என்ற பெருமை பச்சைக்கு எல்லையையே மீறியது. கனகமும் மல்லியும் சந்தோஷம் பூத்த விழிகளுடன் பொன்னுவைப் பார்த்தனர்.

பொன்னுவிடமோ இதற்காக ஒருவிதமான மாறுதலும் தோன்றவில்லை. தனக்குக் காத்து நின்ற வேலையை அவன் அதிர்ஷ்டம் என்று நினைத்தானே, இல்லேயோ, வரவேற்ருனே, இல்லேயோ ஒன்றும் புரிந்து கொள்ள முடியவில்லை. வாய் திறந்து அவன் பேசவில்லை.

''ஏண்டா? சந்தோஷமாய் இல்லேயாடா உனக்கு? இப்படி உம்மணு மூஞ்சிபோல் பேசாமல் நிற்கிருயே?'' என்று திரும்பத் திரும்பக் கேட்டாள் பச்சை.

பொன்னு ஏனே தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டான்.

''ஏலே, இப்படி எல்லாம் இருக்கப்படாது. சந்தோஷமாய் இருக்கணும் தெரியுமா? அவங்களுக்கும் மொத மொதக் குழந்தை பள்ளிக்கூடம் போகப் போவுது. நம்ம வயித்துக்கு முதல் முதல் பால் வார்க்கிறவன் நீ. எப்படியோ இங்கேயே கடவுள் உனக்கும் ஒரு வழி காட்டிவிட்டார். ரெண்டுபேரும் ஆயுசோட ஆயிரங்காலம் நன்ருய் இருக்கணும்'' என்று வாழ்த்தினுள் பச்சை.

* * *

முருகன் வேலைக்குப் போய்விட்டான். சிறிது நேரம் கழித்து, பொன்னு பங்களாவை நோக்கி வந்து கொண்டிருந்தான். வண்டியில் பந்தக்கால்களும் அதற்கு வேண்டிய சாமான்களும் பங்களா வாசலில் நின்றன. வாசலில் நின்றுகொண்டிருந்த வேலாயுதம் ''டேய் பொன்னு ஓடியா இங்கே'' என்ருன் அவனுக்காகக் காத்திருந்தவன்போல.

''டேய் எனக்கு நாளைக்கி கல்யாணம் தெரியுமா உனக்கு?'' என்ருன்.

பொன்னு தெரியாது என்பதாகவோ, தெரியுமென்பதாகவோ காட்டிக்கொள்ளவில்லை. விரிந்த கண்களுடன் சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டிருந்தான்.

''வா, அம்மாவைக் கேக்கலாம் போய்'' என்று வேலாயுதம் பொன்னுவைப் பிடித்து உள்ளே இழுத்துக்கொண்டு போனுன்.

உள்ளே வேலை மிகவும் மும்முரமாய் நடந்துகொண்டிருந்தது.

''ஏலே பொன்னு! நாளைக்கு நம்ம குழந்தைக்கு கல்யாணம். நீயும் நல்லா துணியணி போட்டுக்கொண்டு தயாராய் இருக்கணும் பள்ளிக்கூடம் போக, தெரியுமா?'' என்ருள் முதலியாரின் சம்சாரம்.

பொன்னுவுக்கு எல்லாம் ஒரே குழப்பமாக இருந்தது. வேலாயுதத்திற்குப் பள்ளிக்கூடம் போகக் கல்யாணம்! தனக்குச் செய்யக்கூடாதா? அவன் பள்ளிக்கூடம் போனுல் தானும் போகக் கூடாதா? நானும் அவனேடு பள்ளிக்கூடம் போய், படிக்கத்தான் வேண்டும்'' என்றெல்லாம் எண்ணங்கள் அலைபோல் எழுந்தன பொன்னுவின் இளம் மூளையில். வேறு யாரைக்கேட்பது? அம்மாவைத்தான் ஓடிவந்து கேட்க எண்ணினுன். அதற்குள் வேலாயுதம் அவனை வேறு ஒரு இடத்திற்கு அழைத்துக்கொண்டு போய்விட்டான். வேஷ்டிகள்! சட்டைகள்! பட்டுகள்! எவ்வளவு புதிய துணிகள்! பாத்தியாடா இதை? வெள்ளிச் சட்டம் போட்ட ஸ்லேட்டுப் பலகை! பூண் போட்ட பலபம். மகமல் பை நிறைய புத்தகங்கள்! அதோடு எவ்வளவு விளையாட்டுச்சாமான்கள்! ஒவ்வொன்றையும் காட்டி ஏதோ அடுக்கிக் கொண்டே போனுன் வேலாயுதம். ஆனுல் பொன்னுவுக்கோ ஒன்றுமே ஓடவில்லை. வேல

யுதத்திற்கு இவ்வளவு நடக்கிறதே என்று அவன் பொறுமைப்படவில்லை. அவனும் தினம் அங்கு விளையாடியவன்தான். எந்தச் சாமானும் தனக்குப் பிறகுதான் வேலாயுதத்திற்கு. எல்லாம் ஒன்றுபோல நடந்துவரும்பொழுது தனக்குமட்டும் இந்தப் படிக்கவைக்கும் கல்யாணம் ஏன் இல்லை? அவனுடன் பள்ளிக்கூடத்திற்கு ஏன் போகக்கூடாது? இக் கேள்விகள் அவன் மனதில் பலமாய் வேர் ஊன்றின. பொன்னு உற்சாகமின்றி இருந்தது வேலாயுதத்திற்கும் நன்கு புலப்பட்டது. விதவிதமான சாமான்களைக் கொடுத்துப் பார்த்தான், குஷிப்படுத்திப் பார்த்தான். ஒன்றும் பலிக்கவில்லை எதிரில்வந்த முதலியாரும் பேச்சுக்கொடுத்துக் குஷிப்படுத்தினார். ஒன்றும் பயனில்லை அங்கும் இங்கும் சற்று நின்றுவிட்டு வீட்டைப் பார்க்க ஓடிவந்துவிட்டான்.

ஓடிவந்தவன் பச்சையின் இரு கால்களையும் கட்டிக்கொண்டான்.

"யாண்டாலே? என்ன?" என்றாள் பச்சை.

"நானும் பள்ளிக்கூடத்துக்குப் போவணும், எனக்கு ஏம்மா கல்யாணம் இல்லே?"

சிரித்துவிட்டாள் பச்சை.

"கல்யாணம் செய்துகொள்ளணும்னு ஆசை உனக்கு?" என்று சொல்லிக்கொண்டே பொன்னுவின் தலை மயிரைத் தள்ளிவிட்டாள்.

"வேலாயுதத்தோடே நானும் படிக்கப் போவணும்மா" என்று கெஞ்சினான் பொன்னு.

அவன் எதற்கு இப்படி உற்சாகமின்றி இருக்கிறான் என்பது இப்பொழுதுதான் பச்சைக்குத் தெரிந்தது.

"வாணும்டா ராஜா. நமக்கு அதெல்லாம் முடியுமா சொல்லு? சமத்தா உனக்குக் கொடுத்த வேலையைப் பார்த்து வந்தின்னா கெட்டிக்காரப் பயல். குழந்தையோடே எல்லாம் எடுத்துக்கிட்டுப் பள்ளிக்கூடம் போ, பத்திரமா உன் காரியத்தைப் பார்த்துக்கொண்டு வந்து சேரு என்ன? கொண்டுபோன சாமானிலே ஒண்ணு குறையாமே பார்த்துக்கணும். கொளந்தையையும் பத்திரமா பார்த்துக்கணும், இதுதான் முதலியார் ஒனக்குச் சொன்னது. பார்த்துக்கோ" என்று சமாதானமாகப் பேசினாள் பச்சை.

பொன்னு ஒன்றையும் கேட்கவில்லை, தானும் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கவேண்டுமென்று ஒரு காலில் நின்றான். வேலாயுதத்தைப் போய்க் கேட்கப் போகிறேன் என்று குதியாய்க் குதித்தான்.

கடைசியில் பச்சைக்குக் கோபம் வந்து அவனை அடிக்கும்படியாகிவிட்டது. நன்றாய் வாங்கி விட்டாள் முதுகில். பொன்னுவுக்கு இருந்த ஆசையில் அடியைக்கூட லக்ஷியம் செய்யவில்லை.

அவனுக்கு வேறு ஒரு தைரியம். தினம் என்னுடன்தானே விளையாடுகிறான்—எல்லாம் கொடுக்கிறான், எங்கும் அழைத்துப் போகிறான் — இப்பொழுது மட்டும் நம்மை விட்டுவிட்டா போய் விடுவான்? ப்சு! அவ்வளவு கெட்டவனா வேலாயுதம்? பொன்னுவைக் கண்டால் அன்பில்லையா அவனுக்கு? போய்க் கேட்டால் குஷியா அழைத்துச் செல்வான் — தவறவே மாட்டான்" என்றெல்லாம் சொல்லியது அவன் சிறு உள்ளம்.

"அம்மா, வேலாயுதத்தைக் கேட்டால் கட்டாயம் அழைத்துப்போவாம்மா—நான் போய் கேட்கப்போறேன்" என்றான் ஒரே பிடியாக.

பச்சையின் கோபம் இன்னும் அதிகரித்தது—"எலே கழுதை! சொல்லச் சொல்ல நீபாட்டில் என்னமோ பேசிகிட்டே கிடக்கிறீயே என்ன? அவன்! அவன் இன்றியே? அவன் நம்மமாதிரி அரை வயித்துக் கூழுக்கு அழுகிறவன்னு நெனச்சுகிட்டயா உன் மனசிலே? மவராசன் ஊட்டுலே பிறந்திருக்கான்—அமோகமாய் கல்யாணம் நடக்கிறது, கொடுத்துவைத்த புண்ணியவான். நாளைக்குப் பார்த்துக்கிட்டே இரு அமக்களத்தை. உன்னைத்தான் பார்த்துப் பேசப்போறான் அவன்! ஜோராய்ப் பள்ளிக்கூடம் போவப்போறான்—உன்னைத் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டான் தெரிஞ்சுக்க—நானும் போவுது, கொளந்தைன்னு பொறுத்துப் பொறுத்துப் பார்க்கறேன். வழிக்கு வரதா இல்லே. அசட்டுப் பிசட்டுன்னு எதையாவது பேசிண்டு இருந்தீன்னா அப்பா முதுகுத் தோலை உரிசிப்புடுவாரு சாக்கிரதை! என்றாள் பொன்னுவை மிரட்டி.

இதை எல்லாம் பொன்னு கேட்டானோ இல்லையோ சந்தோஷத்தால் பங்களாவைப் பார்க்க எடுத்தான் ஓட்டம்.

பச்சைக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. வயிற்றில் உப்பும் புளியும் கரைக்க ஆரம்பித்து விட்டது—அவளும் பங்களாவைப் பார்க்க ஓடினாள்.

பங்களா வாசலில் நின்றிருந்தான் பொன்னு. பச்சை வருவதைப் பார்த்த முருகனும் அங்கு வந்தான்.

"பிடிச்சுக்க அந்தப் பயலை" என்றாள் பச்சை.

"என்ன இங்குவந்து சத்தம் போடறே?" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டான்.

"நான் ஒண்ணும் சத்தம் போட வரலே. இங்கே வந்துட்டுப் போ செத்தே" என்றாள் பச்சை தீர்மானமாக. வந்தான் முருகன்.

"இந்தா அந்த மொரட்டுப் பயலை பிடிச்சிக்கோ முதல்லே. அசட்டுப் பிசட்டுன்னு எதையோ உளறிகிட்டுக் கிடக்கு. ஐயா மவனோடே அதுக்கும் பள்ளிக்கூடம் போவணுமாம்; கேக்கணும்னு ஓடியாந்திருக்கு "என்றாள் பச்சை.

"ஆ......மாம்......பெரிய சமாசாரம் கொண்டு வந்துட்டயே போ"

"ஆமாம்! ஒனக்கு எல்லாம் விளையாட்டுதான். நீயும் அவன்போல்தான் இருக்கிறயே—முதலியார் காதிலே விளுந்தால் என்ன நினைச்சுக்குவாரு? நம்ம மானம் போவாது, நாம் சொல்லிக்கொடுத்துப் புள்ளேயே கேக்கச் சொன்னமுனு நெனச்சுக்குவாரா மாட்டாரா? நல்லா இருக்குமா உனக்கு?"

"அடீ யாண்டீ சத்தம் போடறே சும்மா?" அப்படி எல்லாம்மா செய்துடுவான்? இல்லை முதலியார்தான் கேட்கப்போறாரா? போ போ. ஊட்டைப் பார்க்க. எல்லாம் பார்த்துக்கறேன் நான்" என்று அவளைப் படி மடக்கிவிட்டுத் திரும்பினானே ஒழிய முருகனுக்கும் உள்ளுக்குள் எண்ணம் வேலை செய்யாமல் இல்லை, பச்சை கூறியதில் உண்மை இருப்பதை உணர்ந்தான்.

"வரவர ஒருத்தர் லக்ஷியமில்லாமே இம்மா திமரா இதுக்கு?" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு படி ஏறினான். பொன்னுவைப் பிடித்து ஒரு மரத்தடிக்கு இழுத்துவந்தான்.

"இருப்பது ஒட்டைச்சாண்! மட்டுமரியாதி இல்லாமயா திரியறே நீ? ஒருத்தர் பேச்சு லக்ஷியம் கிடையாது! பள்ளிக்கூடம் போவணுமாம்! பள்ளிக்கூடம். மோரக்கட்டையைப் பார் கொரங்கு மாதிரி!" என்று போ டான் முதுகில் நன்றாய்.

"வரவர ஆட்டமா காட்டறே? இரு சொல்றேன். உம், மரியாதியா ஊட்டுக்குப் போய் வாலைச் சுருட்டி வச்சிகிட்டு இருந்தியோ பொளச்சே! இந்தப் பக்கம் தலை காட்டினியோ பொளந்துவிடுவேன் மண்டையைப் பாத்துக்க" என்று கன்னத்தைப் பிடித்து இழைத்தான்.

பொன்னுவுக்குத் துக்கம் தாங்கவில்லை. விம்மி வெடித்துப்போனான். அவன் ஆசைக் கோட்டை எல்லாம் இடிந்து மண்ணோடு மண்ணாய் மடிந்தது. அழுதுகொண்டே குடிசையை நோக்கி நடந்தான்.

* * *

மறுநாள் பொழுது பலபலவென்று விடியம் முன்னரே பங்களாவில் பாண்டு வாத்தியமும், நாயனமும் முழங்க ஆரம்பித்துவிட்டன. வெளியூரிலிருந்து வந்தவரும், உள்ளூரிலிருந்து வந்தவரும் கலகலவென்று ஒரே கூட்டம். பலகாரங்களும், பணியாரங்களும் பலவிதம்.

முருகன் வீட்டிற்கும் பலகாரம் காபி கொடுத்துப் போட்டிருந்தார்கள்.

மல்லியும் கனகமும் பங்களாவிற்கு ஓடி ஓடிப் போய் பார்த்துவிட்டுப் பொன்னுவுக்கு ஏதோ சொல்லிக்கொண்டே இருந்தார்கள். தினம்போல் வேலாயுதம் பொன்னுவுக்கு ஆள்விடுவான் என்று



Retail Branches 285, China Bazaar. 71, Pondy Bazaar T. Nagar,
Agencies: Luz, Mylapore. No. 2, Neeli Veerasami Chetty Street, Triplicane, MADRAS.

எதிர்பார்த்தான். ஒன்றும் காணேம். பொன்னுவிற்குப் இது பெரிய ஏமாற்றமாய் இருந்தது. சரியாய் மணி ஒன்பதுக்கெல்லாம் குழந்தைகளுடன் பங்களாவில் இருக்கவேண்டுமென்று சொல்லிப்போனுன் முருகன்.

குழந்தைகள் துணிகளை நன்ருய்த் துவைத்து மடித்து வைத்திருந்தாள் பச்சை. எடுத்துப்போட்டுக்கொள்ளச் சொன்னுள். தானும் தலைவாரிப் பளிச்சென்று புடவை ஒன்றை உடுத்துக்கொண்டு குழந்தைகளுடன் பங்களாவுக்கு வந்தாள்.

பந்தல் வெகு விமரிசையாகச் சிங்காரம் செய்யப்பட்டிருந்தது. பந்தல் கொள்ளாமல் ஜனங்கள். கணகணவென்று ஒலித்துக்கொண்டு புரோகித கணங்கள்—வெற்றிலைபாக்கும், பழமும் பூவும், சர்க்கரையும் கற்கண்டுமாகத் தட்டுத் தட்டாய் வைத்திருந்தது. ஏழை பாழைகளுக்குத் தானமும் தருமமும் தக்ஷிணையும் ஒருபக்கம் வழங்கிக் கொண்டிருந்தார்கள். பந்தல் நடுவில் மணைபோடப்பட்டிருந்தது அதில் வேலாயுதம் ஜாஜ்வல்யமாய், பந்துக்கள் சூழப் பெருமிதத்தில் ஆழ்ந்திருந்தான். என்ன அமர்க்களமான அலங்காரம்! தலையில் சுருள் சுருளான கூந்தலை அழகாய் வாரிக் கொண்டைபோட்டு அலங்காரம்—அழகிய திலகம் நெற்றியில்—கழுத்தில் ஜ்வலிக்கும் வைரமாலைகளும் முத்துமாலைகளு அசைந்துகொண்டிருந்தன கைகளில் அழகிய வளைகள், காப்பு, கொலுசு, வைரமோதிரங்கள்! அதற்குத் தகுந்தபடி மகமல் சொக்காய்—அரையில் அழகிய பட்டு.

"பாத்தியாடா சின்ன எஜமான் இருக்கிற ஜோரை?" என்ருள் பச்சை பொன்னுவைப்பார்த்து. கனகமும் மல்லியும் ஒவ்வொரு இடமாகப் போய் எட்டி எட்டிப் பாத்துவிட்டு வந்துகொண்டிருந்தனர்.

பொன்னுவிற்கு மட்டும் ஒன்றும் ஓடவில்லை. தன்னை எப்படியாவது வேலாயுதம் பார்த்தால் போதும். பிறகு தன் எண்ணம் பலித்துவிடும் என்ற ஒரே ஒரு ஆசைதான். நன்ருய்த் தெரியும்படி அவன் எதிரில் வந்து நின்ருன், பொன்னு நின்றது நன்ருகத் தெரிந்தது. ஆனுலும் மாலையும் சமுத்துமாகப் பெரும் வைபோகத்தில் ஆழ்ந்த வேலாயுதம் பொன்னுவை எப்படிக் கவனிப்பான் என்பது அவன் உள்ளத்திற்கு எட்டவில்லை. பொழுது விடிந்தால் தினம் தன்னை வீட்டுவரையில் வந்து காத்துநின்று அழைத்தவன், இணைபிரியாது சேர்ந்து விளையாடியவன், அன்புடன் விளையாடியவன், இன்று தன்னை இப்படி மறந்துவிட்டானே? தன்னுல்ஒருகணம்அவனை அப்படி மறக்கமுடியவில்லையே! அவன் பணக்காரன் என்ரு? தான் ஏழை என்ரு? இதெல்லாம் ஒன்றுமே தோன்றவில்லை பொன்னுவுக்கு. இதெல்லாம் தெரியவும் இல்லை. அவன் நேசித்தது வேலாயுதத்தைத்தான். அவன் பணத்தை அல்ல, பங்களாவை அல்ல. பரந்த உலகத்துடன் கொடிய லௌகிகங்கள் அவனுடைய மாசில்லா உள்ளத்திற்கோ இளம்மூளைக்கோ எட்டவே இல்லை. வேலாயுதம் தன்னைப் பார்க்கவில்லை! பேசவில்லை! எதிரில் வந்து நின்ருலும் கவனிக்கவில்லை! அவன் புத்தியில் ஒன்றும் ஓடவில்லை. துக்கம் பொங்கிப் பொங்கி வந்தது. சோர்ந்துபோய் ஒரு மூலையில் சாய்ந்து கொண்டுவிட்டான்.



கலீர்! கலீர்! என்று முழங்கியது மங்கள வாத்தியங்கள். சுமங்கலிகள் பாடினர். அன்பர்சூழ வேலாயுதம் மணையில் உட்கார்ந்தான். புரோகிதரின் பேரிரைச்சல்! பந்தலில் ஒருவர்மேல் ஒருவர் முட்டிமோதிச் சண்டையுடன் எம்பி எம்பிப் பார்த்தார்கள்; எட்டி எட்டிப் பார்த்தார்கள். வேலாயுதத்திற்கு என்ன என்னவோ நடந்து கொண்டிருந்தது, மூலையில் நின்ற பொன்னுவுக்கு அசையவே பிடிக்கவில்லை. அவன் யோசனைகள் எங்கே எல்லாமோ அலைந்து திரிந்துகொண்டிருந்தன. "நேற்று அவனும் நீயும் ஒன்றாகுமாடா? நாளைக்குப்பார்" என்று பச்சை சொன்ன வார்த்தைகளின் பொருள் இன்னும் விளங்கவில்லை அவன் இளம் உள்ளத்திற்கு வேலாயுதம் தன்னை மறந்துவிட்டான்! ஏன்! இதுதான் புத்திக்கு எட்டியது. உள்ளம் துடித்துத் துக்கம் குமுறிக் கொண்டு வந்தது. அவனால் தடுக்கவே முடியவில்லை. கண்ணீர் தாரைதாரையாகப் பெருகிக் கொண்டிருந்ததே ஒழிய அவன் நினைவு எங்கே எல்லாமோ சென்றுகொண்டிருந்தது.

திடீரென்று கிளம்பிய முருகனுடைய சத்தம் தான் பொன்னுவைச் சுய நினைவுக்கு அழைத்து வந்தது. சுற்றிலும் இருந்த ஜனத்திரள் மலை போல் நகருவது தெரிந்தது. முருகன் பொன்னுவின் கையைப் பிடித்து அழைத்துச் சென்றான்.

சீர் வரிசையுடன் ஒரு கோஷ்டி, வாத்தியங்கள் ஒரு கோஷ்டி! பந்துக்கள் ஒரு கோஷ்டி! சிங்காரித்த மோட்டார்வண்டியில் வேலாயுதம்! அதற்குப் பின்னால் பெண்டுகள் கூட்டம்—பெரிய ஊர்வலம்கிளம்பி இருந்தது மோட்டாருக்குள் தனக்கு எதிரில் நிற்கும் வேலாயுதத்தைப் பார்த்துக் கொண்டு நின்றான் பொன்னு. முருகன் கையை இழுத்துக்கொண்டு மோட்டார் அருகில்போய் நின்றான்—வேலாயுதம் என்னை மறந்துவிட்டாயா? என்று கேட்டுவிட வேண்டும்போல் இருந்தது. அவன் உள்ளத்துடிப்பு அடுத்த கணம் முருகன் கையைப்பற்றி இழுப்பது ஞாபகம்வந்தது. வேலாயுதத்தைப் பார்த்து, கை ஜாடை காட்டினான். ஜாடையாவது? மாடையாவது? இதை எல்லாமா கவனிக்கப்போகிறான் மகாராஜன் மகன்? பொன்னுவின் கடைசி ஆசையும் தரைமட்டத்திற்கு வந்துவிட்டது. அவனைச் சுற்றிலும் சூழ்ந்துநின்றது பயங்கர இருள்.

"உம்...... பிடிடா கெட்டியா! போவணும் சின்ன எசமானோடே" என்று ஒரு பையை அவன் கையில் கொடுத்தான் முருகன். முருகன் குரலில் மிகவும் கடுமையான அதிகாரமும் மிரட்டலும் தொனித்தன.

பொன்னுவின் துக்கமடை உடைந்தது. அழுகை நெஞ்சைப் பீரிட்டுக்கொண்டு வந்தது வாய் திறந்து ஒன்றும் பேசமுடியவில்லை. பேசவும் தைரியம் இல்லை. கையிலிருந்த பையைப் 'படேர்' என்று கீழே போட்டுவிட்டான். ஊர்வலமாய் மோட்டார் புறப்பட்டுத் தெருவை அடையும் சமயம் பின்னால் ஓரிரண்டுபேர்தான் பாக்கி.

பொன்னு பையைக் கீழே போட்டதும் முருகனுக்குப் பிரமாத கோபம் வந்துவிட்டது. தபீர் தபீர் என்று விழும் அடியிலிருந்து பொன்னு எழுந்திருக்கப் போகிறானோ இல்லையோ என்று சந்தேகமாய் இருந்தது.

"உம்...... கண்ணும் கண்ணீருமா! என்னடா அபசகுனம்போலே! முருகா! உனக்குத் தெரிய வாண்டாம் இவ்வளவு?" என்று சொல்லிக் கொண்டே திரும்பிப் பார்க்காமலே அதிகாரம் செய்துகொண்டு போனார் முதலியார்.

அவரும் அப்படிப் போகிறாரே? எப்படித்தான் இருக்கும் பொன்னுவுக்கு? செல்வங்கள் சூழ அவருடையமுதல் குழந்தை பள்ளிக்கூடம் போகிறான்! பள்ளிக்கூடம் போகவேண்டுமென்று உயிரைவிடும் முருகனுடைய முதல் குழந்தை உள்ளம் துடித்து விம்மிவெடிக்கிறது! இதைக் கேட்பார் இல்லை! பார்ப்பார் இல்லை! உலகத்தில் எவ்வளவோ முதல் குழந்தைகள்! யாரைப்பற்றி யார் கவலைப்பட்டு உயிரை விடப்போகிறார்கள்? ●


## பம்பாய் & சுற்றுவட்டார நேயர்களுக்கு.

எங்கள் பம்பாய் ஏஜண்ட்ஸ்:

**ஹேமலதா நியூஸ் ஏஜன்ஸீஸ்,**
4/3 மாணிக் ஆஸ்ரமம்,
காமா ரோடு, அந்தேரி, பம்பாய்.

இவர்கள் உங்களுடைய வீட்டிலேயே "**காவேரி**" பிரதிகள் கிடைக்கச் செய்வார்கள்.
உடனே தேவைக்கு தபாலிலோ, நேரிலோ விண்ணப்பம் செய்யுங்கள்.

சந்தா வருஷம் 1-க்கு ரூ. 6 சந்தா ஆறு மாதத்திற்கு ரூ. 3

# முறுகலான ஜவ்வரிசி அப்பளங்கள்







## சுலபமான வழி இதோ:

ஜவ்வரிசியை நிர்மலமாகவும் கெட்டியாகவும் கூழாய் காய்ச்சு. அம்மியில் மிருதுவான பசைபோல் அரைத்து, உப்பு, ஓமம், ஜீரகம் சேர்க்கவும். சுத்தமான துணியின்மேல் மெல்லிய வட்டங்களாக தட்டு. காய்ந்தபின் அப்பளங்களை துணியிலிருந்து நீக்கவும். வேண்டும்பொழுது டால்டாவில், உப்பி வெண்மையாக சிவக்காமல் பொரிக்கவும்.

இதை வாங்காமல் இராதே!
புது டால்டா சமையல் புத்தகம்.—ஆங்கிலத்தில்—சித்திரங்கள் நிறைந்தது—ஆர்ட் காகிதம்—80 பக்கங்கள்—300 சமையல் வகைகள்—தேகசுகம், சுகாதாரம், சமையலறை பற்றிய குறிப்புகள்—ஒருரூபாய்தான், தபால் செலவு 8 அணா தனி.





தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால்பெட்டி நெ. 353, பம்பாய் 1

# டால்டாவில் பொரித்தவை

உங்கள் தித்திப்பு பண்டங்களையும் உணவுகளையும் ருசியாக செய்ய டால்டாவில் தயாரிக்கவும். டால்டா ஒரு சுத்தமான, ஊட்டமளிக்கும் கொழுப்பு. எல்லாவித சமையலுக்கும் உகந்தது.

அது கைகள் படாதது. சீல் செய்த டின்களில் விற்பனையாகின்றது.





HVM. 146-172 TM

# மாவலிப் பொறிகள்

*ராமய்யா*

**கோ**சம்வர்த்தனத்தை விருத்தி செய்வதற்காக ஒரு புதிய மசோதா அமுலிலிருப்பதைக் கவனித்திருப்பீர்கள். அந்த மசோதாவின் கர்த்தா ஸ்ரீமான் முன்ஷி. பால் கொடுக்கும் கால்நடை ஜந்துக்கள்—அதாவது பசு மாடுகளும், எருமை மாடுகளும்—நமது தேசத்தில் நல்ல போஷாக்கில் இல்லாததால், உணவு மந்திரியான முன்ஷி தமது கச்சத்தை யிழுத்துக்கட்டிக்கொண்டு "இந்த மசோதாவை உடனுக்குடனே சட்டமாக்கவேண்டும், அப்படிச் செய்துவிட்டால் அடுத்த தினத்திலிருந்து பசுக்களும், எருமைகளும் இருஷபங்களபோல் ஆகிவிடலாம். நமது தேசம் முழுதும் கோசாலைகளும், கோசாதனங்களும பெருகிவிடும், நாடெங்கும் பாலாய்ப் பெருகிவிடும்," என்று மாரைத் தட்டிக்கொட்டிச் சொன்னாராம்! தற்காலத்தில், நமது நாட்டில் அதுவும் தமிழ்நாட்டில் — பசுமாடுகள், கழுநீருக்குப் பதிலாகச் சாக்கடை ஜலத்தையும, பச்சைப் புல்லுக்குப் பதிலாக வைக்கோலையும், காகிதத்தையும், வெறும் குப்பையையும் தின்றுவிட்டு, சுண்ணும்புநீர் மாதிரி பால் கொடுக்கின்றன. அதுபோலவே நமது கவர்ன்மெண்டை நடத்தும் மந்திரிகள் மசோதாக்களையும் சட்டங்களையும் அமுலுக்குக் கொண்டுவந்து, அவைகளின் மூலம் நம்மைத் திருப்திபடும்படி செய்கிறார்கள். அவர்களுக்கோ வெட்கம் கிடையாது; நமக்கோ ரோஷம் கிடையாது!

கால்நடைப் பிராணிகளைப் போஷிப்பதில், மந்திரி முன்ஷிக்கு எவ்வளவு ஊக்கமுண்டோ அதைக் காட்டிலும் நூறு பங்கு ஊக்கம் பொதுமக்களுக்கு உண்டு என்பதை முதலாக அவர் அறியவேண்டும். போஷித்தலுக்கு வேண்டிய வசதிகள் அவர்களுககு இல்லாததால்தான் அப்படிச் செய்யவில்லை யென்பதும் அவர் தெரிந்துகொளளவேண்டும். கோசம்வர்த்தன மசோதாவும், கோசாலை மசோதாவும் வெறும் படாடோபப் பேச்சு, அதிகப் பிரசங்கம். வெறுங்கை முழம்போடுமா? கால்நடை ஜந்துக்களுக்கு வேண்டிய தீனி வஸ்துக்கள் கிடைக்காமல் இருப்பதால் அல்லவோ தற்காலத்தில் அவைகளுடைய போஷாக்கு வெகு க்ஷீணதிசையிலிருக்கிறது ஜனங்களுக்கு அவைகள் மீது அபிமானக் குறைவினுலா? அவைகளை வைத்துப் போஷித்தால் அபரிமிதமான நலம் ஏற்படும் என்பது ஜனங்களுக்குத் தெரியாதா? முன்ஷி சொல்லித்தானு தெரியவேண்டும்? தமிழ்நாட்டைப் பொருந்தியவரை, ஒரு ஜதை எருமை மாடுகளோ அல்லது ஒரு ஜதை பசு மாடுகளோ வைத்துக்கொண்டு, தீனி போட்டு, பால் கறந்து, அந்தப்பாலை விற்ருே அல்லது அதிலிருந்து வெண்ணெயை யெடுத்து நெய்யாக்கி விற்ருே, ஒரு குடும்பத்தை நடத்தியகாலம் சமீப காலமாகவே இருந்தது. அப்படிச் செய்வதற்கு வேண்டிய பொருள்களும் வசதிகளும் ஏராளமாகக் கிடைத்திருந்தன. இப்பொழுது எல்லாம் சூன்யமாகப் போய்விட்டது. ஆகவே கிராமங்களில் மாடுகன்றுகள் வைத்திருந்தவர்களெல்லோரும் அவைகளைப் பரிக்கமுடியாமல் விற்றுவிடுகிருர்கள். பட்டணங்களில் நல்ல அந்தஸ்துள்ளவர்கள் மாத்திரமே, பசுக்களையும் எருமைகளையும் சொந்த உபயோகத்துக்கு வைத்துக்கொள்ளுகிருர்கள். பால் வியாபாரம் செய்கிறவர்கள் மாடுகன்றுகளை வைத்திருக்கிருர்கள்; ஆனுல் அந்த ஜந்துக்களுக்குச் சரியான தீனி போட்டுப் போஷிக்க முடியாததாலும், அப்படிச் செய்வதில் கட்டிவராதபடியாலும், ஜந்துக்கள் தினே தினே க்ஷீணமாய்க்கொண்டே வருகின்றன. சில வருஷங்களுக்குமுன் மேய்ச்சலுக்குப் போகும் பசுக்களும், எருமைகளும் போகும்போது பூமியைப் பார்த்துக்கொண்டு போவது வழக்கம்; ஏனென்ருல் புல்பூண்டு இலை, தழை தட்டினுல் தின்பதற்கு; வரும்போது நேராகப் பார்த்துக்கொண்டு வரும்; ஏனென்ருல் வயிறுபுடைக்கத் தின்றுவிட்டதால், வீடு வந்துசேர்ந்து கனறைப் பார்க்கவேண்டுமே என்கிற ஆசை: ஆனுல் இபபொழுது என்ன செய்கின்றன? சதாசர்வகாலம ஆகாசத்தையே பார்த்து நடக்கின்றன? ஏனென்ருல் அசைபோடவுங்கூடப் பூமியில் ஒன்றும் கிடையாது. ஆகாசத்தைப் பார்த்தால் எங்கேயாவது மப்புமேகம் கண்ணுக்குத் தென்படுமோ என்கிற ஆசைதான்!

தவிடு என்கிற வஸ்து தற்காலத்தில் கிடையாது. உமியையும் சேர்த்த தூள்தான்

கிடைக்கிறது. அதைத் தின்னும் மாடுகளுக்குக் குடல்கள் அறுந்துபோகின்றன. கழுநீர் என்கிற வார்த்தையை வெகு வீடுகளில் மறந்தே போய்விட்டனர். ரேஷன் அரிசியைக் கழுவினால் செக்கச்செவேல் என்ற துர்வாசனை ஜலம்தான் கிடைக்கிறது. மாடுகளுக்குக் கழுநீர்ப் பானை யொன்று ஒவ்வொரு வீட்டிலும் இருந்தகாலம், மறந்த காலமாய்ப் போய்விட்டது. எள்ளுப்புண்ணாக்கு விற்ற செக்குமரங்களெல்லாம திவாலாய்ப் போய்விட்டன. எண்ணெய் மில்களில் எள்ளுப்புண்ணாக்கு என்று கொடுக்கப்படும் வஸ்து, கலப்படப் புண்ணாக்காகத்தான் இருக்கிறது. செக்கு மரத்திலிருந்து கிடைத்த புண்ணாக்கில் நல்ல எண்ணெய்ப் பசையிருந்தது; இப்பொழுது கிடைக்கும் மில் புண்ணாக்கில் எண்ணெய் வாசனையுங் கூடக் கிடையாது; மரக்கட்டைமாதிரியும், பாராங்கல்மாதிரியும் இருக்கிறது; கையால் உடைத்துப்போட முடியாது, வெட்டிரும்பு கொண்டுதான் வெட்டவேண்டும். பருத்திக் கொட்டை ஒருமாதம் கிடைத்தால் நான்கு மாதம் கிடைப்பதில்லை. விலையோ, கேட்டவுடன் விழிகள் பிதுங்கிவிடுகின்றன. நொய் என்பது ரூபாய்க்கு $2\frac{1}{4}$ அல்லது $2\frac{1}{2}$ படி. வைக்கோல் ரூபாய்க்கு மூன்று புரி; அதுவும் கிணற்றுக்குப்போடும தாம்புக்கயிறுமாதிரி இருக்கும் புரிதான். புண்ணாக்கு மணங்கு ஒன்றுக்கு ரூபாய் 5 அல்லது $5\frac{1}{2}$. கேவலம் வரட்டு வரட்டாயிருக்கும் துவரம்பொட்டு ரூபாய்க்கு 10 படி கிடைக்கிறது. விலைகள் இப்படியிருக்க, வஸ்துக்களாவது ஏராளமாய்க் கிடைக்கின்றனவா? அதுவும் கிடையாது.

சென்னப்பட்டணத்தைப்பற்றிப் பேசுவோம். ஒவ்வொரு முனிசிபல் டிவிஷனிலும் கடைகளும் மார்க்கட்டுகளும் இருக்கின்றனவேயொழிய, மாடுகளுக்கு வேண்டிய தீனி வஸ்துக்களின் விலையும், சரக்கின்ரீதியும் ஒழுங்காயிரா. கால்நடை ஜந்துக்களுக்குத் தீனி சேகரிப்பதென்றால் பெரிய கிடங்குகள் வேண்டுமல்லவா? முனிசிபல் டிவிஷன்களில் பெரிய கிடங்குகளை வாடகை கொடுத்து எடுத்துச் சேமிப்பதற்குக் கட்டிவராது. ஆகையால் வியாபாரிகளிடத்தில் எட்டு, பத்து மூட்டைகள்தான் ஸ்டாக் இருக்கின்றன. டிமாண்டு அதிகமாகவும், ஸப்ளை குறைவாகவும் இருப்பதால் வியாபாரிகளின் தலைகள் தம்பிடியாய் ஆடுகின்றன. அவர்கள் இட்டது சட்டம். அவர்கள் சொற்படி கேட்கவேண்டும். இல்லாவிடில் கேட்ட போது வஸ்துக்கள் கிடைக்கா. ஆகவே கொத்தவால்சாவடி ஆசாரப்பன் தெருவுக்குப்போய்த்தான் பொட்டு, நொய், பருத்திக் கொட்டை இவைகள் வாங்கிவரவேண்டும். அங்குப் போய்விட்டுத் திரும்பி வருபவன் தீரன், சூரனாகத்தானிருக்கவேண்டும். வண்டியில் போக முடியாது. நடந்துதான் செல்ல வேண்டும். ஆசாரப்பன் தெருவுக்குள் நுழைந்துவிட்டால் நமது உடல் நமது அல்ல; அடிபடும், இடிபடும், குத்துப்படும், வண்டி மை உடல் முழுதும் ஆகும். பொடிபோட்டு மூக்கைச் சிந்துபவன் நமது சொக்காயின்மேல் தடவுவான். தேட்டை போடுபவன் நம்மைத் தாக்குவான். கடைசியில் கிடங்குக்குப் போய்ச் சேர்ந்தால், சரக்கை விற்கும் வியாபாரி நம்மை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, பேப்பர் படித்துக்கொண்டிருப்பான். இந்தக் காலத்தில் அதுதானே சகஜம். வெற்றிலைபாக்கு பீடி கடைக்காரன் முதல் பெரிய ஷாப் முதலாளிவரையில் எவனாவது வியாபாரம் செய்ய வந்தவனை லக்ஷியம் செய்கிறானா? வாங்கினால் வாங்கு, வாங்காமற்போனால் போ, அது உன் கர்மம்! என்னிடத்தில் உள்ள சரக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் விற்றுப்போய் விடும். உன்னை நான் ஏன் மரியாதையுடன் கவனிக்கவேண்டும்? என்பதல்லவோ வியாபாரிகளின் தற்கால தத்துவம்! பரிஸ்திதி இப்படி யிருக்கும்போது, பசு என்பது சிரேஷ்டமான ஜந்துவாயிற்றே, அதன் போஷாக்கில் நாம் ஈடுபடவேண்டுமே, என்கிற கொள்கை எப்படி நிலைநிற்கும்! அது கெட்டது, சனியன். அதை வைத்துக் கொண்டு இந்தப்படி தினே தினே யார் மாரடித்துக்கொள்ளுவது? கொடுத்த பால் கொடுக்கட்டும், ஏதோ கால்வீசை வறட்டுப் புண்ணாக்கையும், ஒரு புரி வைக்கோலையும் தினம் போட்டுவிட்டு, அகப்பட்டவரை பாலைக் கறந்துகொள்ளுவோம்! மாடு நோய்ஞ்சலாகப் போய்விடுகிறதே யென்கிற கவலைப்பட்டு என்ன பிரயோஜனம்! என்றல்லவோ தோன்றிவிடுகிறது! நமது புராதன தத்துவங்களைத் தலைகாக்கவேண்டி எவ்வளவுதான் சிரமப்பட முடியும்?

சர்க்கார் காரியத்தில் ஈடுபட்ட மந்திரிகள் பொதுஜனங்களுடைய கஷ்டங்களைச் சரிவரக் கவனித்து, அவைகளை முற்றிலும் தீர்த்து வைக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்தால் அவர்களை நாம் மெச்சிக்கொள்ளலாம். டில்லியில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு வெட்டிப் பிரசாரத்துக்காக வேண்டிய மசோதாக்களைப் பிரேரேபித்துக்கொண்டிருந்தால் எப்படி மெச்சிக்கொள்ளுவது? சீ! இவ்வளவு

தானு உன்னுடைய சாமர்த்தியமும்; சூரத்துவமும் என்றுதான் சொல்லவேண்டும்!

கோசம்வர்த்தனம் கோரக்ஷணை என்கிற விஷயத்தை ஆதிமுதல் அந்தம் வரையில் கவனிக்கவேண்டும். அதற்கு யோக்கியதை இல்லாத சர்க்கார் அந்தப் பேச்சையே யெடுக்கக்கூடாது. இதைப்பற்றி எழுதுவ தென்ருல் ஒரு புஸ்தகம் எழுதலாம்; ஆனுல் இங்கே சந்தர்ப்பமுமில்லை, இடமுமில்லை. சுருக்கமாகக் கவனிப்போம்.

பசுக்களையும், எருமைகளையும் வாங்கி, போஷித்து, விருத்தி செய்வதில் பொதுமக்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஏற்படுத்த வேண்டும். மாட்டுச் சந்தைகளைப் பெருக்க வேண்டும். சந்தைகளில் மாடுகளின் விலைகளை ஒரு ரீதிக்குக் கொணரவேண்டும். கால்நடை இலாகா அதிகாரிகள் இதில் சிரத்தை யெடுக்கவேண்டும். சென்னையில் திருவொற்றியூர்ச் சந்தையிலும் பல்லாவரம் சந்தையிலும மாடுவாங்கப போவதென்ருல் பகீர் பகீர் என்கிறது. என்ன பேரம், என்ன தரகு, எவ்வளவு ஏமாற்றல்! பசுமாட்டின் பெயரை யெடுத்தாலே வெறுப்புக் கொள்ளும்படி ஆய்விடுகிறது. வெடரினரி டிபார்ட்மெண்டு என்று ஒரு இலாகா இருக்கிறதே! அதில் உள்ள உத்தியோகஸ்தர்கள் ஏன் இந்த விஷயத்தில் கவனத்தைச் செலுத்தக்கூடாது? ஆடு மாடுகளுக்குப் புண்வந்தால் சிகிச்சை செய்வதற்கு மாத்திரமல்லவோ இவர்கள் ஏற்பட்டுள்ளார்கள்? ஆடுமாடுகளின் அபிவிருத்தியிலும், சீர்திருத்தலிலும் இவர்களுடைய சிரத்தையைச் செலுத்தலாகாதா?

கால்நடை ஜந்துக்களுக்கு வேண்டிய தீனி வஸ்துக்களைச் சேமிப்பதிலும், சரிவர வினியோகித்தலிலும், சர்க்கார் நடவடிக்கைகள் நடத்தவேண்டும். கிடங்குகள் கட்டி, தவிடு, பொட்டு, பருத்திக்கொட்டை, புண்ணுக்கு, வைக்கோல் இவைகளைச் சேகரித்து, சரியான விலைக்கு விற்கவேண்டும். அரிசி ரேஷன் மக்களுக்கு எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் கால்நடைத் தீனியும்.

புண்ணுக்கில் கலப்படம் இல்லாமல் பாதுகாக்கவேண்டும்.

வைக்கோல் சுமைகள் ஒரு ரீதிக்கு இருக்குமாறு ஏற்பாடு செய்து, ஒவ்வொரு ஊரிலும் வைக்கோல் சப்ளை ஏமாற்றலில்லாமல் நடந்துவரும்படி சில வருஷங்களுக்குக் கவர்ன்மெண்டு அதிகாரிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வெடரினரி டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்கள் வீட்டுக்கு வீடாகச்சென்று, உள்ள பசுக்கள, எருமைகள் எல்லாவற்றுக்கும் வேண்டிய சிகிச்சைகள் செய்யவேண்டும். நல்ல பசுக்களை நம்முடைய நாட்டிலிருந்து அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவொட்டாமல் தடுக்கவேண்டும. நம்முடைய நாட்டிலுள்ள பசுக்களுக்கும் எருமைகளுக்கும் புஷ்டிவிருத்தியும் வம்சவிருத்தியும் ஏற்படும்படி செய்யவேண்டிய சடங்குகளை விருத்தி செய்யவேண்டும.

இந்தமாதிரியான நடவடிக்கைகள் எடுக்காமல், கோசாலைகளைமாத்திரம் கட்டிவிட்டு, பசு எருமை விற்பனையில் வரி விதித்து, பணத்தை வசூல் செய்தால், கவர்மெண்டாருக்கு விபரீதமான கெட்ட பெயர்தான்வரும். நம்மைக் கண்டு அயல்நாட்டு மக்கள் சிரிப்பார்கள்.

பசுவை ஒரு தேவதையாகக் கருதினுல்மாத்திரம் போதுமா? வெள்ளிக்கிழமையன்று அதைக் குளிப்பாட்டி, மஞ்சள் குங்குமம் பூசினுல் போதுமா? கோசாலையில்வைத்துச் சூடம ஏற்றினுல் போதுமா? அதின் கோமயத்தைக் கையிலேந்தி, தலையில் தெளித்துக் கொண்டால் அதற்குத் திருப்தியாகிவிடுமா? அதனுடைய சாணியைக் கையிலெடுத்துக் கரைத்து வீதியில்தெளித்தமாத்திரத்தில் பசுவுக்கு ஆத்துமத் திருப்தி உண்டாய் விடுமா? மனிதனுக்குள்ள ஆசையும், அகம்பாவமும், அல்ப புத்தியும் பசுவுக்கு இருந்தால் அது திருப்திப்படும். அப்படி இல்லையே. வயிறுபுடைக்கத் தீனிபோட்டால் மடி நிறைந்து பால் கொடுக்கும். அதுதான் சரியான கோசம்ரக்ஷணம. பாக்கியெல்லாம் போலி கோசம்ரக்ஷணம்தான்.

* * *

பம்பாயில் ஸ்ரீமான் வீ. எல். மேத்தா என்னும் மந்திரியை, நான்கு காலாடிப்பயல்கள் கட்டிப்பிடித்து, அவரிடமிருந்த தங்கப் பொத்தான்களை எடுத்து ஓடிவிட்டனராம். இந்தச் சம்பவம் நடந்தது ஆந்தேரி என்கிற ஒரு கிராமத்திலாம. அதே கிராமத்தில் அதற்குமுன் நான்கு ஐந்து ஆட்களுக்கு இந்தப பிரயோகம் கிடைத்ததாம். ஆனுல் பத்திரிகைகளில் பிரசுரிக்கவில்லை; போலீசாரும் பிரமாதமான நடவடிக்கையெடுக்கவில்லை என்று வதந்தி. சாமான்யமானவன் ஒருவன் அபகரிக்கப்பட்டால் அது ஒரு குறிப்பிடத்தக்கதான விஷயமல்லவே! பம்பாய் கவர்ன்மெண்ட் அதிகாரியான மினிஸ்டர் என்ருலல்லவோ குறிப்பிடநேர்ந்தது?

ஒரு பிரபலமான பத்திரிகையின் ஆசிரியர் சொன்னதுபோல் "ஒருநாய் ஒரு மனிதனைக் கடித்தது என்றால் அது ஒன்றும் விசேஷமான சம்பவம் அல்லவே. ஒரு மனிதன் ஒரு நாயைக் கடித்தான் என்றாலோ வெகு விசேஷமான சம்பவம். உடனே பத்திரிகையில் பிரசுரிக்கவேண்டும்."

அதே பம்பாயில் இன்னுமொரு மினிஸ்டருக்குப் போதாதகாலம் என்று தெரிகிறது. ஜி. டி. வர்தக் என்பவரின் வீட்டுக்குள் திருடர்கள் புகுந்து பவுண்டன்பேனாவையும் தங்கப் பொத்தான்களையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்களாம்!

இரண்டு மந்திரிகளுக்கும் நஷ்டம் விளைந்தது தங்கப் பொத்தான்களால் தானல்லவா? பம்பாய்க்காரர்கள் எல்லோருக்கும் பொத்தான்கள் தங்கம், வைரம் இவைகளால் செய்யப்பட்டவைகளாயிருக்கவேண்டும் போலிருக்கிறது! இந்த ஜம்பம் வெகு வருஷங்களாய் நாம் பார்த்திருக்கிறோமல்லவா?

மலையாளத்தில் நம்பூதிரி ஜன்மிகள் ஜரிகை போட்ட கௌபீனங்கள்தான் கட்டுவார்கள். வெட்டி ஜம்பம் என்பதற்கு விவஸ்தையே கிடையாது!

* * *

ஜம்பத்தில் ஒரு புதிய ஜம்பம் சமீபகாலமாகத் தலைதூக்கியிருக்கிறது. பணமுள்ளவர்கள் அநேகர் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் போகிறார்களல்லவா? அவர்கள் போகும்போது அவர்களுடைய உற்றார் உறவினர்களுக்கு அது விசேஷ சம்பவமாக ஏற்படலாம். அந்தச் சம்பவத்தை உத்தேசித்து அவர்களுக்கு விருந்துகள் நடக்கலாம்; டீபார்ட்டிகள் நடக்கலாம். வெளியூரிலுள்ள நண்பர்கள் அநேகர் அதை ஒரு குறிப்பிடத் தகுந்த சம்பவமாகவும் எண்ணலாம். ஆனால் பொதுமக்களுக்கு அத்தகைய சம்பவங்களில் என்ன சிரத்தை? ஆயினும் தினந்தோறும் பத்திரிகைகளில், வெளிநாடுகளுக்குப் போகும் ஆட்களின் போட்டோக்களும், அவர்களைக் குறித்து மெய்ப்பு வாசகங்களும் வெளிவருகின்றன! ஒவ்வொருநாளும் புட்டுக்கூடை புட்டுக்கூடையாக ஆட்கள் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் போய் வந்துகொண்டிருக்கிறார்கள். பணமிருந்தால் எவரும் போகலாம். அப்படிப் போய்வந்ததினால் தேசம் பிரமாதமாகச் சுபிக்ஷம் ஆய்விடக்காணோம்! பஞ்சம் இருக்கத்தான் இருக்கிறது; பிணியும் இருக்கிறது; பிளாக் மார்க்கட்டும் செழிப்பாயிருக்கிறது. பின்னே ஏன் இவர்களெல்லாரும் மாரைத்தட்டிக்கொண்டு பிரசுரம் செய்கிறார்களோ தெரியவில்லை. அடுத்தமுறை நான் மதராஸிலிருந்து கும்பகோணத்துக்கு வரும்போது, என் போட்டோவையனுப்பி, பத்திரிகைகளிலே பிரசுரம் பண்ணலாமென்று உத்தேசித்திருக்கிறேன். ஆனால் அதற்கு வேண்டி இருபது முப்பது ரூபாய் செலவாகுமே என்றுதான் யோசனைசெய்கிறேன்!




( ராகமாலிகை தொடர்ச்சி )

# ஸ்ரீ ஸ்துதி

புதுச்சேரி தியாகப்ரும்ம மியூஸிக் அகாடமி பிரின்ஸிபால் ஸங்கீத வித்வான் (கல்கத்தா) A. K. ராகவாச்சாரியாரால் வர்ணமெட்டு அமைக்கப்பட்டது.

धत्ते शोभां हरिमरतके तावकी मूर्तिराद्या
तन्वी तुङ्गस्तनभरनता तप्तजाम्बूनदाभा ।
यस्यां गच्छन्त्युदयविलयैर्नित्यमानन्दसिन्धौ
इच्छावेगोल्लसितलहरीविभ्रमं व्यक्तयस्ते ॥

தத்தே சோபாம் ஹரி மரதகே தாவகீ மூர்த்தி ராத்யா
தந்வீ துங்க ஸ்தந பரநதா தப்த ஜாம்பூந தாபா |
யஸ்யாம் கச்சந்த்யுதய விலயைர் நித்யமாநந்த ஸிந்தெள
இச்சாவே கோல்லஸித லஹரீ விப்ரமம் வ்யக்தயஸ்தே || (11)

**உசேனி** **ஆதி 2 களை**

| லகு | த்ருதம் | த்ருதம் |
|---|---|---|
| ·ரி ம் க் ·ரி ஸ்ா ; ; ; நீ ; ஸ் ·ரி க் ·ரி நி ஸ் ·ரி ஸ் நி த பா நி த தா, ம | ; ப ம பா ஸ்ா ·ரி ஸ் நித ப நி த ப ம க ம க ப ம த ப மா, க க ரி ரீ | |
| த த்தே சோ பாம் | ஹ . ரி . ம ர த கே | |
| கா ம க மா ப ம பா த ப மா கா ரீ ; ரி க ம ப கா ரீ ரீ கா | ஸா ரீ கா மா ரீ கா ரீ, க | ஸா ; நீ தா நீ ; ஸா ; |
| தா வ கீ | மூ . ர்த்தி ரா | த்யா |
| ஸா ; பா ; ப ஸ் நீ நி த த ம பா, ஸ் நீ நி த தா நி ஸ்ா நி ஸ்ா ; | ; ஸ்ா ·ரீ ஸ்ா ·ரி ம் க் ·ரி ஸ்ா ; | நீ ; ரி ஸ் நி த பா, நி த தா ம |
| தந் வீ து ங்க | ஸ்த ந ப ர | ந தா |
| பா ; ஸ்ா ; ; ; நீ ; ரி ஸ் நி த பா ; ; ; த ப ப ம | மா பா, த நீ பா ; நி தா ப | கா மா ப கா ரி ரீ ; ரி க ஸா |
| தப் த ஜா ம்பூ | ந | தா பா |

### மத்யம கால நடை

| | | |
|---|---|---|
| ஸா ; பா மா பா நீ தா மா பா நீ தா நீ ஸ்ா நீ ஸர் ; | பா ; ·ரீ ·ரீ ஸ்ா நீ தா பா | ம பா ம ப ஸ் நீ நி தா ம மா ; |
| ய ஸ்யாம் க ச்சந் த்யு த ய வி ல யைர் | நி த்ய மா ந ந் த | ஸி ந்தெள |
| பா ; ஸர் ; நீ தா பா மா பா ஸர் நீ ஸர் பா தா பா ; | ஸ்ா ; பா மா பா மா கா ரீ | ஸா ; , ; பா ; ஸ்ா நீ |
| இ ச்சா வே கோ ல்லஸி த ல ஹ ரீ | வி ப்ர ம ம் வ்ய | க்த ய ஸ்தே |

### ஸ்வர ஜதி

| | | |
|---|---|---|
| ஸ்ா ; ; நீ தா பா ; மா கா மா பா மா ; கா ரீ நீ | ஸா ; ; ; ; ஸா ஸா | பா மா ; பா நீ தா ; நீ |
| ஸா நீ தா பா மா கா மா த திம் தஜணு | தாம் த க | த ஜம் பா நீ தா நீ |
| ஸ்ா நீ ஸ்ா ·ரீ ; நீ ஸ்ா ·ரீ நீ ·ரீ ஸ்ா நீ தா பா மா பா | ஸ் நி ஸ்ா பா பா தா மா பா மா | கா ரீ ஸா ; பா நீ தா நீ |
| ஸ்ா நீ ஸ்ா ·ரீ நீ ஸ்ா ·ரீ திமித ரி கி ட த க | த ஜம் பா தா மா பா மா | த த ஜம் பா நீ தா நீ |

आसंसारं विततमखिलं वाङ्मयं यद्विभूतिः
यद्भ्रूभङ्गात् कुसुमधनुषः किङ्करो मेरुधन्वा ।
यस्यां नित्यं नयनशतकैरेकलक्ष्यो महेन्द्रः
पद्मे तासां परिणतिरसौ भावलेशैस्त्वदीयैः ॥

ஆஸம்ஸாரம் விததமகிலம் வாங்மயம் யத்விபூதி :
யத்ப்ரூபங்காத் குஸுமதநுஷ : கிங்கரோ மேருதந்வா |
யஸ்யாம் நித்யம் நயநசதகை : ஏகலக்ஷ்யோ மஹேந்த்ர :
பத்மேதாஸாம் பரிணதிரஸௌ பாவலேசைஸ் த்வதீயை:||(12)

**ஜயந்தஸேனு** — **ஆதி 2 கலை**

| லகு | த்ருதம் | த்ருதம் |
| --- | --- | --- |
| ஸா ; ; ; ஸ் நி நி த தா ; ஸா ; ; ; த ஸ் நி நி த த ப ப | ம க கா ஸா ; கா ; மா ; | ம க ம க ப் ம த ப ம க கா கா ஸா |
| ஆ ஸம் ஸா ரம் | வி த த ம | கி லம் |
| கா ; கா ஸா ஸா கா கா ஸா ஸா ; மா கா மா ; ; ; | ; பா கா மா பா ; ; ; | பா தா ஸ் நி நீ நி த ப ம பா ; |
| வா ங்ம யம் | ய த்வி | பூ தி |
| தா ; நி த ப ம பா நீ தா ; நீ தா ப த ப ம பா, த ஸா ; | ; தா ஸ்ா க்ா க்ா ஸ்ா நீ தா | ப த நி த ப ம பா தா, ஸ நீ நி த தா |
| யத் ப்ரூ ப ங்கா த் | கு ஸு ம . த | நு ஷ |
| த ஸா த க்ா க்ா க்ா ஸ்ா கா கா கா ; ; ; க்ா ஸா க்ா ம்ா | ; கா ஸ்ா ; நீ, த ப தா ப | மா, த ப பா ம ம க கா கா ஸா |
| கி ங்க ரோ | மே ரு | த ந் வா |

**மத்யம கால நடை**

| | | |
| --- | --- | --- |
| மா கா ம பா ம கா ஸா கா ; கா மா பா தா நீ ; தா ; | நீ ; தா பா தா மா பா தா | நீ நீ தா பா மா பா தா ஸா |
| ய ஸ்யா ம் நி த்யம் ந ய ந ச த கை | ரே க ல க்ஷ்யோ | ம ஹேந் த்ர |
| பா தா ஸ்ா ; தா ஸா ஸ்ா கா ஸ்ா தா ஸ்ா க்ா ; ஸ்ா ம்ா ; | கா ம்ா க்ா ஸ்ா க்ா ஸ்ா நீ தா | பா மா கா ஸா கா மா பா தா |
| ப த்மே தா ஸா ம் ப ரி ண தி ரஸௌ | பா வ லே சை | ஸ் த்வ . தி . யை |

**ஸ்வர ஜதி**

| | | |
| --- | --- | --- |
| ஸா ; ; நீ தா நீ பா தா மா பா ம ப கா ; பா மா கா | ஸா ; மா கா பா மா தா பா | நீ தா பா ; ஸா கா மா பா |
| ஸா த கி ட பா தா மா பா த ஜம் கி ட த | ஜம் மா கா பா மா தா பா | த த ஜம் ஸா கா மா பா |
| தா ஸ்ா ; நீ தா பா தா மா பா தா ஸா கா ; ம்ா க்ா ஸ்ா | நீ தா பா ; தா நீ தா பா | மா கா ; ஸா கா மா பா தா |
| தா ஸ்ா த க தி மி ம ர பா தா ஸா தாம் த தி கி | ணதொம் தாம் த தி கி ண | தொம் தாம் த தி கி ண தொம் |

(தொடரும்)




### அத்: 8. மாமிச பிண்டம்

பத்திரிகைகளுக்கு எழுதியவைகளைக் கவர்களில் விட்டு விலாசம் எழுதிவைத்தான், கணபதி. அதன்பிறகு வீதி வாசல்படி யருகில் புகைந்து கொண்டிருந்த நெருப்பின்மீது இரு கட்டைகளை எடுத்துப் போட்டுவிட்டு உள்ளே வந்தான்.

"லீலா! நீ சற்றே படுத்துக்கொள். நான் இங்கே இருக்கிறேன்!" என்றான், பரிவுடன்.

"இல்லை அண்ணா! எனக்குத் தூக்கம் வரவில்லை. நாளைக்குக் கூடவா அப்பாவைப் பார்க்கப் போகிறேன்? நானும் உன் கூடவே இருக்கிறேன்!" என்றாள், லீலா.

"என்ன, லீலா! இங்கே கிடப்பது 'அப்பா' என்று நினைக்கிறாய்? படித்த நீ கூட அப்படி நினைக்கலாமா? அப்பா எப்போதே விடுபட்டுப் போய்விட்டாரே! இங்கே கிடப்பது வெறும் மாமிச பிண்டமல்லவா? நாளைக்குச் சாம்பலாகப் போவது, எரிக்கச் சற்றுத் தாமதமானால் அழுகித் துர்நாற்றம் வீசப்போவது, அதைக் காவல் புரிவதால் பலன் ஒன்றும் இல்லை. நாளைக்கு ஊரிலிருந்து வந்திருப்பவர்களுக்குச் சமையல் முதலிய ஏற்பாட்டை நீதான் மேற்பார்வை பார்க்கவேண்டும். ஆகையால் சற்றே படுத்து உறங்கு. நான் இப்போது விழித்திருந்தாலும் நாளை தகனம் ஆன பிறகு சற்றுத் தூங்குவேன். வெளி வேஷத்திற்காகத் துக்கம் கொண்டாடியபடி நான் உட்கார்ந்திருக்கப் போவதில்லை. சென்றது இனி மீளாது. யாருக்கு, எதற்கு அஞ்சி நாம் துக்கம் காப்பதாக வேஷம் போடவேண்டும்? நம் ஆத்மா பரிசுத்தமாய் இருந்தால், அன்பு மயமாய் இருந்தால், அப்பாவின் ஆத்மா கட்டாயம் சாந்தியடைந்துவிடும். ஆத்மாவை ஆத்மாதான் தீண்டமுடியும். கண்ணீரும் கம்பலையும் காற்றிலேதான் கலக்கும்; அதனால் பலனில்லை! இதை நீ இன்றாவது தெரிந்துகொள், லீலா!"

"சரி, அண்ணா! நான் படுத்துக்கொள்கிறேன். இந்தக் குத்து விளக்கிற்கு அவ்வப்போது எண்ணெய் வார்த்துக் கொண்டிரு. பொழுது விடிவதற்குள் அதை அணையவிடவேண்டாம். அணைந்தால் கெட்டதாம். அம்மா சொன்னாள்!"

"ஆகட்டும்" என்றான் கணபதி. லீலா படுக்கச் சென்றாள்.

### அத்: 9. மண்ணில்

பொழுது புலர்ந்தது. வழக்கம்போல் சிரித்த முகத்துடன்தான் கதிரவன் தன் யாத்திரையைத் தொடர்ந்திருந்தான். பூவுலகிலே தினம் தினம் நடக்கும் சோக நாடகங்களைக் கண்டு மனத்தை நெகிழவிட்டால் அவன் தன் ஒளி குன்றி என்றோ சாம்பி வெளுத்திருப்பானே!

சென்னையின் பற்பல மூலைகளில் சிதறிக் கிடந்த பிரமுகர்கள் காலை 9 மணிக்குள், செய்தி

எட்டி, சிவஞானம் பங்களாவிலே கூடினர். பிணத்தை எடுப்பதற்கான ஏற்பாடுகள் உள்ளே நடந்துகொண்டிருந்தன. இங்கு, "யாரை சிவ ஞானம் அவர்கள் ஸ்தானத்தில் நியமனமாகக் கூடும்?'' என்ற சர்ச்சை நடந்துகொண்டிருந்தது.

சிநேக ரஞ்சகமானவராயிருந்ததால் சிவ ஞானம் பலர் நட்பிற்குப் பாத்திரமானவராய் இருந்தார். பலருக்கும் பலவிதங்களில் அவர் உதவியிருக்கிறார் இவர்கள் அவர்மீது கொண்டிருந்த அபிமானம் பிரேத ஊர்வலத்தின் மூல மாகத் தெரிந்தது.

நெருங்கிய நண்பர்களும் பிரமுகர்களும் மயானம் வரையில் சென்றிருந்தனர். தகனம் சீருடன் நடந்தது.

சிவஞானம் அவர்களின் வாழ்வும் சாவும் ஒரு சிதைந்த கனவைப்போல் மறைந்தது. எட்டாத இலட்சியத்தைக் குறியெனக் கொண்டு அதை அடைய, சாணக்கிய சாகசங்கள் எதுவும் செய்ய வில்லை. தினம் பணப்பசியுடன் வாழ்ந்தார்; கொம்பைச் சுற்றிச்சுற்றி யடிக்கும் சுழல்காற்றில் உதிரும் காயைப்போல் அகால மரணமடைந்தார்; அவ்வளவே! தம் சாவை அவர் விரும்பவில்லை; அதை எதிர்த்து நின்று வாழ்ந்து, தம் கடமையைச் செய்துவிட்டுச் சாகமுடியவில்லையே என்று மனம் வாடினார். என்ன பலன்? இயற்கை தன் கடமையைச் செய்து முடிப்பதில் மிகவும் கண்டிப்பானது; நம்மைப்போல் கண்ணோட்டமும் நிதானமும் காட்டுவதில்லை.

## அத்: 10. புல்லுருவி

தகனக் கிரியைகளுக்குப் பின் உறவினர்களில் பலர் ஊருக்குப் புறப்பட்டனர். மறு நாளும் இருக்க அவர்களுக்கு லீவு இல்லை என்றும்; அவர்களுக்கு லீவு கிடைப்பதே அபூர்வம் என்றும் சொல்லிக்கொண்டனர். சிவஞானம் அவர்களும் தம் உறவினரிடம் அப்படித்தான் சொல்லிக்கொண்டார். கடைசியாக அவருக்கு லீவு கிடைத்தது அவருடைய மரணப் படுக்கையில்தான்; சாவின் மடியில்தான்!

கணபதி மத்தியான உணவுக்குப்பின் நன்றாக உறங்கிக்கொண்டிருந்தான். இந்த அர்த்தமற்ற மானிட வாழ்விலே தூங்கும் நேரந்தான் இன்பமயமானது என்று சொல்லத் தோன்றியது அவன் தூங்கிய நிலை. அவன் நிர்விசாரமாய்த் தூங்கியதைப் பலர் பலவிதமாக வியாக்கியானம் செய்துகொண்டனர்.

சாப்பாட்டு அமர்க்களம் முடிந்துவிட்ட பிறகு சமையலறையின் ஓர் மூலையிலே படுத்து உறங்கிக் கொண்டிருந்தாள், லீலா. புழுதி மலிந்த வெறுந் தரையில் அவள் படுத்துக்கிடந்த கோலம் பார்ப்பவர் மனதிலே கருணையை வருவித்தது. பிணமென உறங்கிய அண்ணனும் தங்கையும் தத்தம் சூட்சும சரீரத்தில் இயங்கித் தந்தையின் ஆவிக்கு வழித்துணையாகச் சென்றனரா?

பங்கஜம்மாளுக்கு உறக்கம் வரவில்லை. கணவர் இறந்துவிட்டதால் சுமக்கமுடியாத பொறுப்புக்கள் தன் தலைமீது சுமந்து கிடப்பதாக அவள் எண்ணம். திருமயிலாடியிலிருந்து வந்த அவளுடைய அண்ணா சங்கரன் அவளைப் பலவித கேள்விகள் கேட்டுக் குழப்பிவிட்டுவிட்டான். சிவ ஞானம் அவர்கள் அன்றுவரை சம்பாதித்து வைத்த சொத்து நிலவரத்தைப்பற்றிப் புள்ளி விவரங்களைக் கேட்டான், அவன்.

பங்கஜம்மாள் அண்ணாவிடம் அங்கலாய்த்தாள். "அவர் போய்விட்டார், பாவி மனிதன்! சொத்து ஒன்றும் வைக்கவில்லை. என்னுடன் வாயேன், அவர் எனக்கு வைத்துள்ளவைகளைக் காட்டுகிறேன்!'' என்று சொல்லி சிவஞானத்தின் ஆபீஸ் அறைக்கு அவனை அழைத்துச் சென்றாள். நான்கு கண்ணாடி பீரோக்கள் நிறைய இருந்த சட்டப் புத்தகங்களையும் ஒரு பெரிய பீரோ முழுவதும் இருந்த ஆங்கில இலக்கியப் புத்தகங்களையும் சுட்டிக் காட்டினாள். "அவர் வைத்துவிட்டுப்போன சொத்தில் இது ஒன்று! புத்தகங்களை வாங்கி இப்படி அடுக்கி வைப்பதில் அவருக்கு ஒரு பித்து!'' என்றாள்.

சிவஞானம் அவர்களின் மேஜையருகே ஒரு வர்ணச் சித்திரம் தொங்கிக்கொண்டிருந்தது. ஏழைக் குடியானவன் ஒருவன் கூடை சுமந்து செல்கிறான்; வாரச் சந்தை மேட்டை நோக்கி தன் ஒரே கோழியை விலைப்படுத்திவிட்டு ஜீவாதாரமான வாழ்க்கைச் சாமான்களை வாங்கிவரும் பொருட்டு. மின்னலைப்போல் ஒரு கழுகு ஜிவ்வென்று பறந்து வந்து அக் கோழியைத் தூக்கிச் செல்கிறது.

இந்தச் சித்திரத்தைத் தன் தமையனிடம் சுட்டிக்காட்டினாள், பங்கஜம்மாள். "எங்காவது இத்தகைய மனிதரை பார்த்ததுண்டா? நூறு ரூபாய் எண்ணிக்கொடுத்து இந்தப் படத்தை விலைக்கு வாங்கி மாட்டியிருக்கிறார், பாரேன்! இந்தப் படத்தில் அதிசயம் என்னவாம்? ஒரு கழுகு கோழியைத் தூக்கிச் செல்வதில் விந்தை என்ன இருக்கிறது? இந்தப் படத்திற்கு யாராவது நூறு ரூபாய் கொடுப்பார்களா? நான் இதையெல்லாம் கேட்கப் போனால் சண்டை! ஒன்றும் தெரியாத நாட்டுப்புறம் என்ற பட்டம். இந்தப் படத்தைத் தன் நண்பர்களிடம் காட்டிச் சிலாகித்துப் பேசும் போது எனக்கு என்ன வயிற்றெரிச்சல் வரும் தெரியுமா? இதை அறிந்து, "பங்கஜம்! இந்தப் படத்தினுடைய உள்ளர்த்தம் உனக்குத் தெரியாது இதுதான் வாழ்வின் புதிர்! பூவுலக வாழ்வை இந்தப் படம் அபூர்வமாய்ச் சித்திரிக்கிறது. "வாழ்வு" என்ற மகுடத்தைக் கொடுத்த சித்திரக்காரன் சிறந்த ரஸிகன்!" என்று சொல்வார்! இப்படிப்பட்ட கணவரிடம் நான் என்ன வாதாட முடியும்?

“இதோ பார்! மேஜை மீது பேனா பென்சிலைத் தாங்கி நிற்கும் இந்தத் தந்த யானையை என்ன விலைக்கு வாங்கினார் தெரியுமா? இதன் விலை நூற்றைம்பது ரூபாய் என்றால், நீ நம்ப மாட்டாய்! ‘நூற்றைம்பது ரூபாய்க்கு ஒரு ஜதை உழவு மாடுகள் வாங்கலாமே!’ என்பாய்.

"ஒருநாள் எவனோ ஒரு மலையாளத்தான் வந்தான். ஒரு மணி நேரம் வரை இவரிடம் கலையைப் பற்றியும் கலை நுணுக்கத்தைப் பற்றியும் பேசினான். இவர் பல்லை இளித்தபடி கேட்டுக்கொண்டிருந்தார். பிறகு அவன் பலவித தந்தப் பொம்மைகளைத் தன் பெட்டியிலிருந்து எடுத்துக் கடை பரப்பினான். பொம்மைக் கடையிலே புகுந்த சிறு பிள்ளையைப்போல் இவர் ஒவ்வொன்றையும் ஆவலுடன் எடுத்து மேலும் கீழும் திருப்பிப் பார்த்துப் பரவசமடைந்து போனார். கடைசியாக இந்தத் தந்த யானையை இவர் தலையில் கட்டிவிட்டு நூற்றைம்பது ரூபாய் தட்டிக்கொண்டு போய்விட்டான், அவன். இந்த அபூர்வ யானைக் குட்டியைப் பலரிடம் காட்டி இவர் என்ன பெருமைப் பட்டுக்கொண்டார் தெரியுமா? புதிதாகப்பொம்மை வாங்கிய குழந்தைகூட அப்படிச் செய்திருக்காது!

"இதுமட்டுமா? இன்னும் எத்தனை விதங்களில் பொருளை விரயம் செய்தார், தெரியுமா! சாதாரணமாக எழுதுவதற்கு 50 ரூபாய் கொடுத்துப் பேனா வாங்குவார். எத்தனை பேனாக்கள் வாங்கி ஞாபக மறதியாய்த் தொலைத்திருக்கிறார் தெரியுமா? இவைகள் என் கண்ணுக்குத் தெரிந்தவை. என் கண்ணுக்குப் புறம்பே அவர் செய்த ஊதாரித்தனத்தை யார் கண்டார்கள்! கணக்கு வழக்கேது? அவருடைய டைரியைப் பார்த்தால் தினச்செலவு தெரியும்; நீதான் பாரேன்!"

சிவஞானத்தின் மேஜையைத் திறந்து அதனுள்ளிருந்த டைரியை எடுத்தாள், பங்கஜம். அதனுள்ளிருந்து ஒரு கவர் கீழே விழுந்தது. "இது என்ன பங்கஜம்?" என்று கேட்டுக்கொண்டே அந்தக் கவரை எடுத்தான், சங்கரன். கடிதம் நெருங்கடைப் அடிக்கப்பட்டிருந்தது. அரைகுறை ஆங்கிலம் தெரிந்த சங்கரன் அதைப் படித்தான். பங்கஜம்மாள் மற்ற டிராயர்களை ஆராய்ந்தாள். "பங்கஜம்! ஏன் வீணாக ஆராய்கிறாய்? இந்தக் கடிதம் நிலைமையை வெட்டவெளிச்சமாகச் சொல்கிறதே! அண்ணனும் தங்கையும் படுத்து நிர்விசாரமாய் உறங்குவதைப்போல் நீயும் ஒரு மூலையில் படுத்துத் தூங்கு!"

"பார்த்தாயா அண்ணா! இப்படி நடக்குமென்று எனக்குத் தெரியும். அதனால்தான் ‘எரிகிற வீட்டில் எடுத்தது லாபமென்று’ அவ்வப்போது உன்னிடம் நூறு ஐம்பது என்று கொடுத்துவைத்தேன். நான் இதைக்கூடச் செய்துவைக்காமல் இருந்தால் இந்தப் பெண்ணின் கதி என்ன ஆகும்? நன்றாக ஜில்லா ஜட்ஜ் உத்தியோகம் பண்ணிக் குப்பை கொட்டினார்! கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறார்?"

"எழுதியிருக்கிறார், உன்னைச் சந்தியில் நிற்கச் சொல்லி, போ! அப்புறம் சாவகாசமாகப் படித்துச் சொல்கிறேன்!" என்று சொல்லிக் கடிதத்தை சட்டைப்பையில் போட்டுக்கொண்டான், சங்கரன்.

## அத்: 11. உள்ளும் புறமும்

விக்கிரகம் அகற்றப்பட்ட மூலஸ்தானத்தைப் போல் இருந்தது சிவஞானம் பங்களா. எங்கும் வெறுமை தாண்டவமாடியது. ஆஜானுபாகுவான அவர் மரணப் படுக்கையில்



கிடந்தபோதிலும் பங்களாவில் ஒரு லக்ஷ்மீகரம் இருந்தது. இப்போது அதில்லை; அத்துடன் அங்கு நிலவிய நிசப்தம் இதை மிகைப்படுத்திக் காட்டியது.

நாட்கள் ஓடின. கர்ம காரியங்கள் முடியும் வரை லீலாவுக்கு ஓய்வே இல்லை. வீட்டு வேலைகளை அவள்தான் கவனித்து வந்தாள். கணபதி அவள் கையில்தான் பணம் கொடுத்திருந்தான். அவ்வப்போது ஒவ்வொரு சிறு செலவும் அவள் கைப்படத்தான் நடக்கவேண்டியிருந்தது. தினம் ஒருவர் இருவர் எங்கேனுமிருந்து துக்கம் விசாரிக்க வந்துகொண்டிருந்தனர். அவர்களுக்குத் துக்கம் கொடுத்து அனுப்பவே பங்கஜம்மாளுக்குப் பொழுது சரியாக இருந்தது.

கர்ம காரியங்கள் முடிந்த இரண்டாம் நாள் மத்தியானம் சற்று ஓய்வுடன் இருந்தாள், லீலா. அண்ணா அவளிடம் சில்லறையாக நூறு ரூபாய் கொடுத்திருந்தான். அதைக் கணக்கெடுத்துப் பார்த்தாள். செலவழிந்ததுபோக இன்னும் ஐந்து ரூபாய்தான் இருந்தது. சிவஞானம் அவர்கள் ஐந்தாம் தேதி காலமானார். அவருடைய முந்திய மாதச் சம்பளத்தைக் கஜானா குமாஸ்தா நேரில் கொண்டு வந்து கொடுத்துவிட்டுக் கையெழுத்துப் பெற்றுச் சென்றான். முதல் தேதியன்று அவன் வந்த பொழுது அவரால் பேசக்கூட முடிந்தது. அந்தக் குமாஸ்தாவின் குடும்ப சமாச்சாரங்களைக் கூட விசாரித்தார். பேய் ஆவேசம் அடிக்கடி வந்துவிடும் மனைவியைக்கழுத்தில்கட்டிக்கொண்டு அல்லல்பட்ட அவனுக்கு அது எவ்வளவு உற்சாகத்தைக் கொடுத்தது. அந்தப் பணமும் கணபதி சம்பளம் வாங்கி வந்த பணமும் சேர்ந்து சாவுக்கும் கர்ம காரியங்களுக்குமாகச் செலவாய் விட்டன. 'மாதத்தின் மீதி நாட்களை எப்படிக் கழிப்பது?' என்று எண்ணினாள், லீலா.

அப்போது அவளுக்கு அப்பா கொடுத்த கவரின் ஞாபகம் வந்தது. அதில் அப்பா என்ன எழுதியிருக்கக்கூடும்? சாவு கர்ம காரியம் இவைகளின் மும்முரத்தில் அக்கடிதத்தைப்பற்றியே மறந்துவிட்டாள், லீலா, வைத்த இடம்கூட அவளுக்கு நன்றாக ஞாபகம் இல்லை. அறை முழுதும் தேடினாள். டிராயருள்ளும்கூடத் தேடிப் பார்த்தாள். கடிதம் கிடைக்கவில்லை. அப்போதே படிக்காமல், அப்பாவின் மரணத்தின் துக்கத்திலேயே மூழ்கியிருந்துவிட்டது இப்படியா விபரீத பலனைக் கொடுக்கவேண்டும். அப்போது தான் படிக்கவில்லையே மறுபடியாவது அதன் நினைவு வரக்கூடாதா? இது என்ன தலைவிதி! என்று தன்னையே நொந்துகொண்டாள், லீலா.

'அண்ணா எடுத்துப் பிரித்துப் படித்துவிட்டு எங்கேனும் வைத்திருப்பானோ! இருக்காது அவன் இதில் எல்லாம் கவனம் செலுத்தமாட்டான். அப்பாவின் டிராயர், மேஜை, கோட் பாக்கட் இவைகளை ஆராய்வதில் அம்மாவுக்குத் தான் அலாதி ஆவல்! அவள் கையில்தான் கடிதம் கிடைத்திருக்கவேண்டும்!' — அம்மாதான் எடுத்திருப்பாள் என்பதில் அவளுக்குச் சந்தேகமில்லையென்றாலும், பங்கஜம்மாளின் வாயைக் கிளற அவள் விரும்பவில்லை.

கணபதி ஆபீசிலிருந்து வந்ததும் இதைச் சொன்னாள்.

"போகட்டும். அம்மாவே வைத்திருக்கட்டும். பிரமாதமான முக்கிய சமாச்சாரம் அதில் இருந்தால் நாளாவட்டத்தில் தானே தெரியும். போதும்! அப்பா அவள் வாய்க்குப் பலியானது போதும்!" என்றான், கணபதி.

"சரி, அண்ணா! நான் நாளைக்குக் காலேஜ் போகட்டுமா? இனிமேல் நான் வீட்டில் இருந்து ஆகவேண்டியது என்ன? வீட்டில் சும்மா உட்கார்ந்து பொழுது போவது யுகமாக இருக்கிறது!"

"போ! ஆனால் இந்த டர்ம் பணம் இன்னும் கட்டவில்லையே! நான் கொடுத்த பணத்தில் இன்னும் உன்னிடம் எவ்வளவு மீதி இருக்கிறது?"

"எங்கே அண்ணா! எல்லாம் செலவாய்விட்டதே! இன்னும் ஐந்து ரூபாய்தான் இருக்கிறது"

"என் கையிலும் வேறு பணமில்லையே!"

"அம்மாவைக் கேட்கலாமா?"

"வேண்டாம்! வேண்டாம்! அவள்தான் பணம் என்றால் உயிரை விடுபவளாச்சே! காமதேனுவைப்போல் அப்பா அவள் கேட்ட பணத்தை எல்லாம் கொடுத்து வந்த பொழுதே பணம் என்று கேட்டுவிட்டால் சீறி விழுவாளே! இனிமேல்கூடத் தன் கையில் உள்ளதை அவள் கொடுப்பாளா, என்ன?"

"சரி அண்ணா! இனிமேல் இந்தச் செலவெல்லாம் தாள முடியாது. நான் காலேஜிலிருந்து நின்றுவிடுகிறேன்; படித்தவரையில் போதும்!"

"வேண்டாமம்மா, லீலா! உன் அண்ணா இருக்கும் வரையில் உனக்கு அந்தக் குறைகள் எல்லாம் வேண்டாம்! உன் சிநேகிதி சரசுவைக் கேட்டால் கொடுப்பாளே!"

"கொடுப்பாள், ஆனால்......"

"கடனாக வாங்கிக் கட்டு! அடுத்த மாதம் கொடுத்துவிடுவோம்!"

லீலா தலையை மட்டுமே ஆட்டினாள்; வாயை விட்டுப் பதில் சொல்லவில்லை.

"எனக்கு மண்டையிடி தாங்கமுடியவில்லை, லீலா சுடச்சுட ஒரு கப் காப்பி போட்டுக்கொண்டுவா! நான் என் அறையில் இருக்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனான், கணபதி.

## அத்: 12. உள்ளம் குலைந்தது

கணபதிக்கு பலத்த மண்டையிடி வரக் காரணமிருந்தது. தந்தை இறந்த நாட்களாக இரவில் அவனுக்கு நிம்மதியான உறக்கமில்லை விசித்திரமானக் கனவுகள் மனதைக் குலைத்தன. சிவஞானம் லீலாவை அவன் கையில் ஒப்புவித்த காட்சி பலவிதங்களில் கனவாக உருவாகி மனதை அலைத்தது. குடும்பப் பொறுப்பும் லீலாவின் எதிர்கால வாழ்வும் தன் தலைச்சுமையாகிவிட்டதை அவன் உணர்ந்தான். எதையும் லட்சியம் செய்யாத மனோதிடம் உள்ளவன்தான். பொறுப்பைக்கண்டு அவன் அஞ்சவில்லை. அதை எப்படி ஒழுங்குடன் வகுத்துப் பண்புமிளிர நடத்துவது? என்று சிந்தித்து மனதைக் குழப்பிக்கொண்டான்.

மனம் ஒரு நிலையில் இல்லாதபொழுது அவன் குடியிருந்த பங்களாவின் சொந்தக்காரர் ம. ப. வெ. அவன் காரியாலயத்திற்கே வந்துவிட்டார். சிவஞானம் இறந்த துக்கம் விசாரித்துவிட்டு ஒரு தஸ்தவேஜை எடுத்து அவனிடம் கொடுத்தார்.

'பெரிய வட்டாரங்களில்' வெளியே எவருக்கும் தெரியாமல் அதிக வட்டிக்குக் கடன் கொடுத்துக்கொண்டு லேவாதேவி செய்தபடி பட்டணத்தில் வசிப்பவர் அவர். அவரிடம் 'பிராமிஸரி நோட்டு' எழுதிக்கொடுத்து ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தார், சிவஞானம்.

அதன் வாசகத்தைப் படித்த கணபதி மலைத்து அப்படியே உட்கார்ந்துவிட்டான்.

வந்தவர் தம் வியாபார மந்திரத்தைக் கட்டவிழ்த்தார்: "நீங்கள் இந்தப் பாண்டுக்குப் பிணை நின்று வேறு பாண்டு எழுதிக் கொடுத்தால் போதும். தந்தையைப்போல் தாங்களும் நாணயம் மிகுந்தவர். பணம் தங்கள் சௌகர்யம்போல் கொடுங்கள். அவசரமொன்றுமில்லை. பிணை நிற்காவிட்டால்தான் நான் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்து, மற்றக் கடன்காரர்களை முந்திக்கொண்டு, ஜப்தி வாரண்டு கொண்டுவர வேண்டியிருக்கும். அதெல்லாம் எதற்கு? பிணை பாண்டு இதோ இருக்கிறது. தாங்கள் கையெழுத்திட்டு இரண்டு சாட்சிக் கையெழுத்தும் வாங்கிக் கொடுத்தால் நான் போய்விடுகிறேன். தந்தை இறந்த துக்கத்தில் இருக்கையில் நீங்கள் மனவேதனைப்படவேண்டாம். மெதுவாகக் கொடுங்கள்! உங்கள் சௌகர்யம்போல் கொடுங்கள்!"

அந் நிலையில் கணபதி வேறு என்ன செய்வான்? பிணை பாண்டில் கையெழுத்திட்டு, தனக்கு அந்தரங்கமான இரு குமாஸ்தாக்களைச் சாட்சிக் கையெழுத்திடச் செய்து கொடுத்தான். ஒரு பெரிய கும்பிடு போட்டுவிட்டு நழுவிவிட்டார். ம. ப. வெ.

அன்று முழுதும் கணபதியின் மனம் ஒரு நிலையில் இல்லை. 'மற்றக் கடன்காரர்கள் முந்திக்கொள்வதற்குள் நான் ஜப்தி செய்துவிடவேண்டும்!' என்று ம. ப. வெ. சொன்ன சொற்கள் அவன் மனதை வேல்கொண்டு குத்திப் புண்படுத்தியது. 'இன்னும் கடன்காரர்கள் இருக்கிறார்கள் போல் இருக்கிறது! அவர்கள் யாரோ! எந்தச் சமயத்தில் வந்து மானத்தை வாங்கப் போகிறார்களோ! அப்பா இருந்தும் கெடுத்தார்! செத்தும் கெடுத்துவிட்டாரே!' என்று தந்தையை நொந்துகொண்டான். பலர் முன்னிலையில் தலை நிமிர்ந்து பெருமிதமாய் நடந்ததுபோய், தலைவணங்கி நடக்கவேண்டி வந்துவிடுமோ! என்று அவன் அஞ்சினான்.

* * *

சூடச்சூடக் காப்பி போட்டு எடுத்துக்கொண்டு லீலா அவன் அறையுள் நுழைந்தாள். அண்ணாவின் முகத்தைப் பார்த்ததும் லீலா வேதனை அடைந்தாள். "அண்ணா உன் உடம்புக்கு என்ன?" என்ற வார்த்தைகள் அவள் இதயத்தினின்றும் எழுந்து வந்தன.

"உடம்புக்கென்ன! ஒன்றுமில்லை. பலவித எண்ணங்களால் மனதைக் குலைக்க விட்டுவிட்டேன்!" என்றான் கணபதி.

"என்னிடம் சொல்லக்கூடாதா அண்ணா!"

"வேண்டாமம்மா! உனக்குத் தெரியவேண்டிய விஷயங்களாய் இருந்தால் அவசியம் சொல்லமாட்டேனா? நீ இதனால் மனம் கலங்கிவிடாதே. நீ எப்போதும்போல் சந்தோஷமாயிருக்கவேண்டும்; அப்பா இறந்த சுவடு தெரியாமல் இருக்கவேண்டும். இதுதான் என் பெருங்கவலை."

சூடான காப்பி குடித்ததும் அவனுக்கு வியர்த்துக்கொட்டியது. துண்டு ஒன்று எடுத்து அண்ணாவின் கையில் கொடுத்துவிட்டு விசிறி எடுத்துவர உள்ளே சென்றாள் லீலா.

* * *

அவ் வார்த்தைகளை கணபதி மேலுக்குச் சொல்லவில்லை. கடமையுணர்ச்சி ஒரு புறமிருக்க, தன் தங்கையின்மீது மட்டிலா அன்பு கொண்டிருந்தான். சின்னஞ் சிறு வெண்கல பூஜை மணி ஒலிப்பதைப் போல், இடையிடையே தன் இதயத்தை இழையவிட்டு அவள் பேசும் பேச்சுக்கள் அவன் செவிக்கு இன்பமளிக்கும். அவன் வார்த்தைக்கு அவள் எதிர் வார்த்தை சொல்வதில்லை. அவன் குறிப்பறிந்து நடப்பாள். ஒரு அண்ணா தன் தங்கையின்மீது அன்புகொள்ள இவை போதாதா என்ன?

## அத்: 13. ஊர் பேச்சு

மறுநாள் மாலை மாடியில் தனியிடத்தில் உட்கார்ந்திருந்தாள், லீலா. அந்திச் செவ்வானம் இந்திரஜால வித்தை செய்து மகிழும் நேரம். கணந்தோறும் மாறிப் புதித்தெழுந்த வர்ண விசித்திரங்களைப் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தாள்.

'சந்தியாகால மேகங்களுக்குத்தான் என்ன கர்வம்!—காதலன் வரவால் மேனி புளகித்து கால் நிலத்தில் பாவாமல் நடக்கும் குமரியைப்போலே! கணநேரம் இருந்து மறையும் அந்த இன்பப் போதையைப் போன்றதுதானே உலக வாழ்வு?'

தன் தந்தை இருந்தவரையில் லீலா இவ்வித சிந்தனைக்கு ஆளாகவில்லை. திரை மறைவில் என்ன நிகழ்கிறது என்ற நினைவே இன்றி, மேடையில் நடக்கும் நாடகத்திலேயே மனம் லயிக்க விட்டு மெய் மறந்திருக்கும் குழந்தையைப்போல் இருந்தாள். வாழ்வின் சிக்கல்கள் அவள் முன் நிற்கவில்லை. இப்போது வாழ்வின் புதிரிலே ஒரு பகுதியை அறிந்துகொண்டாளா? அல்லது குழம்பிய மனதின் மருள்தானோ!

வாழ்வைப்பற்றிய சிந்தனை ஒரு புறம் இருந்த போதிலும் குடும்ப நிலையை அவள் அறிந்து கொண்டாள். ஊர்க் கதைகளைத் தம் தலையில் தூக்கிப் போட்டுக்கொண்டு உழலும் ஒரு சிலர் இது அவளுக்குத் தெரிந்தது.

* * *

சரசுவிடம் பணம் கேட்கப்போனபொழுது தெரிந்துகொண்டாள்.

லீலா தன் வாய்திறந்து கடனாகப் பணம் கேட்டதும் எடுத்துவரத் தன் அறைக்குள் சென்றாள், சரசு. தன் கைப்பெட்டியைப் பார்த்ததும் அவளுக்குத் தூக்கிவாரிப்போட்டது. பணம் காணவில்லை! புத்தப் புது பத்துருபாய் நோட்டுகளாக பத்து நோட்டுகள் வைத்திருந்தாள், அவள். அவை முழுதும் அப்படியே காணவில்லை. தேடிச் சோர்வடைந்த அவளுக்கு ஆத்திரம் மேலிட்டது; அத்துடன் ஒரு சந்தேகமும் வந்தது. 'வேறு யார் எடுத்திருப்பார்கள்? இந்த அம்மாவுக்குத்தான் எப்போதும் பணமுடை. பம்பாய் வீக்லி கூப்பன் போடும் பைத்தியம்!'

அம்மாவிடம் சென்று கேட்டாள், சரசு.

'நீ காலேஜுக்குப்போயிருந்த சமயத்தில் புடவைக்காரன் வந்தான்; கொடுத்தேன். இன்னும் இரண்டே இரண்டு நாள் பொறு! இப்போது போட்ட 'பம்ப்பர், ஆல் கரெக்ட்'டாக இருக்கும்! ஒன்றுக்கு இரண்டு பங்காகத் தருகிறேன்!" என்றாள், ஸ்ரீமதி சபேசன் ஐ. ஸி. எஸ்.

"ஆமாம், போம்மா! உன்னைப்போலே ஏ. பி. ஸி டி. மட்டும் தெரிஞ்சவங்களுக்கு பரிசு கொடுத்துவிட பம்பாய்க்காரன் பைத்தியக்காரனில்லை. இப்போது எனக்குப் பணம்வேணுமே?"

"அப்படி என்ன அவசரம்?"

"லீலாவுக்கு நாளைக்கு டர்ம்பீஸ் கட்டப் பணம் வேணுமாம். கடனாகக் கேட்கிறாள்! பாவம் என்ன முடையோ தெரியவில்லை!"

"ஓ! அப்படிச் சொல்லு. ஊர் பேச்சிலே உண்மை இருக்கத்தான் இருக்கு! அவள் எங்கே?" என்று கேட்டுக்கொண்டே எழுந்து சரசுவின் அறைக்கு வந்தாள், ஸ்ரீமதி சபேசன்.

"நேற்று எங்கள் கிளப்பில் கேள்விப்பட்டேன்! நிஜந்தானா? அப்பா பத்தாயிரத்துக்குமேலே கடன் வைச்சுட்டுப்போயிருக்காராமே! பாவி மனுஷன்! இப்படியும் உண்டா?...கட்டின பெண்டாட்டியும் பெத்த பிள்ளைகளும் எந்தச் சந்தியில் நிற்கிறது?"—ஸ்ரீமதி சபேசன் பாவத்துடன் பேசினாள்.

அப்பாவுக்குக் கடன் இருப்பதாகக் கேள்விப்பட்டதும், லீலா மௌனமாய் நின்றாள்.

* * *

லீலா வெறுங்கையுடன் வீடு திரும்பியபொழுது அவள் ஒளியிழந்த முகத்தைப் பார்த்து சரசு மனம் வருந்தினாள். "லீலா! அம்மா கேட்டதை 'ஸீரியஸ்ஸாக' எடுத்துக்காதே! அவள் வெகுளி. நம்மிடம் பழகத் தெரியாதவள்!" என்று மழுப்பினாள்.

"கோபமென்ன, சரசு! உண்மை நாளா வட்டத்தில் வெளியாகத்தானேபோகிறது!" என்று சொல்லிவிட்டு வந்துவிட்டாள்.

## அத்: 14. நாளை நடப்பது

ஸ்ரீமதி சபேசனுக்கு தன் பேச்சு குற்றமுள்ளதாகத் தோற்றவில்லை. ஆனால் லீலாவின் மன ஆழத்தில் அவை முட்களெனத் தைத்தன. "பாவி மனுஷன்!" என்று சொல்ல இவள் யார்? அப்பா பாவியா? இல்லை. அப்பாவி! சரசுவின் அப்பாவைப்போல் நான்கு கைகளாலும் சம்பாதிக்கத் தெரியாதவர். அதனால்தான் இங்கில்லை!' தன் தந்தைக்கு அவ்வளவு கடன்வரக் காரணம் என்ன என்று அவளுக்கே விளங்கவில்லை. ஆனால் அப்போதிருந்த குடும்பநிலை அவளுக்குத் தெள்ளத் தெளியப் புலனாயிற்று. 'இப்போது கடன் வாங்கி காலேஜ் சம்பளம் கட்டிவிட்டால் வரும் வருஷங்களில் என்னசெய்வது? அண்ணாவுக்கு மாதம் 150 ரூபாய்தான் சம்பளம். இதைத் தவிர வேறு வருமானத்திற்கே வழியில்லை. அப்பாவுக்குப் பிதிரார்ஜித சொத்து கிடையாது; சுயார்ஜிதமாக கடனைத்தான் சுமத்தி வைத்து விட்டுப் போயிருக்கிறார்! இந்த நூற்றைம்பது ரூபாயுன்தான் எல்லாம் நடக்கவேண்டும்; அப்பாவின் கடனைத் திருப்பிக் கொடுப்பது உள்பட! இதில் நான் அண்ணாவுக்கு வேறு செலவு வைக்க வேண்டுமா? படித்தது போதும்!.........' என்றெல்லாம் எண்ணமிட்டாள், லீலா.

இவ்வித எண்ணங்களினூடே, முதல் நாள் மாலை மன வேதனையால் சாம்பிய அண்ணாவின் முகம் அவள் கண்முன் நின்றது. ஸ்ரீமதி சபேசன்

கேட்ட கேள்வியுடன் அண்ணாவின் நிலையை இணைத்து எண்ணிப் பார்த்தாள். அவன் மனம் எவ்வளவு வேதனைப்பட்டிருக்கும் என்று அவளால் ஊகிக்க முடிந்தது.



எண்ண அலைகள் தவழ்ந்தவேகத்தில் நேரம் கழிந்து சென்றது. பொன்னிற முற்றுப் புளகித்த மேகங்கள் பஞ்சுப் பொதியென வெளுத்து விட்டன. லீலா எழுந்து கீழே போனாள்.

அப்போது பங்களா கேட் கதவு கிரீச்சிட்டது, ஆபீஸ் பியூன் ராமசாமி வந்துகொண்டிருந்தான்.

எப்போதும் கலகலப்பாகப் பேசும் வழக்கமுள்ள ராமசாமி லீலாவின் முன் மௌனமாய் நின்றான்.

"ராமசாமி! என்ன சமாச்சாரம்! ஏன் முகம் இப்படி வாடியிருக்கிறது?" என்று ஆதரவுடன் கேட்டாள், லீலா.

அவன் மேலும் மௌனம் சாதித்தான். தான் சொல்ல வந்த செய்தியை, 'எப்படிச் சொல்வது? எதை முதலில் சொல்வது? எதைப் பின்பு சொல்வது' என்று விழிக்கும் நிலையில் இருந்தான், அவன்.

"ராமசாமி! சும்மா சொல்லு! என்னவிசேஷம்?" என்று தூண்டினாள், லீலா.

"நம்ம ஐயாங்கம்மா!...இண்ணைக்கி எசெகேடா முத்திப் போச்சுங்க......என்னமோ கஷ்ட காலம் பாருங்க!......நல்லவங்க பெரியவங்களுக்கு இப்படியெல்லாம் சோதனை வருதுங்க!......"என்று சொல்லவேண்டியதைச் சொல்லத் திணறினான், ராமசாமி.

"என்ன ராமசாமி! ஐயாவுக்கு என்ன சொல்! லாரியில், அல்லது காரில் அடிபட்டு......"


# இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

**மதராஸ்**

**ஸர். A. ராமஸ்வாமி முதலியார்,**
K. C. S. I., D. C. L. (Oxon)
**சேர்மன்**

**செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 18,75,000**
**ரிஸர்வ் நிதி ரூ. 10,75,000**

சென்னையிலுள்ள ஆபீஸ்கள் :

**நேதாஜி ஸுபாஷ் சந்திரபோஸ் ரோட், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, தியாகராயநகர் & பெரியமெட்.**

தென்னிந்தியாவிலுள்ள எல்லா முக்கிய நகரங்களிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

"இல்லிங்கம்மா! அதெல்லாமில்லிங்க! இன்னைக்கு நம்ப ஐயாவுக்கும் சூப்பிரண்டு துரைக்கும் சண்டைங்க; விபரீதமா முடிஞ்சுப்போச்சுங்க! நம்ப ஐயா துரையை அடிச்சிட்டாருங்க!"

"என்ன? அண்ணாவா அடித்தான்? அவன் முறை தவறிப் போகமாட்டானே! ராமசாமி என்ன நடந்தது? விவரமாகச் சொல்லு!" என்று பதை பதைத்தாள், லீலா.

"அப்பா காலமான நாளா ஐயா மனசு ஒரு நிலையிலே இல்லிங்க! நானும் பார்த்தேன். அதுக்கு முன்னாலே ஐயா பம்பரமாச் சுழண்டு வேலை செய்வாரு. சூப்பிரண்டு துரை வாய்திறந்து ஒண்ணு சொல்லும்படியா வைச்சிக்கமாட்டாரு. இன்னைக்குக் காலையிலே ஐயா ஆபீசுக்கு வந்து ஒரு பேப்பரையும் பார்க்கலே. அவர் மனசு ஏதோ வேதனை செஞ்சிகிட்டிருந்துச்சு! சங்கிலி கோத்தாப்பலே சிகரெட் பிடிச்சிக்கிட்டு ஏதோ யோசனை பண்ணிகிட்டு உட்கார்ந்திருந்தாருங்க! ஆபீஸ் வேலை ஒண்ணுமே செய்யல்லே! பேப்பருங்க மலை மலையா குவிஞ்சி கிடந்ததை அவரு கண்ணெடுத்தும் பார்க்கல்லே!"

"உம் அப்புறம்?......"

"மத்தியானமா சூப்பிரண்டு துரை ஐயாவை கூப்பிட்டனுப்பிச்சாருங்க! நான்தான் வந்து கூப்பிட்டுகிட்டுப் போனேனுங்க! துரை முக்கியமான பேப்பர் ஒண்ணுக்கு பதில் எழுதியாச்சான்னு கேட்டாருங்க!—'ஆகட்டும்! எழுதுவோம்!—என்று ஐயா அலட்சியமாய் பதில் சொன்னாரு. துரைக்குக் கோபம் வந்துட்டது. 'டாம்ண் யு பெக்கர்!—ஓய் டிலே!' அப்படின்னெல்லாம் துரை கோபிச்சிக்கிட்டாருங்க!......"

"உம்! அட கஷ்ட காலமே!...அப்புறம்!..."

"ஐயாவுக்கு தன்னையும் மீறிக் கோபம் வந்துட்டுது. "யாருடா பெக்கர்! நீ! உங்கப்பன்! தாத்தா! முத்தாத்தா! இவன்கதாண்டா பிச்சையெடுக்க வந்தவங்க! ராஸ்கல்! வாயை மூடு!" என்று கத்தினார்...........ஒண்ணுவிட்டு ஒண்ணு வார்த்தை வளந்துபோச்சுங்க! ஐயா துரையை நாற்காலியிலிருந்து பிடித்துக் கீழே தள்ளி அடியோ தண்டமுன்னு அடிச்சிட்டாருங்க!—பூட்ஸ்காலால் அவன் முகத்தில் எட்டி உதைத்து விட்டாருங்க! துரை முன் பல்லெல்லாம் உடைஞ்சி ரத்தம் கொட்டிச்சிங்க?........"

"ஐயய்யோ! அட ராமா! அப்புறம்?"

"துரை கன்னா பின்னான்னு உளறிக்கிட்டே டெலிபோனை எடுத்துப் போலீசுக்குச் சொல்லிட்டாரு. கவர்மெண்ட் ஆஸ்பத்திரி டாக்டருக்கு ஆள் அனுப்பி உடனே கூட்டிவரச் சொன்னாரு!



வாயிலேருந்து வடிந்த ரத்தத்தை மேலெல்லாம் கொட்டவிட்டு நாற்காலியிலே உட்கார்ந்துட்டாரு! மூஞ்சிலே கோபம் துடி துடிச்சிகிட்டு இருந்திச்சு........."

லீலா பெருமூச்சு விட்டாள். அவள் நா குழறியது. பேச முடியவில்லை.

"ஆபீசிலே இருந்த மத்த குமாஸ்தாவெல்லாம் ஐயாகிட்டேவந்து, "என்ன ஸார்! இப்படிச் செய்யலாமா? அவன் ஆபீஸரல்லவா? கிரிமினல் கேஸாக எடுத்துவிட்டால் என்ன ஆகுமோ! போங்கள்! போய் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுங்கள்! காரியம் முத்திவிடுவதற்குள் சமாதானமாகப் போய்விடலாம்" என்று சொன்னுங்க.—"கிடக்கிறுன் கழுதை! அவன் அப்படியெல்லாம் பேசியது சரியா என்ன?" அப்படின்னு கோபமாய்ப் பேசினுரு, அவுங்க போய்ட்டாங்க!"

"அட கஷ்டகாலமே! இது எந்தக் கிரஹத்தின் சேஷ்டை?"

"போலீஸ் சூப்பிரண்டே வந்துட்டாருங்க. நடந்ததையெல்லாம் எழுதிக் கிட்டாருங்க!—அவரு சூப்பிரண்டு துரைக்கு சிநேகம்போலே இருக்கு!—பெரிய கேஸா ஜோடிச்சி, அங்கிருந்த குமாஸ்தாக்களை சாட்சிப்போட்டு.........ஐயோ! அம்மா! இந்த குமாஸ்தாக்களைப்போலே மனுஷங்க உண்டா! ஐயாவுக்கு வேண்டியவங்ககூட அவருக்கு எதிரா சாட்சிக் கையெழுத்துப் போட்டாருங்கம்மா!......கடைசியிலே ஐயாவை அரஸ்ட் பண்ணிகொண்டு போய்ட்டாங்க!......"

"ஐயோ அண்ணு! உன் நல்ல குணமெல்லாம் எங்கே போயிற்று? தேளைப் பிடித்து கண்ணில் கொட்டிக்கொள்வாருண்டா? 'ஸர் சிவஞானத்தின் மகன் தன் மேலதிகாரியை உதைத்துவிட்டு ஜெயிலுக்குப் போய்விட்டான்!' என்று ஊரே கதைத்துத் திரியுமே!......"—லீலா வெதும்பினுள். மனதில் எழுந்த எண்ணங்கள் வார்த்தைகளாக வெளிவரவில்லை. அவள் கண்களிலிருந்து மட்டும் முத்துக் கோத்தாற்போல் நீர் வழிந்து கொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில் பங்களாவின் உள்ளே இருந்து பங்கஜம்மாள் அங்கு வந்தாள்.

"......நானும் போலிஸ் ஸ்டேஷனுக்குப் போயிருந்தேனுங்க! பலமா கேஸ் ஜோடிச்சுட்டாங்க. நாளையிலேருந்து வேலை கிடையாதாம். சஸ்பெண்டு பண்ணிட்டாங்களாம். கேஸ் நடக்கிற வரைக்கும் ஜாமீனிலே விடுவாங்களாம் ரொக்க ஜாமீனுயிருந்தால் இரண்டாயிரமும் நபர் ஜாமீனுயிருந்தால் ஐயாயிரம் ரூபாயும் வேணுமாம்! ஐயா இந்தச் சமாசாரத்தை உங்ககிட்டே ரகசியமா சொல்லச் சொன்னுங்க......வருத்தப் படாமே தைரியமா இருக்கச் சொன்னுங்க!......"

"என்னடா ராமசாமி?......ஏன் லீலா? என்ன அது? அவன் என்ன சொல்கிறுன்? யாரைப் பற்றி?" என்று குறுக்கிட்டாள், பங்கஜம்மாள்.

"அண்ணுவுக்கும் அவன் ஆபீஸ் சூப்பிரண்டுக்கும் சண்டையாம். அண்ணுவைக் கைதுசெய்து கொண்டு போய்விட்டார்களாம்! ஜாமீன் கொடுத்தால் விடுவார்களாம்!" என்ருள், லீலா, படபடப்புடன்.

"அட அசட்டுப் பிள்ளையே! இப்படிக்கூட உண்டா? ஊர் உலகத்திலே ஒருவரும் உத்தியோகம் பண்ணவில்லையா? இப்படியா மேலதிகாரியை அடிப்பார்கள்! கடவுளே! கடவுளே! அப்பனும் பிள்ளையும் அபூர்வப் பிறவிகள்!......"

"போதுமம்மா, ஏன் வீணுக வார்த்தைகளைக் கொட்டுகிருய்? அண்ணு ஒன்றும் முட்டாளல்ல. அவனையும் மீறிக் கோபம் வரக்கூடிய காரணம் என்னவோ தெரியவில்லை. ஜாமீன்கொடுத்து அழைத்துவரவேண்டும். உன்னிடம் இருக்கும் பணத்தைக் கொடு! அண்ணுதான் பெரிது; பணம் பெரிதல்ல!........." என்று காரியத்தை நினைவுபடுத்திப் பேசினுள், லீலா.

"நான் போய்ட்டு வரேங்கம்மா!" என்று சொல்லிக்கொண்டு நழுவினுன், ராமசாமி.

திருடனைத் தேள் கொட்டியதுபோல விழித்தாள், பங்கஜம்மாள். தகனக்கிரியை வரையில் இருந்து பிறகு ஊருக்குப் போன அவள் தமையன் சங்கரன் அவளிடமிருந்த பணத்தை எல்லாம் வாங்கிக்கொண்டு போய்விட்டான். தன் தங்கையின் எதிர்காலத்தைப் பற்றி அவன் பரிந்துபேசிய அக்கறைதான் என்ன? திருமயிலாடியில் புறம்போக்கு நிலமொன்று ஏலம் போவப் போவதாகவும், அதை ஏலம் எடுத்துச் சீர்திருத்தம் செய்தால் முதல்தரமான நஞ்சை நிலமாகப் போய்விடுமென்றும் பங்கஜம்மாளிடம் சொன்னுன். அதைக் கேட்டு அதுவரை சேர்த்து வைத்திருந்த பணம் ஐபாயிரத்தையும் தமையனிடம் கொடுத்தாள். முன்னமே நூறு ஐம்பது என்று அவ்வப்போது அவனுக்கு அனுப்பிய வகையில் ஐயாயிரம் ரூபாய் வரையில் சங்கரன் கையில் பற்றுகியிருந்தது. இந்தப் பத்தாயிரத்திற்கும் நிலம் வாங்கப் போவதாகச் சொன்னுன், சங்கரன்.

பணம் பூராவையும் தன் தமையனிடம்கொடுத்திருப்பதாக வெளியிட மனமில்லை. தன்னிடம் பணமே கிடையாது என்று சாதிக்கவும் மனச்சாட்சி இடங் கொடுக்கவில்லை. ஒன்றும் சொல்ல முடியாமல் திகைத்தாள், பங்கஜம்மாள்.

லீலாவுக்குக் கோபம் அசாத்தியமாய் வந்தது. 'தாய்மைப் பண்பு கொஞ்சம்கூட இல்லாதபடி செய்துவிட்ட அப் பணத்தின் வலிமைதான் என்ன?—' "போ! உள்ளே போ! உன் முகத்தை வைத்துக்கொண்டு என் முன் நிற்காதே! நான்

பெண்ணுயிருந்தால் அண்ணுவை மீட்டு வருகிறேன்!'' என்று சொல்லிவிட்டு எழுந்து உள்ளே போய்விட்டாள், லீலா.

மனம் இடிந்து பங்கஜம்மாள் அப்படியே உட்கார்ந்துவிட்டாள். 'எதிர்காலத்துக்கு சாஸ்வதம்' என்று நினைத்து, சேர்த்துவைத்த பணம் சமயத்திற்கு உதவவில்லையே என்ற எண்ணம் மனதில் எழத்தான் எழுந்தது.

## அத்: 15. விரக்தி

'......உலகம் ஒரு நாடக அரங்கு. ஒவ்வொரு ஜீவராசிகளும் அதில் நாடக பாத்திரங்கள். நாடகஅரங்கின் விதிக்கு உட்பட்டுத்தான், நாடக ஆசான் வகுத்த நியதியின்படிதான், நடிக்க வேண்டும்? ஏன் இங்கு உட்கார வேண்டும்? ஏன் இந்த வார்த்தையை நீட்டி முழக்கிப் பேசவேண்டும் என்ற கேள்விக்கு இடமில்லை!'...............

இப்படியெல்லாம் மனதை எண்ணக் குதிரை மீது ஆரோகணித்து ஓடவிட்டுக்கொண்டிருந்த கணபதி தன்னையறியாது உறங்கிவிட்டான். இரவின் நிசப்தத்தை மிகைபடுத்திக்கொண்டுமணி பன்னிரண்டடித்து ஓய்ந்தது.

மறுநாள் காலை கணபதி நீண்ட நேரம் உறங்கிவிட்டான். வார்டர் கொஞ்சம் சலுகை காட்டினுன். இல்லாவிட்டால் காலை உணவின் கதி கடவுளுக்குத்தான் தெரியும்!

அன்று பத்து மணிக்குமேல் அவன் வழக்கு பூர்வாங்க பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்து அவனை ரொக்க ஜாமீனில் விடுவித்திருப்பதாக நீதிபதி அறிவித்தார்.

* * *

நல்ல வெயில் வேளையில், வியர்த்துக்கொட்ட, பங்களாவுக்குள் நுழைந்தான் கணபதி. அவன் வரவை ஆவலுடன் எதிர் நோக்கியிருந்த லீலா ஓடோடியும் வந்து அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் வடித்தாள். கணபதியின் வறண்ட உள்ளத்திலிருந்து இளமென்னகை எழுந்து உதட்டில் அரும்பி மலர்ந்தது.



## அத்: 16. தண்டனை

வழக்கு ஒரு மாதம் நடந்தது. சிவஞானத்திற்கு ஜூனியராகஇருந்த கருணுகரமேனன் தாமே முன் வந்து கணபதிக்கு வழக்காடினுர். வழக்கின் விவரங்கள் அவ்வப்போது பத்திரிகைகளில் வெளியாயின. திண்ணைப் பேச்சே என்றிருப்பவருக்குப் பேச சமாச்சாரம் கிடைத்துக்கொண்டிருந்தது.

கடைசியாக நீதிபதி தீர்ப்புக் கூறினுர். கணபதி வேலையினின்றும் நீக்கப்பட்டான். 5000 ரூபாய் அபராதம் அல்லது மூன்று மாதச் சிறைவாசமும் விதிக்கப்பட்டான்.

தீர்ப்பைக் கேட்டதும் கணபதி திடுக்கிட்டான் தண்டனை அதிகமானது என்று எண்ணினுன். கருணுகரமேனனும் அவ்வாறே எண்ணினுர்; மேல் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யவேண்டுமென்று சொன்னுர்.

ஒருமாத காலமாக கோர்ட்டும் வழக்குமாக அலைந்த கணபதிக்குப் போதும் போதுமென்ருகிவிட்டது.

அத்துடன் சென்ற ஒருமாத காலமாக வறுமை என்பதை அவன் கண்கூடாகக் கண்டான். தன் நகைகள், பங்கஜம்மாளின் நகைகள் இவைகளை விற்றுப் பணமாக்கி ஜாமீன் தொகை கட்டினுள் லீலா. குடும்பம் தினசரி வாழ்வுக்குக் கடன் பெற்று நடத்த வேண்டிய நிலையில் இருந்தது கடனும் விஷத்தைப் போல் ஏறியது. இத்துடன் அவன் வேலை போய் விடும் என்ற செய்தி தெரிந்து சில்லறைக் கடன்காரர்கள், மளிகை, புடவைக் கடைக்காரர்கள் இவர்கள் சூழ்ந்துகொண்டு கணபதியைத் தொந்தரவு செய்தனர். இவைகளும் சிவஞானத்தின் கர்மகாரியங்களுக்குவாங்கின கைமாற்றுக் கடன்களையும் கணக்கிட்டதில் இரண்டாயிரத்திற்குமேல் ஓடியது. அவன் வயிர நெஞ்சம் நெகிழ்ந்தது. தனக்கு ஜாமீனுக்கட்டிய பணத்தை வாங்கி, சில்லறைக் கடன்காரர்க

ளுக்கும் மற்ற விடாக்கண்டர்களுக்கும் முடிந்த வரை கொடுத்துவிட்டு திருமயிலாடிக்குப் போய் இருக்கும்படி லீலாவிற்குச் சொல்லிவிட்டு, சிறை புகுந்தான் கணபதி.



## அத்: 17. வரவேற்பு

பங்கஜம்மாளும் லீலாவும் ஊருள் நுழைந்து கொண்டிருக்கையில் திருமயிலீசர் ஆலயத்தினின்று பிராதக்கால மணியோசை எழுந்துவந்து கொண்டிருந்தது. கிழக்கு மேற்காக இருந்த பண்ணையார் வீதியின் மேலமுகப்பிலே இருந்த அக்கோவில் ராஜ ராஜர் காலத்தில் கட்டப்பட்டதாம். அக் கோவில் எழுந்த வரலாறு கர்ணபரம்பரையான கதையாகும். கதை ஒரு புறம் இருப்பினும் கோயிலுக்கு மான்யம் உண்டு ஆகவே அதற்கு மகிமையும் இருந்தது. பங்கஜம்மாளின் தமையன் சங்கரன்தான் தர்ம கர்த்தா!

நாதம் பயின்ற மணியோசையுடன் தேவாரப் பண்ணின் இசையும் தவழ்ந்து வந்துகொண்டிருந்தது. அதில் தீர்க்கமான தன் தமையனின் குரல் பங்கஜம்மாளின் கால்களுக்கு ஒரு தெம்பைக் கொடுத்தது.

சிவஞானம் இறந்த துக்கம் விசாரிக்க வந்த சமயத்தில் சங்கரனை நேயர்களுக்கு அறிமுகம் செய்துவைக்கப் போதிய அவகாசம் இல்லாமல் போய்விட்டது. தயை செய்து என்னுடன் திருமயிலீசர் கோயிலுக்கு வரவேண்டும்!—பாருங்கள் மேனியெங்கும் வியர்வை துளிர்த்துச் சிந்த, நாவிலே தேவாரப் பண்ணிசை வழிந்தோட, ஆனந்தப் பரவசராகி அஞ்சலிசெய்து நிற்பவர் தான் சங்கரன்!

'என்ன பக்தி! என்ன ஆஸ்திக சிரத்தை! பண்ணிலே ஒன்றி பரமனிலே லயிக்கத்தாவும் அதீத நிலை!'—இப்படி நீங்கள் நினைக்கிறீர்கள். ஆம் கண் முன் கண்டதே உண்மை உலகம் என எண்ணும் யாரும் அப்படித்தான் நினைப்பார்கள்!

இந்தப் பக்திக்கோலம் கோவிலோடுதான். வெளியே வந்தால் உண்மைச் சங்கரன் வெளிப்படுவார்! சிவஞானம் அவர்களின் அகால மரணத்திற்குச் சங்கரனை ஒருவிதத்தில் காரணமென்று கூறலாம். மனோ தத்துவ நிபுணர்கள் உறுதியாகச் சொல்வார்கள்!

கோவிலுக்கு இப்பாலேயே இருப்பதுதான் சங்கரனின் வீடு. பங்கஜம்மாளும் லீலாவும் வீட்டை நெருங்கிக்கொண்டிருந்தனர். பட்டண நாகரிகம் பறை சாற்ற நடந்துசென்ற அவ்விருவரையும் வீதியின் இரு மருங்கிலும் கிராமப் பெண்கள் பார்த்து நின்றனர். விதவைக்கோலத்தில் வந்த பங்கஜம்மாளை அவர்களால் அடையாளம் கண்டு கொள்ளமுடியவில்லை. 'தேவாரத்தார் வீட்டுக்கு பட்டணத்திலே யிருந்து யாரோ வருகிறார்கள்!' என்று மட்டும் சொல்லிக் கொண்டனர். பங்கஜம்மாளின் தமையன் வீட்டைக் கிராமத்து ஜனங்கள் தேவாரத்தார் வீடு என்று மரியாதையாகக் கூப்பிடுவது வழக்கம்.

எதேச்சையாக வெளியில் வந்த பார்வதி பங்கஜம்மாள் லீலா இவர்கள் வருவதைக் கவனித்தாள் "வந்துவிட்டார்களா? நான் அப்போதே நினைத்தேன். அவர்களுக்கு வேறு போக்கிடம் ஏது? இங்குதானே அண்ணனின் பெரியபண்ணை ஆள்பவர் இல்லாமல் வீண்போகிறது!" என்று முணுமுணுத்தாள். 'வருபவர்கள் வழியிலா தங்கிவிடப்போகிறார்கள்? வரட்டும் இவர்களை எதிர் கொண்டு வேறு அழைக்கவேண்டுமா' என்று எண்ணி உள்ளே போய்விட்டாள்.

## அத்: 18. உள்ளும் புறமும்

அண்ணாவின் வீட்டில் இருந்தபோதிலும் தன் நிலை உணராத அன்னியர்வீட்டில் இருப்பதாக உணர்ந்தாள் பங்கஜம்மாள். நல்ல நிலையில் இருக்கும்போது பரிந்து உபசரித்த பார்வதியின் பேச்சு இப்போது ரத்தினச் சுருக்கமாகவே இருந்தது. அவள் நடந்துகொள்ளும் விதத்தில் ஒருவித அலக்ஷியம் விரவியிருந்தது.

பங்கஜம்மாள் முன்பு இருந்த நிலையை உணராத புதுப்பெண்ணாக இருந்தால் இதை அவ்வளவாகக் கருதமாட்டாள். பார்வதி அப்படி அல்லவே! அவளுக்குப் பங்கஜம்மாள் வாழ்ந்த வாழ்வு தெரியாதா என்ன?

பல்லைக் கடித்துக்கொண்டு நாட்களை எண்ணி வந்தாள். லீலாவுக்குப் பார்வதி நடந்துகொள்ளும் விதம் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. கடந்த ஒருமாதகாலமாக அவள் மனதில் எத்தனையோ மலைபோன்ற எண்ணங்கள் அலைபாய்ந்தன. 'தேவாரத்தார்' வீட்டில் அவளுக்கு இருக்கவே பிடிக்கவில்லை. இதைவிட்டு வேறு எங்குபோவது

என்றும் நிர்ணயிக்க முடியவில்லை. கடைசியில் அவள் மனதில் ஒரு எண்ணம் எழுந்தது.

அன்று சனிக்கிழமை. மாலைப் பொழுது. மூன்றுவித எண்ணெய்களைக் கலந்து எடுத்துக்கொண்டு திருமயிலீசர் கோவிலுக்குப் போயிருந்தாள், பார்வதி. எதிரே இருந்த பெரிய பண்ணையார் வீட்டில் சீட்டுக் கச்சேரியில் மூழ்கியிருந்தார், சங்கரன். பங்கஜம்மாள் அன்று இரவுச் சமையலைச் செய்துவிட்டு, காற்றோட்டமாக வந்து உட்கார்ந்தாள்.

அப்போது லீலா பங்கஜம்மாளின் முன்சென்று உட்கார்ந்தாள்.

"ஏனம்மா! நீயும் பார்வதியுடன் கோயிலுக்குப் போகவில்லையா? போய்வருவதுதானே! சனீசுவரனையாவது வலம் வந்து வணங்கினாலாவது நமது கஷ்டகாலம் தீராதா?'' என்றாள், பங்கஜம்மாள்.

லீலாவுக்குக் கோபம் வந்துவிட்டது. "நமக்குக் கஷ்டம் உண்டானது உன்னாலும் அழகானமாமாவாலுந்தானே! நீங்கள் இங்கு மலைபோல் இருக்க ஒரு பாவமும் அறியாத சனீசுவரனைச் சுற்றி என்ன பலன்? நீங்கள் இருவரும் வேண்டுமானால் சேர்ந்து உட்காருங்கள். உங்களைச் சுற்றிவந்து உங்கள்தலையிலே தேங்காய் உடைக்கிறேன்."— லீலா வேண்டுமென்றே ஊசி குத்துவதைப் போன்ற வார்த்தைகளைப் பிரயோகித்தாள். புண்பட்டிருந்த பங்கஜம்மாளின் இதய அந்தரங்கத்திலே இது சுருக்கெனத் தைத்தது.

"புண்பட்ட மனதை ஏன் இப்படிக் குத்திக் கிளறுகிறாய் லீலா?" என்று சொல்லும்போதே பங்கஜம்மாளின் கண்களில் நீர் சுரந்தது.

" 'பார்வதியுடன் நீயும் கோவிலுக்குப் போகவில்லையா?' ன்னு கேட்கிறாயே! அவள் என்னை மதித்து அழைத்தாளா என்ன? அவள் தன்னை வாலைக்குமரியாக நினைத்துக்கொண்டு தன்னைச் சிங்காரித்துக்கொண்டது என்னமோ! அவள் பட்டுப் புடவை கட்டியங் கூறப்போவது என்னமோ! அதுவே அவளுக்குப் பெருமையாக இருக்கிறது. அவளுக்கு என் நினைவுகூட இருக்கிறதா என்ன? அதெல்லாம் அவள்மேல் பிசகில்லை. நாம் இங்கு வந்திருக்கிறோமே அதைச்சொல்!''

"வேறு என்னம்மா செய்வது? பஞ்ச பாண்டவர் வனவாசம் செய்ததுபோல் கொஞ்சநாள் செய்யவேண்டியிருக்கிறது. அண்ணாவுக்கு விடுதலையாகி ஒரு வேலை தேடிக்கொள்ளும்வரை நமக்கு வேறு போக்கிடம் ஏது?''

"முடியாது. அதுவரை நீ வேண்டுமானால் இங்கேயே இரு! என்னால் இனிமேல் ஒரு நாளைக்குக் கூட இந்தவீட்டில் இருக்க முடியாது!''

"ஏன் லீலா! ஏன் இப்படி என் மனதை அலைக்கிறாய்? வேறு என்னதான் செய்யச் சொல்லுகிறாய்?''

"உன் கையில் எவ்வளவு பணம் இருக்கிறது? மாமாவிடம் எவ்வளவு கொடுத்து வைத்திருக்கிறாய்? இதையெல்லாம் உன் பெண்ணான என்னிடம்கூடச் சொல்லமாட்டேனென்கிறாய்! இன்னும் உன்னோடு ஆகவேண்டியதென்ன? உன்னைப்போல் மானமின்றி என்னையும் இந்த வீட்டில் நாயைப்போல் ஒட்டிக்கொண்டிருக்கச் சொல்கிறாயா?''

வேண்டாம், லீலா! போனதெல்லாம் போகட்டும். சொல்கிறேன் கேள்! என்னிடம் செல்லாக் காசுகூட இல்லை! சங்கரனிடந்தான் பத்தாயிரம் கொடுத்து வைத்திருக்கிறேன்!''

"அம்மா! அப்பாவிருண்டை என்றால் அது உனக்கே தகும். போனதெல்லாம் போகட்டும். மலைபோன்ற அப்பாவை வாரிக்கொடுத்துவிட்டோம். அவர் உழைப்பால் சேர்த்த பணத்தை யாவது மீட்டுக்கொள்வோம். மாமாவிடமிருந்து ரொக்கமாகப் பணம் பூராவையும் வாங்கிக்கொள். அப்பாவின் கடிதத்தையும் எப்படியாவது வாங்கிக் கொடு! அதில் அப்பா என்ன எழுதியிருக்கிறார் என்று பார்க்கவேண்டும்!'' என்று சொன்னாள், லீலா.

## அத்: 19. சமர்ப்பணம்

மறு நாள் சங்கரன் தனிமையில் இருந்த சமயம் பார்த்துப் பேச்சைத் துவக்கினாள், பங்கஜம்மாள்.

"ஏன் அண்ணா! இவர் இறந்தபொழுது வந்த சமயத்தில் கவர் ஒன்று எடுத்துப் பார்த்தாயே!''...

"ஆமாம்! பைத்தியக்கார மனிதன் என்ன என்னமோ பேத்தியிருந்தார்! அதற்கென்ன இப்போது?''

"அது இப்போது உன்னிடம் இருந்தால் கொடேன்!''

"எதற்காக? நான் சொல்வதில் நம்பிக்கையில்லையா? தன்னுடைய ஆஸ்திக்கு உயில் எழுதி வைத்திருப்பார் என்பது உன் எண்ணமா?

"இல்லை. கடிதவிவரம் லீலாவுக்கும் தெரியும். அவள் நச்சரிக்கிறாள். அதை அவளிடம் கொடுத்து விடலாமே என்று கேட்டேன்!''

"பேஷாக் கொடு! இதோ இருக்கிறது கடிதம் எடுத்துத் தருகிறேன்!" என்று சொல்லிக்கொண்டே எழுந்துசென்று அலமாரியைத் திறந்தான், சங்கரன். அவன் ஒரு மூலையில் இருந்த கடிதத்தை எடுத்துப் பங்கஜம்மாள் முன் வீசியெறிந்தான். அவ்வீச்சில் அவன் மனதில் எழுந்த எண்ணத்தைப் பங்கஜம்மாள் உணர்ந்து கொண்டாள். 'ஒரு பொருட்டாக வைத்துப் பேச இயலாத இக் கடிதத்தைக், கேட்க இயலாத இக் கடிதத்தைக், கேட்கையிலேயே அண்ணாவுக்கு இவ்வளவு கோபம் வருகிறதே! பணம்

திருப்பிக் கொடுக்கும்படியும்கேட்டால் எவ்வளவு கோபம் வரலாம்!'

இருந்தாலும் அவளால் கேட்காமல் இருக்க முடியவில்லை. சங்கரன் மீண்டும் ஈஸிசேருக்கு வந்து உட்கார்ந்ததும், "அண்ணு!.........எனக்கு ஒரு வழி பண்ணிவிட்டால் தேவலே. எனக்கு இங்கு இருக்கவே பிடிக்கவில்லை. லீலா பிடிக்கும் பிடிவாதம் சகிக்க முடியவில்லை. பாம்பை மடியில் கட்டிக்கொண்டு வழிநடப்பதைப்போல் இருக்கிறது!"

"......இது என்ன பங்கஜம். இப்படி வயசு வந்த பெண் தன் இஷ்டப்படி எதையும் செய்து கொண்டு போகவிடுவதற்குத்தான் பெரியவர்கள் என்று நாம் இருக்கிறோமா? அவள் சொல்கிறுள், அதன்படி செய்யவேண்டுமென்று இனியும் சொல்லாதே!"

"உனக்கு இந்தக்காலப் பெண்களின் குணம் தெரியாது அண்ணு! உனக்குப் பிள்ளை, பெண் என்று இருந்தால் நான் கஷ்டப்படுவதின் தன்மையை உணர்ந்திருப்பாய். கடவுள் உனக்கு அந்தக் கஷ்டங்களை எல்லாம் கொடுக்கவில்லை!"

"அப்படிச் சொல் பங்கஜம். உன் வாயாலேயே இது வரவேண்டுமென்றுதான் எதிர்பார்த்தேன். எனக்கு ஒரு யோசனை...ஏன் பங்கஜம்?...... உனக்கு இப்போது வயது என்ன ஆகிறது ஞாபகம் இருக்கிறதா?"

"இல்லாமல் என்ன! இப்போது நாற்பத்தாறு நடக்கிறது!"

"உனக்கு இரண்டு வயதுதான் நான் மூத்தவன்! இல்லையா?"

"ஆமாம்......"

"எனக்கு இனிமேல் குழந்தை பிறக்காதா என்ன?

"ஏன் பிறக்காது? அறுபது வயதில் கல்யாணம் செய்துகொண்டு குழந்தை பெறவில்லையா என்ன?"

"உம்! அதைச் சொல்லு! ஆகவே நம் லீலாவை இரண்டாந்தாரமாகக் கட்டிக்கொள்கிறேன்!...... ஏன் என்ன யோசிக்கிருய்? பார்வதியுடன் லீலாவும் உடன் ஒத்தவளாக இருந்து எப்படிக்குடித்தனம் செய்யப்போகிருளோ என்று நினைக்கிருயா? இவள் கிடக்கிருள் மலட்டு முண்டை! இவளை வைக்கிற இடத்திலே வைத்தால் எல்லாம் சரியாய் விடும். அதை நான் பார்த்துக்கொள்கிறேன். லீலா வைத்ததுதான் சட்டமென்று நடக்குமென எண்ணிக்கொள்ளேன்! அவளுக்கு ஒரு குழந்தையும் பிறந்துவிட்டால்.........பிறகு......ஏன் பங்கஜம்! ஏன் பேசமாட்டேனென்கிருய்?..........." என்று பல்லை இளித்தான், சங்கரன்.

பங்கஜம்மாள் மௌனமாக இருந்தாள். 'அண்ணு தன்னைப் பார்த்து இப்படிக் கேட்கும் நிலை வந்ததே! கிளிபோன்ற என்மகளை இவனுக்கு இரண்டாந் தாரமாகக் கொடுக்கவேண்டுமாம். பதினறு வயதுகூட நிரம்பாத அவள் இவனுக்கு மனைவியாக இருந்து என்ன சுகத்தைக் காணப் போகிருள்? ஆசை வெட்கமறியாது; பணம் பண்பறியாது! என்பது சரியாகத்தான் இருக்கிறது. நல்லவேளை! பார்வதி வீட்டில் இல்லாத சமயத்தில் இப்படிச் சொன்ஞன். அவள் இருக்கும் சமயத்தில் சொல்லியிருந்தால் இவன் சேதி தெரியும்! அண்ணுவாயிற்றே என்று நான் கொடுத்தமரியாதைக்கு தக்க பலன்தான்! கரும்பு ருசித்தால் வேருடன் பிடுங்க ஆசை வராதா என்ன? இந்த யோசனை இவன் மூளையில் எப்போது தோன்றிற்ரே தெரியவில்லை! அவர் இருந்திருந்தால் இப்படிக் கேட்க மனந் துணிவு உண்டாகியிருக்குமா? அல்லது கணபதியின் முன்தான் இப்படிப்பேச தெம்பு உண்டா இவனுக்கு? சீச்சி! இவன் மனிதத்தன்மை இவ்வளவுதானு——

"......என்ன பங்கஜம்! என்ன தீவிரமாக யோசனை செய்கிருய்? கணபதி என்னசொல்வானே என்று பயப்படுகிருயா என்ன!"

"இல்லை அண்ணு!......உனக்கு இரண்டாந்தாரம் கல்யாணம் செய்துகொள்ளவேண்டும்; புத்திர சந்தானம் கிடைக்கவேண்டும் என்று எண்ணமிருந்தால் நானே பெண்பார்த்துக் கல்யாணம் செய்துவைக்கிறேன். ஆனுல் லீலாவைப் பற்றிப் பேச்செடுக்காதே! அவள் உனக்கு ஏற்றவள் அல்ல!"

"வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவார்களா என்ன? ஏன்? நான் லீலாவைப் போல் படித்தவன் அல்ல என்று சொல்கிருயா?— அதனுலென்ன! உலகிலே எப்படி வாழ்வது என்று எனக்குத் தெரியும். இரண்டு தலைமுறைக்கான சொத்தைச் சேர்த்து வைத்திருக்கிறேன். அப்பா இருந்தபோது நம் குடும்பம் இருந்த நிலவரமும் இப்போது இருக்கும் நிலவரமும் உனக்குத் தெரியும். முற்றத்திலுள்ள களஞ்சியங்களே இதற்குச் சாட்சியம். உண்ண உணவும், உடுக்க உடையும் சுகிக்கச் செல்வமும் என்னிடமிருக்கின்றன. இந்த நவீன உலகில் வேறு என்ன வேண்டும்? ஏன் பங்கஜம்!...சொல்லேன்!"

"...என்னதான் இருந்தாலும் எனக்கு இஷ்டமில்லை!..."

"ஏன்?"

"இஷ்டமில்லை; அவ்வளவுதான்!"

"அண்ணுவின் மீது தங்கைக்கு அவ்வளவு அன்பு!"

"அன்பை அளவிட எண்ணுவது இதனுலல்ல. மருக்கொழுந்தைப்போல் இருப்பது ஒரே பெண். அவளுக்கு ஒரு குறைவும் இல்லை. இரண்டாங்

தாரமாக உனக்குக்கொடுத்து, பார்வதியின் பக்கலிடையில் கிடந்து அவள் நொந்து சாகவேண்டியதில்லை!''

''ரொம்பசரி. ஊரில் பெண்களுக்கு ஒன்றும் பஞ்சமில்லை. என்னைப்போல் நல்ல நிலையில் உள்ள கணவன் கிடைப்பதுதான் கஷ்டம். அவள் கஷ்டப்படவேண்டுமென்று தலையில் எழுதியிருந்தால் நான் அதை அழித்து எழுத முயல்வது வீண்தான் எக்கேடாவது கெட்டுப் போங்கள்!''

''சரி! நீ என்றும் சிரஞ்சீவியாய் மகாராஜனாய் இரு! நான் கொடுத்துவைத்த பணத்தையெல்லாம் மட்டும்கொடுத்துவிடு, எனக்கு இங்கு இருக்கவே பிடிக்கவில்லை!'' பங்கஜம்மாளுக்குக் கோபம் வந்துவிட்டது. படபடவென்று பேசிவிட்டாள்.

''ஓ! பணமா வேண்டும்! ஏது பணம்?''

''நான் உன்னிடம் கொடுத்த பணத்தைத் தான் சொல்கிறேன்! நிலபுலன்கள் என் பேரில்வாங்கி வைக்கவேண்டாம். வட்டி வாரம் என்ற வகையில் உன் பற்றுனவைகள் போகட்டும். நான் கொடுத்த ரொக்கப்பணத்தை கணக்குத் தீர்த்துக் கொடுத்துவிடு!''

''ரொக்கமா! கணக்குத்தீர்ப்பதா? ஏன்? சண்டைபிடித்து என் கௌரவத்தை ஊரம்பலப் படுத்தக் கதைகட்டுகிருயா என்ன?''

''அட! நீ விளையாகக்கூட அப்படிச் சொல்லிவிடலாம், ஊரைச் சுற்றிலும் கடன் வைத்து விட்டுப்போன ஸர். சிவஞானம் அவர்களின் மனைவி தன் அண்ணாவிடம் பத்தாயிரம் ரூபாய் சேர்த்து வைத்திருந்தாள் என்று சொன்னால் உலகம் நம்பமுடியாத பேச்சுதான்! எனக்கு இப்போது தெளிவடைந்த புத்தி அப்போது நெறி கெட்டுத்தடுமாறியிருந்தது!''

''அப்போதில்லை.........இப்போதுதான் நெறி கெட்டுத் தடுமாறுகிறது! பணமாவது நீ என்னிடம் கொடுக்கவாவது! நொடித்துப் போய் வந்து சேர்ந்தாயே என்று நிழலளித்தால் மரத்தை வேரோடு கல்லிக்கொண்டு போய்விடுவாய் போல் இருக்கிறதே! ஏதேனும் கனவு கண்டாயா என்ன?''

''அட பாவி! நீ விளையாட்டாகத்தான் இப்படிப் பேசுகிருயா? அல்லது பணத்தாசையால் உன் கண் இருண்டுவிட்டதா?''

''என் கண் சரியாக இருக்கிறது. வலிய சம்பந்தம் பேசும் அண்ணாவின் பேச்சைத் தட்டும் நிலையில் உன் மனம்தான் மாறுதலை அடைந்திருக்கிறது. சீர்திருத்திக்கொள். பணம்! பணம்! என்று அலையாதே! உனக்கு இஷ்டமானல் இப்பொழுதே கூட இந்த வீட்டைவிட்டு நீ போய் விடலாம்!''

''அட பாவி! துரோகி! எத்தனை ஆயிரம் ரூபாய்களை இரண்டாம் பேருக்குத்தெரியாமல் என்னிடம் வாங்கிக்கொண்டு வந்தாய்!......அண்ணா! என்னைச் சோதித்துப் பார்க்கிருயா? வேண்டாம்! நீ இப்படியெல்லாம் பேசினல் யாருக்குத்தான் கோபம் வராது? வேண்டாம் அண்ணா! பணம் இப்போது உன் கையில் இல்லையானல் பிறகு சமாளித்துக் கொடு! அதுவரையில் நான பொறுத்துக்கொண்டிருக்கிறேன். நான் அவ்வளவு கிராதகியல்ல. உன்னைக் கிட்டிகட்டினமாதிரி நெரிக்க மாட்டேன்!''

''அப்படி வா வழிக்கு! லீலாவை எனக்கு மணம் செய்துகொடுப்பதானல் சொத்துப் பூராவையும் நாளைக்கே அவள் பெயருக்கே சாசுவதமாக எழுதிவைக்கிறேன். இல்லாவிட்டால் 'உனக்கும் பேப்பே உங்கள் அப்பனுக்குப் பேப்பே' தான்! ஒரு பெண்ணுக்கு அவ்வளவு பிடிவாதம் இருக்கும்போது ஆண் மகன் இளைத்தவனா என்ன?''

''அண்ணா!.........அண்ணா!......... வேண்டாம். லீலாவை நீ மணம் செய்துகொள்ள நினைக்காதே! இப் பேச்சைக் கேட்டாலே அந்தப் பெண் கிணற்றில் விழுந்துவிடுவாள். அவள் குணம் அத்தகையது. பணத்தில் பாதியேனும் கொடு! கணபதி விடுதலையாகி வந்து ஒரு தொழிலில் இறங்கும்வரை காலந் தள்ள உதவி செய்!' கல்லும் கரையும்படி பேசினள். பங்கஜம்மாள், சங்கரன் அதற்கு மைந்துகொடுப்பவனாக இல்லை.

இதில் விந்தை என்னவென்ருல் லீலாவை மணம் செய்துகொள்ளவேண்டுமென்பது அவன் இதயபூர்வமான எண்ணமல்ல பணம் முழுவதையும் கபளீகரம் செய்வதற்கு இராப்பகலாக யோசனைசெய்து முடித்துவைத்திருந்ததைப் பங்கஜம்மாளின் முன் விரித்துவிட்டான்.

இந்நிலையில் உள்ளே நுழைந்தாள், பார்வதி. ஏதோ சொல்லவாயெடுத்த சங்கரன் மென்று விழுங்கிவிட்டான். பங்கஜம்மாளின் உள்ளம் கொழுந்து விட்டு எரிந்துகொண்டிருந்தது. அண்ணாவென்று அதுவரை அழைத்த அந்தப் பிரகிருதி நாகம்! உடன்பிறந்தே கொல்லும் வியாதியைப்போன்றதோர் வியாதி! என்றுதான் தோற்றியது. அவளால் தன் இதய விம்மலை வார்த்தைகளால் வெளியிட முடியவில்லை.

எழுந்து நேரே பூஜையறைக்குப் போனாள். தன் தந்தையும் தாயும் பக்தி சிரத்தையுடன் வணங்கிய ருத்திர மூர்த்தியின் சிலைமுன்னே உட்கார்ந்து, கண்ணீரை மாலை மாலையாகத்தொடுத்து அவன் பாதகமலங்களில் சமர்ப்பணம் செய்தாள்.

## அத்: 20. கணபதியின் கடிதம்

அன்று தபால்காரன் கடிதத்தைக் கொடுத்துவிட்டு வாசல்படியிலேயே நின்றான். கடிதத்தை ஆவலுடன் வாங்கிய லீலாவின் முகத்

தைப் பார்த்தபடியே, சோர்ந்து களைத்துப் போயிருந்த தன் முகத்தைத் தூக்கித் தலைப்பா கைத்துணியால் துடைத்துக்கொண்டான். அழகு



மிருந்த லீலாவின் முகத்திலே அவன் சோர்வைப் போக்கக்கூடிய தனி அன்பு தவழ்வதை உணர்ந் தான் அவன். "ஒரு வாய் மோர் கிடைக்குமா, அம்மா! ரொம்ப களைப்பா இருக்கு!" என்று கேட்டான். மோர் இல்லாவிட்டாலும் அவள் கையால் ஒரு குவளை நீர் குடித்தால் அவன் ஆயா சம் நீங்கும்போல் அவனுக்குப் பட்டது.

கவரை வாங்கிய லீலா மேல் விலாசத்தைப் பார்த்தாள். கணபதியின் கையெழுத்து! அவள் பெயருக்கு விலாசம்! அண்ணாவின் கையெழுத் தைப் பார்த்ததும் அவனையே நேரில் பார்ப்பது போல் இருந்தது அவளுக்கு. அந் நிலையில் தபால்காரன் மோர் கேட்டது இலேசாகக் காதில் பட்டது. "என்ன வேண்டும்" என்று மீண்டும் கேட்டாள்.

"ஒரு குவளை மோர் கொடுத்தால் தேவலை யம்மா, தங்கச்சி! வெய்யில் தாங்கல்லே! உன் கடிதத்திற்காகத்தான் இண்ணைக்கு நம்ப ஊர் பக் கமா வந்தேன்!" என்று பொடி வைத்துப் பேசி னான்!

அண்ணாவிடமிருந்து கடிதம் கொண்டுவந்து கொடுத்த அவனுக்கு மோரல்ல, தன் வசத்தில் அமிர்தமே இருந்தால்கூட லீலா கொடுத்திருப் பாள். அவள் மனம் அப்போது அந் நிலையில் இருந்தது. நேரே சமையலறையுள் சென்று, மோர் வைத்திருந்த கற்சட்டியை எடுத்து, ஒரு வெள்ளி டம்ளர் நிறையக் குழம்பான மோரை விட்டு, உப்பிட்டுக் கலக்கி எடுத்துக்கொண்டு வெளித் திண்ணைக்கு வந்தாள். கடிதங்களை அடுக்கிக்கொண்டிருந்த தபாற்காரன் நிமிர்ந்து பார்த்தான்.

கேட்ட வாய்க்கு, 'இல்லை' என்று சொல்லாமல் மோர் கொண்டுவந்துகொடுத்துவிட்டதைக் கண்ட அவன் உள்ளம் குளிர்ந்தது. "நீங்க மகராஜியாய், பதினாறும்பெத்து பெருவாழ்வு வாழணுமம்மா!" என்று வாழ்ததிக்கொண்டே மோரை வாங்கிக் குடிக்கத் தொடங்கினான்.

## அத்: 21 கைதியின் மனம்

கடிதத்தைப் பிரித்து, திண்ணையிலேயே உட் கார்ந்து படிக்கலானாள், லீலா:

" அன்புள்ள சகோதரிக்கு,

என் அன்பும் ஆசீர்வாதமும். இப்போது உன் கையில் கிடைத்திருக்கும் இந்தக் கடிதத்தை எழு தவேண்டுமென்று எனக்கு நீண்டநாளாக எண் ணம். நான் சிறையுள் புகுந்து இரண்டொரு நாட்கள் ஆனவுடனேயே இந்த எண்ணம் எழுந் தது. 'திடீரென்று உண்டான சூழ்நிலை மாறுத லால் மனம் பலவீனமடைந்துவிட்டது. நாளா வட்டத்தில் சரியாய்விடும் என்று சமாளிக்க முயன்றேன். முடியவில்லை. பிறகு ஒரு கடிதம் எழுதியே தீர்வது என்ற முடிவுக்கு வந்தேன்!

சிறையுள் கடிதம் எழுதுவதற்கு வசதி இல்லை. காலையில் பல் தேய்க்கக் கிடைக்கும் கரியால் வேண்டுமானால், கக்கஷ் சுவர்களில், ஜெயில் சூப்பிரண்டையும் இந்திய அரசாங்கத்தையும் மனம் கொண்டமட்டும் திட்டி எழுதலாம்! கடி தம் எழுத முடியாது! முன் சொன்ன கைங்கர் யத்தை எனக்கு முன்வந்து இருந்துசென்ற சகோதரக் கைதிகள் வெகு திறமையுடன் கையாண்டிருந்ததால், படித்த எனக்கென்று அங்கு ஒரு சிறு இடங்கூட இல்லை!

கடிதம் பேனா இவைகளை, வார்டர் என்ற பெய ரில் ஆயுள் சிறைவாசம் செய்யும் அந்தப் பிரகிருதி யிடம் பெற்று இக் கடிதத்தை எழுதி முடித் தேன். இக் கடிதம் சிறையினின்றும் விடுபட்டு உன் கையில் கிடைத்த அன்றுதான் நிலை!

லீலா! நான் சிறையென்றால் மிகத் துச்சமான எண்ணம் கொண்டிருந்தேன். மாமியார் வீட்டுக் குப் போவதுபோல் நம் தேசியத் தலைவர்கள் நுழைந்து நுழைந்து வெளி வருவதைக் கண்டு ஏமாந்துவிட்டேன். சிறை என்றால் சிறைதான். அதுவும் கருணைமிக்க மன்னர் சர்க்கார் நிர்மா ணித்த சிறைக்கூடங்கள் அசல் நரகலோகங்களே! சூழ்நிலை எனக்குக் கொஞ்சங்கூடச் சகிக்கவில்லை. இப்படியே இன்னும் ஓரிருவாரங்கள் இருந்தால் பைத்தியமே பிடித்துவிடும்போல் இருக்கிறது. நான் செய்த தவறு மகத்தானது என்று இப் போது எனக்குத் தோன்றுகிறது. சிறைவாசத் திற்குக் காரணமான அந்த நிகழ்ச்சி சதா என் மனதைக் குழப்பிக்கொண்டே இருக்கிறது. இதி லிருந்து விடுபட நான் எவ்வளவு முயன்றும் முடி யவில்லை.

அம்மாவிடம் இக்கடிதத்தைக் காண்பி. என் அபராதத் தொகையைக் கட்டச் சொல்! நான் விடுதலையாகி வந்ததும், எப்பாடு பட்டேனும் அவள் பொக்கிஷத்தைச் சரிசெய்துவிடுகிறேன், என்று சொல். அத்துடன் நான் அவள்வயிற்றில் சிறைவாசம் செய்த மகன் என்றும் ஞாபகப் படுத்து! அவளுக்குப் பணத்தாசை பிறக்கு முன் பிறந்தவன் என்பதையும் சொல்லிவை! கல்லும் கரையும்படி இனிமையாகப் பேசும் திறமுள்ள நீ அம்மாவின் மனதைத் திருப்பி, என்னை விரைவில் இந்த நரகத்திலிருந்து விடுவிப்பாய் என்ற எண்ணத்துடனேதான் இக் கடிதத்தை எழுதினேன்!

உன் அன்புள்ள அண்ணு,
கணபதி''

'இரும்பு நெஞ்சமுள்ள அண்ணுவா இக் கடிதத்தை எழுதினுன்! மனம் எவ்வளவு நெகிழ்ந்து சாம்பியிருக்கவேண்டும்!' என்று எண்ணமிட்ட வண்ணம் வாடிய முகத்துடன். கடிதத்தைப் படித்து, கவருள் வைத்துக்கொண்டு அம்மாவைத் தேடிச் சென்ருள், லீலா.

## அத்: 22. தாய் தாய்தான்

சங்கரன் சொன்ன சொற்கள் யாவும் பங்கஜம்மாளின் செவிகளில் ஒலித்துக்கொண்டே இருந்தன. முதல் நாள் இரவு அவள் கண்ட தொடர்பற்ற கனவுகள் மனதைப் பின்னும் குழப்பின.

......சிவஞானம் அவர்கள் ஆவி உருவத்தில் அவள் முன் தோன்றி, கலகலவென்று சிரித்தார். பணத்தையே நம்பின பங்கஜம்! பார்! நீயே தெரிந்துகொள்! பண-விஷம் தலைக்கேறியவுடன் மனிதன் எப்படியெல்லாம் மாறிவிடுகிருன் பார்!...' என்று கேட்பதைப்போல் இருந்தது.

அவள் பதிலுக்கு ஏதோ பேச வாயெடுத்தாள். அதற்குள் கண் விழித்துக்கொண்டாள்; கனவு கலைந்துவிட்டது. ஜாமக் கோழி கூவுவது தெளிவாகக் கேட்டது.

புரண்டு படுத்து உறங்கிய பிறகு மறுபடியும் ஒரு கனவு கண்டாள்.

......கணபதி சிறையுள்ளே அங்கும் இங்குமாக நடந்துகொண்டிருந்தான். பளபளவென்றிருந்த அவன் மேனி மங்கி நலிந்திருந்தது. ஊக்கம் மிக்க அவன் கண்கள் பசுமையடைந்து குழியுண்டிருந்தன. நடப்பதை நிறுத்தி அவன் காறி உமிழ்ந்தான். 'சீ! இது மனிதர்கள் வசிக்கும் உலகமல்ல! பேய்கள்! நரிகள்! பிணந்தின்னி கழுகுகள் வசிக்கும் கோர மயானம்!—இல்லை... ஹஹ்ஹா! தப்பு! தப்பு!...... இது......இது...... ஆம்!...ஆம்!... பணம்!...பணம் என்னும் பத்திரகாளி கட்டின்றி, காவலின்றி, சட்டமின்றி, நியதியின்றி, தலைவிரித்தாடும் அகோரப் பாழ் நிலம்! இங்கு இவள் கண்டதே காட்சி கொண்டதே கோலம்! ஹஹ்ஹா!......'' கணபதி கலகலவென்று சிரித்தான். சிறைக் கதவுகள் படபட வென்று திறந்துகொண்டன. 'பணம்! பணம்! பணம்!' என்று கூவிக்கொண்டே பட்டணத்து வீதி முழுதும் சுற்றித் திரிந்தான் கணபதி.

கனவில்கூட இக் கண்ணராவிக் காட்சியைக் கண்டுகொண்டு அவளால் சும்மா இருக்க முடியவில்லை. 'கணபதி! கணபதி!' என்று கூவி அழைத்துக்கொண்டு அவன் பின்னுல் ஓட எத்தனித்தவள் விசிப்பலகையின் மீதிருந்து தடாலென்று கீழே விழுந்தாள். முழங்கையில் பலமாக அடிபட்டுவிட்டது. வலி பொறுக்க முடியவில்லை; தடவிவிட்டுக்கொண்டே தரைமீது புடவைத் தலைப்பை விரித்துப் படுத்துக்கொண்டாள். அதன் பிறகு இரவு முழுதும் தூக்கமே வரவில்லை. மனம் எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணிக்கொண்டிருந்தது.

மறு நாள் காலை கனவின் போதை முழுதும் தெளிவுருமலும் சங்கரனின் நேற்றைய பேச்சுக் காதைவிட்டு அகலாமலும் இருதலைக்கொள்ளி போல் வேதனையுற்றிருந்த பங்கஜம்மாளிடம் கணபதி எழுதிய கடிதத்தைக் கொடுத்தாள், லீலா.

கடிதத்தைப் படித்து முடித்ததும் தான் கண்ட கனவின் பயங்கர நினைவுகள் மீண்டும் பங்கஜம்மாள் மனதில் எழுந்தன. வானம் பார்த்த நிலத்தில் உள்ள கிணற்றின் நீரைப்போல் அவளுள் படு ஆழத்தில் அமுந்திக் கிடந்த தாய்மை மேலோங்கி எழுந்தது. 'ஐயோ! கண்ணே! என்ன பாவம் செய்து என் வயிற்றில் பிறந்தாயோ! பெற்ற பிள்ளை சிறையில் கிடந்து வாட நான் தினம் இந்த வயிற்றுக்குக் கொட்டிக்கொள்கிறேனே! பெற்ற வயிறு பற்றி எரியும் படியான நிலையில்கூட நான் சேர்த்து வைத்த பணம் உதவுவதற்கில்லையே! சகோதரனே சதிகாரனே! நெஞ்சிலே ஈரமில்லாத காபூலிக்காரன்கூட இத்தகைய நயவஞ்சகம் செய்ய எண்ணமாட்டானே!' என்று அங்கலாய்த்தாள். அந்த நிலையில் அழுவதைத் தவிர அவளால் வேறு ஒன்றும் செய்ய இயலவில்லை. கடிதத்தைக் கையில் வைத்துக்கொண்டு விசித்து விசிந்து, சிறு குழந்தையைப் போல் அழ ஆரம்பித்துவிட்டாள்.

பங்கஜம்மாள் அழுதது லீலாவுக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. 'பத்தாயிரம் ரூபாயை அண்ணுவிடம் கொடுத்துவைத்துவிட்டு இப்படி அழுவதன் அர்த்தமென்ன? பணத்தைச் செலவழிப்பதற்குப் பதில் கண்ணீரைத் தாராளமாகச் செலவழிக்கிருளா இந்த நீலி! இதற்கெல்லாம் மூலகாரணமான இவள் அழுகைக்கு யார் இரங்கப் போகிருர்கள்! அழுவதால் ஆவதுதான் என்ன? என்று நினைத்தாள் லீலா. ''இப்போதாவது உன் மனம் திரும்பியதே! இதோ நாளைக்கே அபராதப்பணத்தைக் கட்டிவிட்டு விடுதலைசெய்கிறேன் உனக்கு இல்லாத பணம் வேறு எதற்கு?'' என்று பங்கஜம்மாள் சொல்வாள், சொல்ல

வேண்டும் என எதிர்பார்த்தாள், லீலா. பங்கஜம்மாள் இப்படி ஒன்றும் சொல்லாமல மௌனமான அழுகையில் இறங்கிவிட்டது அவளுக்குப் பிடிக்கவில்லை.

"போதுமம்மா! வெளி வேஷத்துக்காகக் கண்ணீரை வீணுக்காதே! மாமாவைக்கேட்டு இப்போதே ஐயாயிரம் ரூபாயை வாங்கிக்கொண்டு புறப்படு. நீயும் நானும் பட்டணம்போவோம். அண்ணுவை விடுவித்துக்கொண்டு வருவோம்! எழுந்திரு! மாமாவிடம் கேள்! பெட்டியுள் பூசாரம் பூத்துக்கிடக்கும்பணத்தை வெளியே எடுக்கச்சொல்!" என்று கடுகடுப்பாகச் சொன்னுள், லீலா.

"அவன் கிடக்கிருன் சண்டாளன். தன் இரு கைகளையும் அவன் இல்லை என்கிருனே. இப்போது தான் அவனுக்கு இளமை திரும்பியிருக்கிறது. உன்னை அவனுக்குக் கல்யாணம் செய்துகொடுக்க வேண்டுமாம்! கொடுத்தால் சொத்தெல்லாம் உன் பேருக்கு எழுதி வைக்கிருனும் இல்லாவிட்டால் பணம் கொடுக்கமாட்டானும்!"

"உம்! அப்படிச்சொல்லு! சுவர்ணதானத்திற்குத் துணையாகக் கன்னிகாதானம் வேண்டுமோ! அழகுதான்! அழகுதான்! நீ என்ன சொன்னுய்? அப்பாவிடம் பமபையடித்த உன்வாய் அண்ணுவிடம் அவல் மெல்ல மூடிக்கொண்டதோ!"

"லீலா! வேண்டாமம்மா! கத்தி யெடுத்து என் கழுத்தை வெட்டிப் போட்டாலும் போடு! இப்படிக் குத்திக் குத்திப் பேசாதே! என் மனம் புண்பட்டுக் கிடக்கிறது!" தன் கண்களில் துளித்த நீரைத் துடைத்துக்கொண்டாள், பங்கஜம்மாள்.

"புண்பட்டால் என்னவாம்! உன் அருமை அண்ணு பெண் கேட்க வந்த அழகுக்கு நீ சும்மா இருந்துவிட்டாயே! அவர் தலை குனிந்துகொள்ளும்படி ஒரு ஆணித்தரமான கேள்வி கேட்க உனக்கு அறிவில்லாமல் போய்விட்டதா!"

"கேட்டுவிடலாம்மா! அதுவா பெரிசு. கைநீட்டி வாங்கிய பணததை இல்லை என்று சாதிக்கும் அவன எதைச்செய்ய அஞ்சமாட்டான்? 'வீட்டை விட்டு வெளியேபோ!' என்று தள்ளினுல், வயது வந்த பெண்ணுகிய உன்னையும் அழைத்துக்கொண்டு நான் எந்த நாற்சந்தியில் நிற்கிறது? இந்தக் காலத்தில் ஆதரிப்பவர்கள் யார்?"

"ஆதரிப்பவர் இல்லாமல் நீயும் நானும் செத்துவிட்டால் உலகமே அழிந்துவிடும்! லட்சோப லட்சம் நாய்களும் பறவையினங்களும் உன் அண்ணுவைப்போன்றவர் கட்டிவைத்திருக்கும் அன்ன சத்திரத்தில்தான் சாப்பிட்டு உயிர்வாழ்கின்றன! போம்மா, போ! பணம்கொடுத்தால் நான் மாமாவைக் கல்யாணம் செய்துகொள்கிறேனென்று சொல்! அண்ணுவை எப்படியாவது விடுதலை செய்துதான் ஆகவேண்டும்!"

"சேச்சே! பொன் கத்தியென்று கழுத்தை அறுத்துக்கொள்வார்களா என்ன! நீ......சங்கரனை...இரண்டாந்தாரமாக..."

"நிஜமாகத்தான்! அண்ணுவை உத்தேசித்து என் வாழ்க்கையையே தியாகம் செய்கிறேன். அவன் கடித்ததைப் பார்த்தால் எனக்குப் பயமாய் இருக்கிறது! இன்னும் கொஞ்சநாள் சிறையுள் இருந்தால் அவனுக்குக் கட்டாயம் பைத்தியமே பிடித்துவிடலாம்!"

லீலாவின் துணிகரமான தீர்மானம் பங்கஜம்மாளின் மனதிலே நிறைந்திருந்த சோகத்தையே கிளறிவிட்டது. அவளால் மேலே பேச முடியவில்லை.

(தொடரும்)


# காவேரி சந்தா விகிதம்.

| | இலங்கை, பர்மா & உள் நாடு | | | மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
| ஒரு வருஷம் | 6 | 0 | 0 | 7 | 8 | 0 |
| அரை வருஷம் | 3 | 0 | 0 | 3 | 12 | 0 |
| தனிப் பிரதி ஒன்றுக்கு | 0 | 8 | 0 | 0 | 10 | 0 |

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாசிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர் "காவேரி"
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

# நவீனம்!

# இதோ இருக்கிறது!!



மாரிஸ் மைனரில் சவாரி செய்யும்போது பெரிய கார்களில் உள்ள சௌகரியங்களை நீங்கள் இழக்கவேண்டியதில்லை. சிறிய அளவில் இதோ ஒரு பெரிய கார் இருக்கிறது. நாலுபேர் உட்கார இதில் இடம் உண்டு. 7 கன அடிக்கு மேற்பட்ட சாமான் வைக்கும் இடம் உண்டு. டார்ஷன்பார், ப்ரத்யேகமாக முன் சக்கரங்கள் பொருத்தி அமையப் பெற்றது. தங்குதடை யில்லாத சவாரிக்கு இன்றியமையாதது. அது வெளியே விட்டு வைக்க வசதியானது. காரேஜில் சுலபமாக விடலாம். சிக்கனம் பண்ண விரும்பினால் இது ஒரு காலனுக்கு 35 முதல் 40 மைல் போவதன்மூலம் உங்கள் பணத்துக்கு அதிக தூரம் ஓடக்கூடியது.

## 4 கதவுள்ள மாரிஸ் மைனர்



உலகத்தின் மகோன்னத சின்ன காரை வாங்குமுன்
சவாரி செய்து பார்க்க வசதி அளிக்கிறோம்.

## அடிஸன் & கம்பெனி லிமிடெட்.

**மதராஸ், பெங்களூர், கோயமுத்தூர், வெலிங்டன்.**

மற்றும் விற்பனை & சர்விஸ் வசதியுள்ள ஜில்லா வியாபாரிகள்

M. 34

# லண்டன் கடிதம்

*லீலா கோபாலன்*

இந்த மாதம் வேலைத் தொந்தரவினால் கடிதம் எழுதுவது இல்லை என்றுதான் நினைத்திருந்தேன. ஆனால் சென்றவாரம் மதராஸிலிருந்துவந்த என் சிநேகிதி, அதுவும் பத்து வருஷத்திற்கு முன் என்னுடன் கலாசாலையில் வாசித்துவந்தவள், என்னைப் பார்க்க வந்தாள். எனக்கும் அவளுக்கும் தெரிந்த பொது நண்பர் ஒருவரிடம் "காவேரியில் லண்டன் கடிதம் எழுதும் லீலா கோபாலனைச் சந்திக்கவேண்டும்" என்று சொன்னளாம். அவள் என்னைச் சந்திக்கும் முன்பே என்னுடன் படித்தவள் என்று எனக்குத் தெரியும். ஆனால் என் வீட்டிற்குவந்து என்னை பார்த்த மறு நிமிஷமே "அட பழி, நீதானு? யாரோ என்று பார்த்தேன்" என்று சந்தோஷத்துடன் கூறினாள். எனக்கு வேலை ஒழிவு இல்லாததால், நான் இந்த மாதம் கடிதம் எழுதப்போவதில்லை என்று அவளிடமும் சொன்னேன். எல்லாவற்றையும் கேட்டுவிட்டு என்னிடம் சண்டைக்கு வந்துவிட்டாள் என் அருமைச் சிநேகிதி. என்னுடைய ஒவ்வொரு மாதக் கடிதமும் இந்த வருஷக் கண்காட்சிக்காக வரப்போகும் பெண்களுக்கு எவ்வளவோ உதவியாக இருக்கிறதாம். இதைக் கேட்க எனக்கு மிகவும் சந்தோஷம்தான். என்னிடம் சொல்லியதோடு இல்லாமல் எழுதுவதை நிறுத்தவும கூடாது என்று கண்டித்துவிட்டாள். அவளுடைய தாயார் ஒவ்வொருமாதக் கடிதத்தையும் நன்கு படித்துவிட்டு இவளுக்கு என்ன உபயோகப்படும் என்றெல்லாம் சொல்வாளாம். இப்படி என்னைத் தோத்திரப்படுத்தி பழைய சிநேகிதத்தையும் உயிர்பித்த என் பள்ளித்தோழி பத்மினி ராகவன் என்ற பெயர்கொண்ட மதராஸிப் பெண் வக்கீல்தான். என்னைப் போலவே படிப்பு முடிந்தபின் கல்யாணம் செய்துகொண்டு சமையலறையில் வேலை பார்க்காமல், நீதிபதிகளின்முன் சேவை செய்யத் தைரியத்துடன் முன் நிற்கும் இந்தப் பத்மினி ராகவன் என்றைக்கும் மேலும் பெயர் பெற்று விளங்க வேண்டும். பெண்களாலும் எந்த உத்யோகமும் செய்யமுடியும் என்று நம் நாட்டுக்கு எடுத்துக் காண்பிக்க ஈசன் அருள் புரியவேண்டும் என்றுவேண்டிக்கொள்கிறேன்.

காவேரி கட்டுரையைப் படித்துவரும் மற்றொரு அன்பர் ஒருவர் "நான் லண்டனுக்கு என் கணவருடன் வரலாம் என்று யோசித்து இருக்கிறேன். வந்தால் 2, 3 வருஷம் இருக்கவேண்டும் என்றுதான் தோன்றுகிறது. என்னுடன் இரு குழந்தைகளையும் அழைத்து வரலாம் என்று நீங்கள் எனக்குப் புத்திமதி சொல்வீர்களா? அல்லது என் தாயார் தகப்பனுருடன் விட்டுவிட்டு வரலாமா? இதைப் பறறி உங்கள் கடிதத்தில் விபரமாக எழுதினுல் எனக்கு மட்டும் அல்லாமல் அநேகம் சகோதரிகளுக்கும் உபயோகப்படும்." என்று எழுதிவிட்டு, "உங்களுக்கு இந்தப் பிரச்னை உண்டா? அங்கேயே இரண்டு வருஷமாக இருக்கிறேன் என்று சொல்கிறீர்களே குழந்தைகளை வைத்துக்கொண்டு சமாளிக்க முடிகிறதா?" என்று கேள்வியைக் கேட்டு முடித்திருக்கிறார்.

மேல்கண்ட கடிதத்தைப் படித்தபின்தான் நான் ஏன் இவ்வளவு நாளாய் இந்தக் கேள்விகளுக்குப் பதில் எழுதவில்லை என்று தோன்றுகிறது. இதற்கு விபரமாக இந்தக் கடிதத்தில் எழுதப்போகிறேன். என்னை விசாரித்து எழுதிய சகோதரிக்கும், அவரைபபோன்ற அநேகம் வாசகர்களுக்கும் உபயோகப்படும் என்று நினைக்கிறேன்.

நான் இந்த ஊருக்கு வரும்பொழுது இங்கு எவ்வளவு நாள் தங்கப்போகிறேன் என்று எனக்குத் தெரியாது. வீட்டு வசதி, சாப்பாடு வசதி எப்படி இருக்கிறது என்றும் தெரியாது. ஆகையால் என்னுடைய ஐந்து வயதான ஒரே பெண்ணை என் தாயாரிடம் விட்டு விட்டு வந்தேன். இங்கு வந்ததும் நமக்குச் சரியான குடி இருக்கும் இடம் கிடைக்கும் வரை ஹோட்டல்களில் தான் வசிக்கவேண்டி வரும். கணவன்மார் முதலில் வந்து, பின்பு பெண்கள் வருவதானல் நேராக அவர்கள் வீட்டிற்கே சென்றுவிடலாம். ஆனல் இருவரும் புறப்பட்டு வந்தால் கொஞ்ச நாளைக்கு ஹோட்டல் வாசம்தானே! எல்லா ஹோட்டல்களிலும் குழந்தைகளை அனுமதிப்பதில்லை. அதுதான் முதல் கஷ்டம். அப்படி இடம் கிடைத்து, தங்குகிறோம் என்று வைத்துக்கொண்டால், பிறகு வீடு

தேடுவதில் கஷ்டம். மரச்சாமான்களும், படுக்கை, பீங்கான் வகையரா முதலியவற்றோடு வைத்து வாடகைக்கு விடப்படும் Furnished flats என்ற குடியிருப்பு இடங்களில் குழந்தைகளுடன் வரும் பெற்றோருக்கு அனேகமாக இல்லை என்ற பதில்தான். வெகு சிலரே குழந்தைகளை அனுமதிக்கின்றனர். இதற்கெல்லாம் தான் கணவன் முதலில் வந்து குடியிருப்பு வசதிகளைக் கவனித்து வைக்கவேண்டும்; இது நீங்கள் குழந்தை குட்டிகளுடன் வருவதானால் மிகவும் நல்லது.

சரி, வீடும் கிடைத்து நம் குடித்தனமும் நிலைத்துவிட்டது. அதற்குப்பின் குழந்தைகளைப் பள்ளிக்கூடம் சேர்ப்பது ஒரு பெரிய கவலை. இங்கு மத்யதர குடும்பத்தாருக்கும் கீழ்த்தர குடும்பத்தாருக்கும் உள்ள குழந்தைகளின் கட்டாயப் படிப்பிற்காகக் கண்ட்ரி கவுன்ஸில் (Country Councils) பள்ளிக்கூடங்களும், இதிலிருந்து மேல் படிப்புக்குச்செல்லப் பப்ளிக் ஸ்கூல்ஸ் (Public Schools) என்றழைக்கப்படும் உயர்தரப் பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன. இதில் படிக்கும் குழந்தைகளில் எல்லாவிதமான குழந்தைகளையும் காணலாம். மூர்க்கத்தனம், பிடிவாதம், கீழ்த்தரப் புத்தி உள்ளது, அநாகரிகத்திரியும் பிள்ளைகள் சகலமும் உண்டு. இதில் படிக்கவிட்டால் குழந்தைகளுக்கு நல்ல படிப்பு வராது என்று நான் சொல்லவில்லை. இருந்தாலும் நல்லது கெட்டது இரண்டும் உண்டு. சம்பளம் கிடையாது, சாப்பாடும் இலவசம் தான்.

ஆனால் சுமாரான ஸ்திதியில் உள்ள இந்நாட்டு மக்கள், பிரைவேட் ஸ்கூல்ஸ் (Private Schools) எனகிற தனிப் பள்ளிகளுக்குத்தான் குழந்தைகளை அனுப்புகின்றனர். இந்தத் தனிப் பள்ளிகளில் சாதாரணமாக ஒரு 8 வயது அல்லது பத்து வயது குழந்தை படிக்க 3 மாதத்திற்குப் பள்ளிச் சம்பளம் மட்டும் 20 கினி (Guinea) அல்லது 260 ரூபாய். இதைத் தவிர ஸ்கூல் யூனிபாம் (School uniform) வாங்கவேண்டும். இதில் பள்ளிக்கு என்ற தனி உடுப்பு, பள்ளிக்கு உள் போட்டு நடக்கத் தனி ஜதை செருப்பு, வெளியில் போட்டுநடக்கத் தனி ஜதை. பகல் சாப்பாட்டிற்கென்று தினம் ஒரு ரூபாய். இதுமாதிரி இதர செலவுகள் வேறு. குறைந்தது ஒரு குழந்தைக்குப் பெண்ணோ, பிள்ளையோ யாரானாலும் சரி, இங்கே தனிப் பள்ளியில் படிக்கவைக்கவேண்டுமென்றால் (அதாவது 10 வயதிற்குள்தான் நான் சொல்கிறேன்) வருஷத்திற்குத் தாராளமாக 100, கினி கிட்டத்தட்ட 1400 ரூபாய், செலவாகும்.

பணச் செலவு ஆகிறதோடு தாயார் படும் சில்லறை அவஸ்தைகளைக் கவனிக்கலாம். காலை $8\frac{1}{2}$ மணிக்குள் குழந்தையை எழுப்பி, முகம் அலம்பி, தலை வாரி சுத்தப்படுத்திக் கொள்ளச் சொல்லி, சாப்பாடு கொடுத்து பள்ளிக்கூடம் கொண்டுவிடவேண்டும். இந்நாட்டு குழந்தைகளே 12, 13 வரை தனியாகச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. கிட்டத்திலோ, எட்டத்திலோ, எங்கு இருந்தாலும் தாயார்தான் கொண்டுபோய்விடவேண்டும். பகலில் பள்ளிக்கூடச் சாப்பாடு நம் குழந்தைகளுக்குப் பிடிக்க ரொம்ப நாளாகும். மரக்கறி சாப்பிடும் (Vegetarians) நம் குழந்தைகளுக்கு வேகவைத்த வெறும் உருளைக்கிழங்கு, காபேஜ், காரட் இன்னும் 2, 3 வகை காய்கறிகள் கிடைக்கும். இதில் இவ்வளவு உப்பையும் மிளகுப் பொடியையும் தூவிச் சாப்பிடவேண்டியது. அப்புறம் ஏதாவது ஒரு தித்திப்பு பண்டம் ஒன்று கிடைக்கும். இதைச் சாப்பிட மறுக்கும் குழந்தைகளை வீட்டுக்குத் தானே அழைத்துவந்து சாப்பாடு கொடுக்கவேண்டும். சாப்பிட்டதும் கொண்டுபோய் விடவேண்டும். அதன்பின் சாயங்காலம் வீட்டுக்குத் திரும்ப அழைத்து வரவேண்டும். இப்படி ஒரு நாளைக்கு நான்கு தடவை பள்ளிக்கும் வீட்டுக்கும் நடைபோடவேண்டும்.

இப்படி நடக்கும் நேரத்திற்கு இடையே கடைக்குப் போகவேண்டுமா, பகல் சமையல் செய்யவேண்டுமா, துணி துவைக்கவேண்டுமா, எல்லாம் கிடைக்கும் நேரத்தில் செய்தாகவேண்டும். வெளியில் எங்காவது போகவேண்டும் என்றால் குழந்தைகளைத் தனியாக விட்டுப் போகமுடியுமா? யாரையாவது நீ வந்து உட்கார்ந்துகொள்வாயா என்று பல்லைக் காட்டி, கேட்கவேண்டும், இல்லாவிட்டால், 1 மணிக்கு 3 ரூபாய் கொடுத்து, பேபி ஸிட்டர்ஸ் (Baby Sitters) என்றழைக்கப்படும் வேலைக்காரர்களைத்தான் வைக்கவேண்டும். எல்லாம் கஷ்டம்தான்.

இவ்வளவு கஷ்டப்பட்டுக்கொண்டு குழந்தைகளை இரண்டு மூன்று வருஷம் இங்கே படிக்கவைக்கிறோம். பின்பு நம் நாட்டிற்கு வந்தால் எவ்வளவு கஷ்டம்! தாய்ப்பாஷை அடியோடு மறந்துவிடுகிறது. படிப்புவழியோ ஒரே மாறுதல். எல்லாம் நம்முடைய கணவன்மார் 2, 3 வருஷம் வேலை பார்ப்பதற்காகத்தான், எல்லாவற்றையும் நன்றாய் அலசிப் பார்த்துவிட்டுத்தான், நான் உங்களுக்கு

இதை எழுதுகிறேன். முடியுமானால் குழந்தைகளை அங்கேயே விட்டுவருவதுதான் உசிதம். வேண்டுமென்றால் விடுமுறைக்கு அவர்களை இங்கு வரவழைக்கலாம். இது தான் என்னுடைய அபிப்பிராயம்.

இங்கிலாந்து பூராவும் (Festival of Britain) மங்கள வாத்திய கோஷத்துடன் ஜ்வலிக்கிறது. இந் நாட்டு மன்னரும் ராணியாரும்தான் மே மாதம் 3ஆம் தேதி இக்கண் காட்சியைத் திறந்து வைத்தனர். எந்தப் பக்கம் போனாலும் கூட்டமும் க்யூ வரிசையும் சொல்லிமுடியாது. பாட்டர்ஸீ (Battersea) என்ற இடத்தில் (லண்டனுக்குள்ளேதான்) ஒரு பெரிய பூந்தோட்டம் இருக்கிறது. அதில் பன்பேர் (Funfair) ஒன்று நடந்து வருகிறது. Funfair என்றால் என்னவோ என்று நீங்கள் நினைக்கவேண்டாம். நம் ஊர் தேர் திருநாளுக்கெல்லாம் ராட்டினம் போடுகிறார்களே அதேமாதிரி அந்த ஒரே ஒரு ராட்டினத்துடன் நில்லாமல் பலமாதிரி சுழலும் யந்திரங்கள் பொருத்தப் பட்டிருக்கின்றன. ஆகாய விமானம்மாதிரி கவிழ்ந்து செல்லும் மோட்டார் வாகனங்களும் வெகு வேகமாகச் சுற்றிச் சுற்றி மேடு பள்ளங்களில் ஓடும் ரயில் வண்டிகள் போலும் பலவித விளையாட்டுகள் இருக்கின்றன. மின்சாரத்தின் உதவியால் ஓட்டப்படும் இவைகள் பொது மக்களின் கவனத்தை அதிகமாகத்தான் இழுக்கிறதாக என் அனுபவத்திலிருந்து தெரிகிறது. சென்ற திங்கட்கிழமை அன்று நான் அங்கே சற்றுப் போய்ப் பார்க்கலாம் என்று கிளம்பிச் சென்றேன். என் முன்னால் சரியாக 2000 ஜனங்கள் க்யூ வரிசையில் உள் நுழைவதற்காக நின்றுகொண்டிருந்தனர். நானும் சரியாக $1\frac{1}{2}$ மணி நேரம் பொறுமையாக க்யூவரிசையில் நின்று உள் நுழைந்தேன். ராட்டினங்களின் மேல் எல்லாம் கொஞ்சமும் கவனம் செல்லாத என்னைப் போன்றவருக்கு அங்கு வேறு ஏதாவது உண்டா? சூதாட்டத்தைத் தவிர ஒன்றும் இல்லை. குதிரைப் பந்தயம், நாய்ப் பந்தயம், போன்ற அநேக சூதாட்ட இடங்கள் இருந்தன. ஒரு இடத்தில் Frozen Alive என்ற தலைப்புப் போட்டு ஒரு கொட்டகை இருந்தது. அதற்குள் 6 அடி நீளமுள்ள பெரிய ஐஸ்கட்டியினுள் ஒரு 20 வயதுப் பெண்மணி சுமார் 10 நிமிஷம் போல் கொஞ்சமும் நடுங்காமல் சிரித்த முகத்துடன் படுத்து இருந்துவிட்டு வெளி வருகிறாள். இது பார்ப்பதற்கு அதிசயமாகத்தான் தோன்றியது.

இந்த முழுக் காட்சிக்குள் நுழைய 6பென்னிகள்தான் கட்டணம் இருந்தாலும், ஒவ்வொரு இடத்திலும் ஒரு ஷில்லிங் 2 ஷில்லிங் என்று தனிக் கட்டணம் வேறு. இம் மாதிரி சில்லறைச் செலவுகளும் செய்துவிட்டுக் கடைசியில் பார்த்தால் ஒருவர் எவ்வளவு சிக்கனமாக இருந்தாலும், 2 பவுன் 3 பவுன் செலவழித்ததாகத் தெரியும்.

க்யூ வரிசையில் நின்றதைப்பற்றி நான் சொன்னேன் அல்லவா? சமீபத்தில் இங்கு நடந்த ஒரு வேடிக்கையான சம்பவம் பற்றி, பார்லிமெண்டிலேயே ஒரு பேச்சு நடந்தது. இரு வெளி நாட்டார் இந்தக் கண் காட்சி மண்டபத்தின் முன் நின்று ஒரு ரஸ்தா படத்தையும் வைத்துக்கொண்டு என்ன செய்யவேண்டும் என்று தங்கள் பாஷையில் பேசிக்கொண்டிருந்தனராம். இவர்கள் இருவரையும் பார்த்துவிட்டு ஏதோ உள் நுழையத்தான் க்யூ ஆரம்பம் என்று அநேகம்பேர்கள் இவர்கள் பின் நிற்க ஆரம்பித்தனராம். சுமார் 100 ஜனங்கள் கூடிவிட்டபின், இந்த இரு வெளி நாட்டினரும் ஏதோ பேசிக் கொண்டே நகர்ந்து விட்டனராம். ஆனால் மற்ற ஜனங்களும் ஒரு காரணமும் இன்றிக் கால் கடுக்க பசி, தாகம், மழையையும் பார்க்காமல் நின்றுகொண்டே இருந்தனராம். நீங்கள் யாரேனும் இங்கு வந்து இப்படி க்யூ வரிசையில் நிற்க நேர்ந்தால் சரியான க்யூ தானா என்று கவனித்து நில்லுங்கள். என்னுடைய நண்பர் ஒருவர் சமீபத்தில் மதராஸிலிருந்து வந்தார். அவர்ஒரு பெரிய மிராசுதார். க்யூவில் நிற்பது என்ன என்பதே தெரியாது. பாவம்! "என்னம்மா லண்டனிலே எதற்கெடுத்தாலும் க்யூவும் Thank you வும் தானா" என்று கேட்டார். ஆமாம் இது நிஜம் தான். எதற்கெடுத்தாலும் க்யூவில் நின்றுதான் ஆகவேண்டும். எந்த அல்ப காரியத்திற்கும் Thank you சொல்லாமல் இருக்கமுடியாது. யாராவது கன்னத்தில் அடித்தால் Thank you சொல்லவேண்டுமா என்ன என்று என்னைக் கேட்காதீர்கள்; அது உங்கள் இஷ்டம்.

இந்தக் கண் காட்சி மண்டபத்திற்கு South Bank Exhibition என்று பெயர் கொடுத்து இருக்கிறார்கள். ஒரு கண்காட்சிக்கு உள்ளாவது நான் சென்று பார்க்கவில்லை. இந்தக் கூட்டத்தில் இடிபட்டு ஒன்றும் சரியாகவும் பார்க்க முடியாது. ஆகையால் வாசகர்கள் யாவரும் அடுத்த மாதம் வரை சற்றுப் பொறுமையுடன்தான் காத்து இருக்கவேண்டும். ஆனால் ஒரே ஒரு

நாள் இரவு தீபாலங்காரங்களை எல்லாம் சென்று பார்க்கலாம் என்று போனேன். ஒவ்வொருமுக்கிய கட்டிடமும் பிளட் லயிட்களால்ஜகஜ் ஜோதியாக மின்னுகிறது. இப்படி தனிபபட அலங்கரிக்கப்பட்டிருப்பதால் ஜனங்களுக்கும் வெளிநாட்டாருக்கும் என்னென்ன இடம் முக்யமானது இதில் உள்ள சரித்திர சமபந்தம் என்ன என்று தெளிவாகத் தெரிகிறது. கண்காட்சி மண்டபத்தின் விளக்குகளைப்பற்றிச் சொல்லி முடியாது. வெகு தூரத்திலிருந்தே இதுதான் கண்காட்சி மண்டபம் என்று கூவி அழைக்குமாறு Skylon என்ற உயர்ந்த ஸ்தூபி அமைக்கபபட்டிருக்கிறது. இரவில் தக தக வென்ற ஒளியுடன் பிரகாசிக்கும் இந்த Skylon ஒரு அற்புதக் காட்சிதான். பறபல வர்ணங்கள் பொருத்தப்பட்ட அநேகம் Fountains களும் இருக்கின்றன.

இந்தக் காட்சியை வெளியில் நின்று ஒரே இடத்தில் பார்க்காமல் நதியில் அரைமணி நேரத்திற்கென்று விடப்படும் உல்லாசப் படகுகளில் ஒன்றில் சென்றேன். கரையின் இரு புறத்திலும் உள்ள விசேஷ கட்டிடங்களின் பெயரையும், அதன் சரித்திர சமபந்தத்தையும் ஒரு வழிகாட்டி எடுத்து விஸ்தரித்துவந்தான். இங்கு நல்ல கோடைக்காலம் இல்லாவிட்டாலும் மங்கலான வெளிச்சம் இரவு 9 மணிவரை இருக்கிறது. ஆகையால் நல்ல விளக்கு அலங்காரத்தைப் பார்க்க வேண்டுமென்று ஜனங்கள் 10 மணிக்கு மேல்தான் கூட ஆரமபிக்கிறனர்.

இதே கண்காட்சி மண்டபத்தில் ஒரே ஒரு விசித்திரமான விளையாட்டைப்பற்றி நான் அடிக்கடி கேள்விப்படுகிறேன். ஒரு பெண் ஒருத்தி எதிரியுடன் சதுரங்கம் விளையாடுகிருள். இதில் என்ன அதிசயம்? சதுரங்கப் பலகையும், காய்களும் இல்லாமல் ஒரு பெரிய அறை கட்டம் கட்டமாக தடுக்கப் பட்டு, காய்களுக்குப் பதில் தகுந்த உடுப்புகள் அணிந்த நிஜ மனுஷர்களை வைத்துக் கொண்டு விளையாட்டுப் போட்டி நடத்துகிருள். காய்களையும் பலகையுமே வைத்துக் கொண்டு நாட் கணக்கில் விளையாடும் என் கணவர் போன்றவருக்கு இதைப் பார்த்து விட்டு வீடு திரும்ப மனம் வருமோ என்னவோ தெரியவில்லை. எப்படி நடக்கிறது என்று அடுத்த மாதம் கட்டாயம் உங்களுக்கு எழுதுகிறேன்.

லண்டனிற்குள் நடக்கும் குதூகல சம்பவங்களைப்பற்றி மேலாகச் சொல்லி நிறுத்தி விட்டேனே என்று நீங்கள் குறைப்பட வேண்டாம். நான் லண்டனைவிட்டு வெளியே சில இடங்கள் சென்று பார்த்தேன். உங்களுக்கும் அதைப்பற்றி அறிய ஆவல் இருக்கும் என்று நினைக்கிறேன். என்னுடைய மற்ருெரு நண்பர் கார் ஒன்று வாங்கி இருந்தார். அழைத்துப் போவது அவர், சாப்பாட்டு மூட்டை கட்டுவது என் பொறுப்பு. "நான் வருவதே ஒரு அதிர்ஷ்டம்" என்று சொல்லிக்கொண்டு என் கணவரும் வந்தார். முக்யமாக 4, 5 இடங்களைப்பற்றி உங்களுக்கு சொல்கிறேன்.

முதல்நாள் நாங்கள் சென்றது Stratford-on-Avon என்ற ஷேக்ஸ்பியர் பிறந்த இடம். நான் உங்களுக்கு இந்த ஊரைப்பற்றி முன்பே நிறையச் சொல்லி இருக்கிறேன். ஆனல் இந்த வருஷம் விழாவுக்காக ஏக அமர்க்களம். தோரணங்களும் தீபங்களும் போடப்பட்டு அலங்கார மயமாக இருக்கிறது. எப்பொழுதுமே அங்கு நடக்கும் நாடகங்களுக்கு இடம் கிடைக்காது. இந்த வருஷமோ கேட்கவேண்டாம். 2 அல்லது 3 மாதம் முன்பே பதிவு செய்தால்தான் டிக்கட் கிடைக்கிறது. ஷேக்ஸ்பியர் பிறந்த வீட்டிலும் அவர் மனைவியாரான Ann Hattbaway யினுடைய வீட்டிலும் உள்ள தோட்டங்களில் விசேஷ சிரத்தை எடுத்துக் கொண்டு பலவித பூக்களும் செடிகளும் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தாருக்கு வரும்படி அதிகமாக இருக்கிறது என்று நான் சொல்லத் தேவையில்லை.

அடுத்த மூன்று இடம் ஒரே நாளில் நாங்கள் சென்றது. Dover, Folkstone, Canterbury. இங்கிலாந்தின் எல்லையை மிதிக்க வாசற்படி டோவர் என்பது நமக்கெல்லாம் தெரிந்த விஷயம் தான். White cliffs of Dover என்றெல்லாம் புஸ்தகங்களில் படித்திருக்கிருேம். நேரே பார்த்தால் அதன் விசேஷமே தனி தானே! எந்தத் தேசத்திற்கு வாசற்படி என்றழைக்கபபடும் பட்டினமும் இவ்வளவு அமைதியாக இருக்கும் என்று எனக்குத் தெரியாது. துறை முகத்தில் அன்று சுமார் 20, 25 கப்பல்கள் நின்றன. 10, 15 கப்பல்கள் கரையை நெருங்கி வந்துகொண்டிருந்தன. ஆனல் ஒரு சத்தம் கூட இல்லை. அங்கு வேலைசெய்யும் துறைமுகத் தொழிலாளிகள்கூடப் பொம்மைபோல் நடமாடி வந்தனரே தவிர, ஒரு பாட்டோ கூச்சலோ இல்லவே இல்லை. இந்தப்பக்கம் அந்தப் பக்கம் எங்கே திரும்பினுலும் வெள்ளை வெளேரென்ற சுண்ணும்புக் கற்கள் கொண்ட மலைதான். கடற்கரையோரத்தில் வட்டமிட்டுப் பறக்கும் நூற்றுக் கணக்கான Sea

Gulls என்ற பறவைகள் ஆங்காங்கு ஓடி விளையாடும் குழந்தைகள் ரொட்டித் துண்டுகளை வைத்துக்கொண்டு இப்பறவைகளைக் கூட்டம் கூட்டிக் கைகொட்டி, சிரித்து விளையாடிக்கொண்டிருந்தனர். கடற்கரை நெடுக விளக்குத் தோரணங்கள் கட்டப்பட்டு, துறைமுகப்பட்டினமாக இருந்தால் என்ன, எங்களுக்கும் கண் காட்சியில் பங்கு உண்டு என்று விளம்பரப்படுத்தியது.

கடற்கரையையும், அங்குள்ள சாந்தியையும் விட்டுப் பிரிய மனம் இல்லை. ஆனால் இரவு 10 மணிக்குள் வீடு திரும்பவேண்டி இருந்ததால் நாங்கள் கொண்டு சென்ற காப்பி பலகார வகைகளை மட்டும் கடற்கரையில் வைத்து, ஆனந்தமாகச் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினோம். வரும் வழியில் தான் Folkstone என்ற கடற்கரைப் பட்டினத்தைப் பார்க்க முடிந்தது. இந்தப் பட்டினம் ஒரு பள்ளத் தாக்கில் அமைந்திருக்கிறது. நாங்கள் வந்த பாதையோ மலைமேல் வருகிறது. ஒரு இடத்தில் வண்டியை நிறுத்திவிட்டு, பள்ளத் தாக்கில் ஜே ஜே என்று ஜனங்கள் நடமாடி, கவலையற்றுத் திரியும் இந்த பட்டினத்தின் அழகை நன்கு பார்த்து ஆனந்தித்தோம். ஜனங்கள் நடப்பதெல்லாம் நாங்கள் நின்ற இடத்தில் ஒரு சிறு பறவைக் கூட்டத்தை போல்தான் தோன்றியது. வீடுகளின் புகைக் கூண்டிலிருந்து சுழன்று வரும் புகையையும் ஆங்காங்குத் தோட்டவெளிகளில் பூத்துக் குலுங்கும் ஆப்பிள், செர்ரி மரங்களையும் பார்க்க யாருக்குத்தான் சந்தோஷம் வராது. என்னுடன் வந்த நண்பர் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு, பாட்டுப்பாடக் கிளம்பிவிட்டார். பாடியதோடும் இல்லாமல் "எனக்குச் சாரீரம் இல்லாவிட்டாலும் சங்கீதம் ஞானம் உண்டு; என் குரலைப்பற்றி நீங்கள் சட்டை செய்யாதீர்கள்" என்று மன்னிப்புக்கேட்டார்.

அடுத்தபடியாக நாங்கள் அதே நாளில் பார்த்த இடம் Canterbury இந்த ஊரையும் இதில் உள்ள மாதாகோவிலையும்பற்றி நம் ஊர் பச்சைக் குழந்தைகூடச் சொல்லும். அந்த ஊரையும் கோவிலையும் பற்றியும், Cambridge, Bournmouth, Churchill வசிக்கும் Westerham, அவர் வீடு Chartwell, லண்டனில் நடக்கும் விழா எல்லாவற்றையும் பற்றி அடுத்தமாதக் கடிதத்தில் எழுதுகிறேன். நமஸ்காரம்.

மற்றொன்று மறந்துவிட்டேன். இந்த விழாவுக்காகவே ஜோடிக்கப்பட்டு இங்குள்ள ஒவ்வொரு துறைமுகமாக நடத்திச் செலுத்தப்படும் Campania என்ற கப்பலையும் சென்று பார்த்தேன். அதையும் பற்றி அடுத்த மாதத்தில் எழுதுகிறேன். ●




குழந்தைகளுக்கு

இன்றியமையாத

டானிக்

டோங்ரேயின் பாலாம்ருதம்



K. T. டோங்கரே அண் கோ., பம்பாய்-4.




துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 152-50 TM



# பிரார்த்தனை

கே.வி.கே.

CHEENU

ஆற்று வெள்ளி மணலில் முழங்கையை ஊன்றிச் சாய்ந்து கொண்டிருந்தவனின் கண்களுக்கு நேரே பட்டது அந்த ஆற்றங்கரைப் பிள்ளையார் கோயில். இந்தப் பிள்ளையார்களுக்கு எப்படித்தான் இடம் கிடைக்கிறதோ இந்த நெருக்கடி உலகில். மனிதனை மனிதன் உதறி எறியும் இக்காலத்தில் இவைகளை—இக் கற்சிலைகளை—இலட்சியம் செய்பவர்கள் யாரோ சிலர் இருப்பதால்தான் இவைகளின் இருப்பிடங்களில் விளக்காவது எரிகிறதா! யார் கண்டார்கள்? பிள்ளையாரை லட்சியம் செய்துதான் அவர்கள் விளக்கேற்றுகிறார்களா, அல்லது தாங்கள் சுய லட்சியத்திற்காகப் பிள்ளையாரின் இருளைப் போக்குகிறார்களா என்பது அவர்களுக்குத்தானே தெரியும்! தெய்வத்தின் இருளைப் போக்குவதாகக் கற்பனை செய்து அதை நம்பும் அவர்கள், தங்கள் வாழ்நாளின் இருளையே அத் தெய்வம் போக்கிவிடும் என்றல்லவா எதிர்பார்க்கின்றனர். ஆயினும் அனேகர் வாழ்வின் இருளும் மறைந்துவிடுகிறதா என்ன! என்னவோ, எப்படிக் கூற முடியும்? ஆனால் இந்த ஒப்பந்தத்தின்படி அத் தெய்வம் ஒவ்வொருவர் இருளையும் போக்குவதென்றால் உலகில் ஏன் ஞான ஒளிச்சுடர் எங்கும் பிரகாசிக்கவில்லை! உய்வுக்கே பிராப்தம் வேண்டுமென்றால், உய்வைத் தேடும் பிரார்த்தனைக்கும் பிராப்தம் வேண்டும் போல்தான் இருக்கிறது. பிரார்த்தனையின் வெற்றி நம் ஆத்ம சக்தி; அதன் தோல்வி 'பூர்வ கர்மா!' இதுதானே தத்துவம்—நம்பிக்கை—மனச் சமாதானம்!

மனச் சமாதானம்! அதைத் தேடிக் கொண்டுதானே அவன் இங்கே வந்தான்— பல ஊர்களைக் கடந்து. ஊர்களைக் கடந்தால் மட்டும் மனம் சமாதானம் அடைந்துவிடுகிறதா என்ன? உணர்ச்சிகளைக் கடக்க அது மறுக்கவில்லையா — சேற்றுப் பன்றியைப போல்! மனக் கொந்தளிப்பும், மனச் சமாதானமும் மனத்தின் கற்பனைகள் தாமே! அக் கொந்தளிப்பில் அவன் என்ன பாதகமடைந்துவிட்டான்; ஊரைவிட்டு வந்ததில் தான் என்ன சமாதானத்தைப் பெற்றுவிட்டான்? கொந்தளிக்கும் இடத்தைவிட்டு ஏகாந்தத்திற்குக் கொண்டு வருவதில் அம்மனம் அடையும் முக்கியத்துவம்தான் அதன் சமாதானமா—அண்டை வீட்டுக் குழந்தையின் கைப் பொம்மையைப் பார்த்து, பொங்கி அழும் குழந்தையைத் தனியிடத்திற்கு அழைத்துச் செல்வதைப்போல! ஆயினும் புத்திக்குப் புத்தி கூறுவதில் அம மனம் அடையும் தற்காலிக பெருமை சற்று ஆறுதலை அளிக்கத்தான் செய்கிறது.

ஆறுதல்! அந்த ஆறுதலைப் பாருவுக்கு அளிக்க அவன் வாழ்நாள் முழுதும் பாடுபட்டு அவளைப் பெருமையிலேயே திளைக்க வைத்திருந்தானே. கையிலிருந்த பொருளை யெல்லாம் விற்று அவள் மனதிற்குப் பிடித்த மணவாளனைத் தேடிக் கொணர்ந்து அவளுக்கு மணம் செய்துவைத்ததில் அவள் மனம் எவ்வளவு நன்றியுடன் அவனைப் போற்றியது:

"அண்ணு! உன்னுலே எனக்கு எவ்வளவு ஆறுதல் தெரியுமா.........!"

அப்போது அவன் மனம் பெருமையுடன் பொங்கவில்லையா! பெருமைக்கும் ஆறுதலுக்கும் அவ்வளவு நெருங்கிய தொடர்பு இருக்கிறதென்று அப்போதுதானே அவனுக்குத் தெரிந்தது!

ஹூம்! அதெல்லாம் பழங்கதையாகத்தான் இப்போது போய்விட்டது. அந்த மனேபாவம் இப்போது புரிகிறதா?

மனமாவது பாவமாவது! மனப்பாவனையில் தான் சொந்தமும், உறவும் நிற்கிறதேயன்றி, ஆத்மபாவனையில் பிரகாசித்த அவ்வுறவு எங்கே? அப்போதைய பாருவாகவா அவள் இருக்கிருள் இப்போது! விவரிக்கமுடியாத ஓர் அன்னியத்துவத்தை இடையில் புகுத்திவிடவில்லையா! சுய வாழ்வு, சுயநலன் என்று ஏற்படும்போது உறவுக்கு மத்தியில் அன்னியத்துவம் ஏற்படுவது தவிர்க்க முடியாததா?

மணலில் ஊன்றியிருந்த கையை நிமிர்த்திய வாறே திரும்பியவனின் கண்களில் அவள் அன்றும் தென்பட்டாள். பொற்கொடி போன்றிருந்த அவள் தன் கரத்தில் வைத்திருந்த எண்ணெய்க் கிண்ணியுடன் பிள்ளையார் கோவிலில் நுழைந்தாள். சிறிது நேரத்திலேயே வெளியே வந்தவள் அக் கிண்ணத்தை வெளி மாடத்தில் வைத்துவிட்டு, கோயிலை வலம்வர ஆரம்பித்தாள் வழக்கம் போல. சென்ற நான்கு தினங்களாக இதை மௌனமாகக் கவனித்துவந்த அவன் உள்ளம், அவளைப்பற்றி அன்றுதான் சிந்திக்கத் தொடங்கியது. பாவம்! பருவப்பூரிப்புடன் திகழ்ந்திருந்தாலும், பளிங்குபோன்ற அவள் முகத்தில் லேசாகப் படர்ந்திருந்த சோகச்சாயல் அவள் பக்தியையா தோற்றுவித்தது? கண்கண்ட தெய்வம் என்று அவ்வூராரால் போற்றப்படும் அந்த ஆற்றங்கரைப் பிள்ளையார் அவள் விஷயத்தில் கண்மூடியாகவா இருக்கிருர்? எந்தப் பிரார்த்தனையுடன் அவள் அப்புனித காரியத்தைச் செய்கிருளோ அதையாவது அம்மூர்த்தி அறிவாரா! அல்லது அறிந்துதான் அருள் புரியாமலிருக்கிருரா! இதெல்லாம் எங்கே புரிகிறது? மனித உள்ளமே புரியாதபோது சிலையின் உள்ளம் புரியவாபோகிறது!

எத்தனை சுற்றுகள் அவள் அக் கோயிலைச் சுற்றிளுள் என்பதை அவன் கணக்கெடுக்கவில்லை. ஆனுல் சுமார் அரைமணி நேரமாகிலும் அவள் உருவம் தோன்றித் தோன்றி மறைவதை அவன் பார்த்துக்கொண்டுதான் இருந்தான். கடைசியில் அவள் சற்றுப் பெருமூச்சுடன் நின்ற போது அவள் கண்கள் அவனை ஒருமுறை பார்த்து விட்டுத்தான் திரும்பின. அப்பார்வையில் தோன்றிய பரிதாபம்! ஒருவேளை அவள் தன் பிற்கால வாழ்வை — மண வாழ்வை உத்தேசித்துத்தான் இப் பிள்ளையாரை யாசிக்கிருளா!

இரண்டு தினங்கள் அவன் ஆற்றங்கரைப் பக்கம் செல்லவில்லை. மூன்ரும் நாள் சென்றபோது அவள் கோயிலில் நின்றுகொண்டிருந்தாள், களைப்பாறுபவளைப்போல. அவள் பார்வை அவனில்லாத அந்த வெற்று இடத்தை நோக்கிக் கொண்டிருந்தது.

அவள் கண்களில் தோன்றிய வெறித்த பார்வை அவனுக்கு எப்படியோ துணிவை அளித்தது. மெல்ல அவளை நெருங்கியவன் கேட்டேவிட்டான், தன் மனதை அரித்துக்கொண்டிருந்த கேள்வியை:

"ஏனம்மா தினமும் இக்கோயிலைச் சுற்றுகிருய்? அப்படிப்பட்ட குறை உனக்கு என்ன இருக்கப் போகிறது......!"

வியப்புடன் திரும்பிய அவள் முகம் சற்று மாறுதல் அடைந்தது, அவள் கண்களில் பயம் தோன்ருவிட்டாலும் பரபரப்பு மட்டும் காணப் பட்டது.

சற்றுநேரம் அவள் ஒன்றும் கூறவில்லை. தன் கையில் பற்றியிருந்த காலி எண்ணெய்க் கிண்ணத்தை உற்று நோக்கிக்கொண்டிருந்தாள். அவள் சிறிய தலையில் நெளிந்துகொண்டிருந்த கேசத்தைப் பார்த்துக்கொண்டிருந்த அவன், அவள் தலை நிமிர்ந்தபோது ஏனே நல்லபாம்பு படமெடுத்துநிமிர்வதைத்தான் நினைக்கமுடிந்தது!

"என் அண்ணுவுக்குக் காச நோய். படுத்த படுக்கையாய் இருக்கிருன். அவன் பிழைக்க வேண்டுமே என்றுதான் இக் கோவிலுக்கு விளக் கேற்றிச் சுற்றுகிறேன்...!"

"என் வதனத்தை லக்ஸ் டாய்லட் சோப்பினால் அழகுடையதாக வைத்துக் கொள்கிறேன்" என்று சொல்கிறார்

ராஜகுமாரி




சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 264-173 TM

அதற்குமேல் அவன் ஒன்றும் கேட்கவில்லை. அவள் குரலில் தொனித்த பாசமும், ஏக்கமும் அவனை என்னவோ செய்துவிட்டனவே! தாய்ப் பாசத்திற்கு மேலல்லவா தோன்றுகிறது இவள் சகோதர வாஞ்சை! நாள் தவறாமல் ஒரே எண்ணத்துடன் அவன் மீட்சியை வேண்டும் இவளிடம் இப் பிள்ளையாருக்கு இரக்கம் ஏற்படாமலா போகும். இவள் மனோ சக்தியே அச் சகோதரனை உய்வித்துவிடாதா!

பாருவும் இப்படித்தானே இருந்தாள். அப்போது அவனுக்குப் பதினைந்து வயது. அவளுக்குப் பத்துக்கூட இருக்காது. பொறி பறக்கக் காய்ந்த ஜ்வரத்துடன் அவன் படுத்துக்கொண்டிருந்தான். கலவரமடைந்த குழந்தை முகத்துடன் பாரு அவனருகில் அமர்ந்திருந்தாள்—மூன்று தினங்களாக உணவும், உறக்கமுமின்றி. ஏதோ கனவுலகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்த அவன் காதில் அவள் அப்போது கூறிய வார்த்தைகள் இப்போதும் ஒலித்துக்கொண்டிருக்கவில்லையா:

"அண்ணா! உனக்கு ஒண்ணும் வராது! அப்படி நீ செத்துப் போயிட்டா அன்னிக்கே நானும் உன்னோடு செத்துப்போயிடுவேன்...!"

அதே பாருதானே இன்றும் இருக்கிறாள். ஆனால் அப்போதைக்கும் இப்போதைக்கும் எவ்வளவு மாறுதல்! எத்தனை மன மாற்றம்! உலக அனுபவமும், வயது முதிர்ச்சியும் பரந்த மனத்தை ஒடுக்கத்தானே செய்கின்றன—கூண்டிற் பறவையைப்போல்.

ஆனால் சூரியா—அதுதான் இக்கோயிலை வலம் வரும் இப்பெண்? தன் சகோதரனுக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்துவிடுவாள் போலல்லவா தோன்றுகிறாள்! உண்மையில் அச்சோதரன் பாக்கியசாலி இல்லையா, இத்தகைய சகோதரியைப் பெற்றதற்கு. ஆயினும் நிச்சயமாய்ப் பாக்கியசாலி தானா அவன்? பாக்கியமும், அபாக்கியமும் மற்றவர்களைப் பெறுவதிலா இருக்கிறது! அப்படிப் பார்க்கப்போனால் பாருவைப்பெற்ற தான் பாக்கியசாலி இல்லை என்று கூறமுடியுமா; அல்லது பாக்கியசாலி என்றுதான் தீர்மானிக்க முடியுமா!

ஏறக்குறைய இதே கேள்வியைத்தானே சூரியாவும் கேட்டாள். இச் சிறிது நாளிலேயே அவள் எப்படியோ அவன் பரிச்சயத்தையும், பரிவையும் பெற்றுவிட்டாளே!

"நீங்கள் ஏன் இப்படி இருக்கிறீர்கள்......?"

"எப்படி, சூரியா?"

"விரக்தியா, பேசாமே......!"

அவன் சற்றுநேரம் பதில் கூறவில்லை. பிறகு எங்கோ பார்த்தவாறே பேசினான்:

"சரீர நிலையைப் பொறுத்துத்தானே மனமும் மாறிவிடுகிறது......!"

அவளுக்கு இது புரியச் சற்று நேரம் ஆகத்தான் செய்தது.

"உங்கள் சரீரத்திற்கு என்ன......?"

"காசநோய் ஆரம்பம் என்று தோன்றுகிறது!"

அகலவிரிந்த அவள் கண்களில் தோன்றிய கலவரம் அவனை என்னவோ செய்தது.

"உங்களுக்குக் கூடவா.....அண்ணா மாதிரி...?"

அவன் சிரித்தான்.

"என்ன சூரியா! நானும் மனிதன்தானே...!"

ஆனால் அவள் முகத்தில் சமாதானம் அடைந்த அறிகுறி தோன்றவில்லை. அவனையே பார்த்துக் கொண்டிருந்த அவள் மெல்லக் கேட்டாள்:

"உங்களுக்கு ஒருவரும் இல்லையா, கவனித்துக் கொள்ள......?"

நீண்ட பெருமூச்சுடன் அவன் பதில் கூறினான்:

"ஏன்? பாரு இருக்கிறாள். அவள் கணவன் இருக்கிறான்......"

"பாருவா......?"

"என் தங்கை......!"

மறுமுறை அவனை ஏற இறங்கப் பார்த்த அவள்,



"அப்படி இருக்க நீங்கள் எதற்காக இவ்வூரில் தனியாக இருக்கிறீர்கள்......? வியாதி முற்றிவிட்டால்......?"

அவன் மறுபடியும் சிரித்தான். உணர்ச்சியின்றியே.

"வியாதி முற்றுவதும், முற்றாதிருப்பதும், இடத்தைப் பொறுத்தது என்று எப்படிக் கூறுவது, சூரி! வியாதி முற்றக்கூடாது என்றுதான் இங்கிருக்கிறேன். நீ பிள்ளையார் கோயிலைச் சுற்றுவதைப்போல......!"

அவள் முகத்தில் தோன்றியகுழப்பத்தைக் கண்டு அவனால் மேலே பேசமுடியவில்லை. அவன் கண்களை மாறிமாறிப்பார்த்த அவள் கண்களின் பூரிப்பு வேடிக்கையாகத்தான் இருந்தது அவனுக்கு

"நீங்கள் என்னென்னவோ புரியாமல் சொல்கிறீர்களே! உங்கள் தங்கையிடம் நீங்கள் இருப்பதுதானே உங்கள் தேகசுகத்திற்கு நல்லது, மனதிற்கும் ஆறுதல்......!"

ஆறுதல்! பாருவிடமா! பாருவுக்குத் தான் அளித்த ஆறுதலை அவளால் தனக்கு அளிக்க முடியுமா—முடிந்ததா......?"



"பாருவின் உள்ளம் என் தேக சுகத்தைப் போஷிக்கவில்லை, சூரியா! எல்லாச் சகோதரிகளும் ஒரேமாதிரியாகவா எண்ணுகின்றனர்......!"

"அப்படி என்றால்......?"

"பாருவின் கணவனுக்கும் காசநோய்.........! படுக்கையோடு இருக்கிறான்......!"

இந்தத் தடவை அவள் முகத்தில் உண்மையிலேயே பயம் தோன்றியது. அவள் வாழ்வில் தோன்றும் ஒவ்வொருவருக்கும் காசநோயா......!

"ஐயோ பாவம்! கணவன், சகோதரன் இருவருக்கும் நோய் என்றால் அவள் அதை எப்படிச் சகிப்பாள்......!"

"அவள் கணவனுக்கு நோய்வந்த சமயத்தில் எனக்கு நோயில்லை, சூரி......! அவள் பிரார்த்தனைக்குப் பிறகுதான் எனக்கு ஆரம்பித்தது...!"

"என்ன...?"

"ஆம்! அவள் தெய்வத்தைப் பிரார்த்தனை செய்தபோது அதை நான் கேட்கும்படி நேரிட்டுவிட்டது......!"

ஒன்றும் புரியாமல் விழித்த அவள் அவனையே உற்று நோக்கிக்கொண்டிருந்தாள்.

"என்ன பிரார்த்தனை செய்தாள்?"

"கண் போன்ற தன் கணவனுக்கு வந்ததற்குப் பதில் அக் காசநோய் எனக்கு வந்திருந்தால் அவள் மனம் அத்தனை பாடு படாதென்று முறையிட்டுக்கொண்டிருந்தாள்......!"

அவள் ஒன்றுமே பேசவில்லை. அவள் பார்த்த பார்வையில் பொதிந்திருந்த வேதனையையும், அர்த்த புஷ்டியையும் அவன் உணருமுன்பே அவள் எழுந்து போய்விட்டாள்.

மறுநாள் அவள் வரவில்லை. அதற்கு மறுதினம் அவள் வந்தபோது அவள் கரத்தில் இரண்டு கிண்ணங்களில் எண்ணெய் கொண்டுவந்ததை அவன் கவனித்தான். கோயிலினுள் சென்றுவிட்டு வந்தவள் அவனிடம் தயங்கியபடியே வந்தபோது அவள் முகத்தில் தேங்கிய கவலையையும், நடையில் தோன்றிய தளர்ச்சியையும், கண்டு அவன் அசந்துதானே விட்டான்.

கேள்விக் குறியுடன் அவளையே ஒரு நிமிஷம் உற்றுநோக்கிய அவனுக்குப் பதில் கூறினாள்:

"என் அண்ணாவுக்கு நேற்றுமுதல் அதிகமாய் விட்டது; கண்ணைத் திறக்கவேயில்லை......;"

அவளுடைய பரிதாபம் அவனைக் கலங்கவைத்தது. அவளுக்கு ஆறுதல் வார்த்தைகூடக் கூற முடியாத நிலை எப்படியோ கவிழ்ந்துவிட்டதே!

அச் சமயத்தில்தான் அவள் வைத்திருந்த இரண்டு கிண்ணங்களின் மேலும் அவன் பார்வை மறுபடியும் விழுந்தது.

"இரண்டு கிண்ணி எதற்குச் சூரியா......?"

அவள் சற்று நேரம் கழித்துத்தான் பதில் கூறினாள்.

"ஒன்று அண்ணாவுக்கு; மற்றொன்று......"

"மற்றொன்று...?"

"உங்களுக்கு......!"

"சூரியா..."

வறண்டிருந்த அவன் கண்களில்கூட வெகு நாளைக்குப் பிறகு நீர் தேங்க ஆரம்பித்தது அப்போது. தலையை மெல்லத் திருப்பி அதைத் துடைத்துக்கொண்டு திரும்பியபோது அவள் வெகு தூரத்தில் சென்றுகொண்டிருந்தாள்.

அன்றிரவு அவனால் எப்படித் தூங்கமுடிந்தது! தூய அன்பு வெள்ளத்தின் ஒரு துளி தென்பட்டுவிட்டால்தான் இம் மனம் கொந்தளிக்க ஆரம்பித்துவிடுகிறதே! அதற்குச் சமாதானம் கூறி எங்கே அடக்க முடிகிறது!

மூன்று நாட்களுக்குப் பிறகுதான் அவளைப் பார்க்க முடிந்தது. உணர்ச்சியற்ற வதனத்துடன், அலங்காரம் ஏதுமின்றி அவள் பிள்ளையார் கோவிலை விட்டு வெளியே வந்தபோது அவன் ஏனோ பேச்சற்று நின்று அவளை வெறித்துப் பார்த்தான். தினமும் வரும் சூரியாவா இவள்...?"

"சூரி...!"

அவள் உதடு துடித்தது. மென்று விழுங்கிய படியே பதிலுரைத்தாள்.

"அண்ணா முந்தாநாள் போய்விட்டான்...!"

அவன் ஹிருதயம் கசிந்ததே எதற்காக! முன் பின் அறியாத யாரோ ஒருவனின் மரணத்திற்கு இவன் மனம் புழுங்குவானேன்...!



வெகு நேரம் அவன் வெறித்த பார்வையுடன் அமர்ந்துவிட்டான், அவள் இருப்பதையே மறந்துவிட்டவன்போல. அவளைப் பார்க்கவில்லை; தேறுதல் கூறவில்லை; அவள் கண்களில் நீர் வற்றி இருப்பதைக்கண்டு வியக்கக்கூடவில்லை.

ஆழ்ந்த பெருமூச்சுடன் அவன் திரும்பிய போது அவளை ஒரே கேள்வியைத்தான் கேட்டான்.

"நன்றிகெட்ட இப் பிள்ளையாருக்கு இன்னும் ஏன் எண்ணெய் தானம், சூரியா......?"

அவள் நிதானமாகவே தானே இதற்கு விடை பகன்றாள்:

"அண்ணா போனாலும் பாதகமில்லை! நீங்களாவது நன்றாய் இருக்கவேண்டாமா......!"

"ஹா......!"

"ஆமாம்! அண்ணா வெறும் அண்ணாதானே! உங்களைப்போல் அவன் ஆவானா......?"

சப்தநாடியும் ஒடுங்கிவிட்டதைப் போன்ற உணர்ச்சியல்லவா அவனுக்கு மேலிட்டுவிட்டது! எல்லைமீறிய வேகத்துடன் அவன் உள்ளத்தில் புயல் வீசத்தொடங்கிவிட்டதே! நாற்பது தினங்களாக அண்ணன் உயிருக்காக மன்றாடிய அவளா இப்படிப் பேசுகிறாள்!

அவள் வெளியிட்ட வார்த்தைகளில் பொதிந்திருந்த அபூர்வ உண்மை நூதனமாகத்தான் அவன் மனத்தில் பளிச்சிட்டது.

இவளுடைய இருபதுநாள் காதல், இருபது வருடங்கள் கூடவே இழைந்து வளர்ந்த சகோதரனின் பிரிவை "வெறும் அண்ணனின்" பிரிவாக நினைக்கவைக்குமானால், பாரு செய்த பிரார்த்தனையில் என்ன தவறு இருக்கிறது! காதலித்து, கடிமணம் புரிந்து, கனியமுதம் கண்ட அவள் தன் கணவனின் உயிருக்காக, சகோதரனைப் பணயம் வைத்து தெய்வமுறையீடு செய்தது குற்றமா! சுயக் காதலுக்குப் புறம்பேதானே நிற்கிறது கடமையும், இரத்த பாசமும்! சூரியா மட்டும் இதற்கு விதிவிலக்காக முடியுமா......!

மறுநாள் அவள் ஆற்றங்கரைக்கு வந்தபோது அவன் அங்கில்லை. ஓடிக்கொண்டிருந்த ரயிலின் ஒரு மூலையில் அமர்ந்து கையில் பற்றியிருந்த கடிதத்தை வெறித்துப் பார்த்தவண்ணம் ஊருக்குத் திரும்பிக்கொண்டிருந்தான்:

"அண்ணா! 'அவர்' செத்துப் போயிட்டார்! இன்று மூன்று நாட்கள் ஆகின்றன; என் பிரார்த்தனை யெல்லாம் வீணாய்விட்டதே! இனி உன்னைத் தவிர எனக்கு யார் கதி......! பாரு"

## பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல, டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஓர் குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்ப்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் ஏற்பட்டு விட்டன. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளி வருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக் கொண்டு வந்தது. முகம் வெளுத்து விட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டு விட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒரு நாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சை போட வெளியில் வந்ததும் அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சு போன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்தும் வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு] தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையால் மருந்து தயாரிக்கப்பட்டு வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதற்க.

Shrimati. BIBI CHARAN PIARI

Sant Nagar (C. K.) Jullundur City.



## ரொக்கப்பரிசு ரூ. 1000

(அபூர்வ சக்தியுடையது)

# மாய மோதிரம்

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும் மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்துகொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்த்தேவதைகள் உங்களிடம் அணுகா. இந்த மாய மோதிரத்தை அணிந்துகொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணமற்போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும் உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றியடைவீர்கள். சுருங்கச்சொன்னால் இம்மோதிரம் ஒரு பாதுகாப்பாளரைப் போன்றது. ஒருமுறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1—15—0. ஸ்பெஷல் ரூ. 3—0—0. ஸ்பெஷல் அதிக சக்திவாய்ந்தது ரூ. 3—15—0. தபாற்செலவு தனி. பலனில்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal, Bengal Mesmerism House (C. K.)

JULLUNDUR CITY. Pb.



இனாம்! இனாம்!! இனாம்!!!

எமது நெ. **501** கறுப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான மயிரும் மைக் கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும், வளரச் செய்கிறது. புட்டி ஒன்று விலை ரூ. 1—15—0; 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—0—0.

**இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட்வாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்தரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.**

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

# AMRIT PHARMACY (C.K.)

**JULLUNDUR CITY.**

# பரிசு ரூ. 1000

(ஒரு நூதன கண்டு பிடிப்பு)

## மாய மோதிரம்



இந்த மோதிரம் அபூர்வ மந்திர சக்தியுடன் தயாரிக்கப்பட்டது. இது ஆச்சரியகரமான வேலைகளைச் செய்கிறது. எவரேனும் இம்மோதிரத்தை அணிந்துகொண்டால் எவ்வளவு கஷ்டமான காரியமாக இருந்தாலும் அல்லது தடுக்க முடியாத விபத்தாக இருந்தாலும் வெற்றி பெறுவர். இது உங்களை எல்லாவித ஆபத்துகளினின்றும் வியாதிகளிலிருந்தும் காப்பாற்றும். துர்கிரஹங்களின் தொந்தரவு நீங்கும். இம்மோதிரத்தை அணிபவர் தன் காதலரை (அவரானாலும் அவளானாலும் சரி) சுலபமாக வசப்படுத்தலாம். அவரானாலும் அவளானாலும் உங்களுக்குக் கட்டுப்படுவர். நீங்கள் காதல் உத்தியோகத்தில் வெற்றிபெற்று ஏராளமான சம்பத்தையும் அடைவீர்கள். இம்மோதிரம் உங்களுக்கு ஒரு மெய்க் காப்பாளனாக உதவும். இதை ஒரு முறை பரீட்சித்து இதன் ஆச்சரியகரமான பலன்களை முதல் இரவே காணுங்கள். விலைரூ. 1—15—0. ஸ்பெஷல் ரூ. 3—0—0. மிக சக்தி வாய்ந்தது. ரூ. 3—15—0. போஸ்டேஜ் தனி. பலனளிக்காவிடில் விலை திருப்பியளிக்கப்படும்.

Principal,

**SHINING MESMERISM HOUSE (C. K.)**

**Kartarpur (E. P.)**



# சரபோஜி ☆ மனிக்கட்டி

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

திருவையாறு நகரில் அறம் வளர்த்த நாயகி என்னும் அம்மையின் சந்நிதி. இரவிலே அர்த்த ஜாமவேளை. கணவனும் மனைவியும் கை கூப்பி நிற்கின்றனர். அம்பிகையை நோக்கி,

"அன்னாய்! என்ன செய்வேன்! நின்னைத் துதித்தேனில்லை. பாழும் வயிறே பெரிதென நினைத்தேன். அதனை நிரப்பவே இன்றளவும் பாடுபட்டு வந்தேன், ஆனது பற்றி, எத்தனையோ பேரை இந்திரன் என்றும், சந்திரன் என்றும் போற்றினேன். இனி, நீயே எனக்குச் சதம்!"

என்று அப்புருஷன் வடமொழியிலே ஓர் ஆசுகவி பாடினான். மனைவியும் கண்ணீர் உகுத்த வண்ணம், "தாயே! எல்லாம் நினது லீலை!" என்று மனத் தகத்தே துதித்தாள். அன்றாடம் அந்த அம்பிகைக்கு அர்த்த ஜாமத்திலே வடை, பாயசம் இவை நிவேதனம். அது சரபோஜியின் கட்டளை.

அர்த்தஜாம பூஜை ஆனதும், அந் நிவேதனம் தஞ்சை அரண்மனை சேரும். ஆலயக் குருக்கள் அந்நிவேதனத்தை ஒரு வட்டிலிலே எடுத்துச் செல்லுகிறார். காவலாளியொருவன் கையிலே "சூழ்ந்து" கொண்டு, வழிகாட்டி முன்னே நடக்கிறான்.

வழியிலே குருக்கள் கலகல என்று நகைத்தார். காவலாளனை காரணம் யாது என வினவினான்.

**குருக்கள்** :—அந்த ஏழை வேதியர், பலரையும் இந்திரன் சந்திரன் என்று பேசி, மோசம் போனாராமே! அறம் வளர்த்த நாயகியின் கதிதான் என்ன? சரபோஜியின் அருளின்றேல், அந்த அம்மைக்கு அர்த்தஜாம பூஜை ஏது? அரிய நிவேதனமும் ஏது? அசடு, உளறுகிறது!

**காவலாளன்** :—ஐயா! குருக்களே! கோவில் பூனைபோல் கூறுகிறீர்! பூஜையும் நிவேதனமும் தனது நலங்கருதியே செய்கிறான் சரபோஜி மன்னன்! அறம் வளர்த்த நாயகி இந்த அரசனது பூசையை இச்சித்து நிற்கிறாளா, என்ன? நமது அம்மைக்கு அபசாரம் செய்யாதீர்.

**குரு** :—காவலாள! மெய்ஞ்ஞானிபோல் பேசுகின்றாய்! மனிதராகப் பிறந்தோர்—அதிலும் ஏழைகளான வேதியராவோர்—பிரபுக்களை அண்டிக் கிடக்கவேண்டும். இந்திரன், சந்திரன் என்று போற்றியாக வேண்டும். இல்லையேல், வயிறு நிரம்ப வகை உண்டோ?

**காவ** :—ஐயனே! வேதியருக்கு வயிறு பெரிது? ஒழுக்கமும் உயர் ஞானமும் அன்றோ? வயிறே பெரிதெனின், நாயும் வயிறு வளர்க்கிறது பன்றியும் வயிறு வளர்க்கிறது. எல்லாருக்கும் வள்ளலான ஈசனை எப்படியும் துதிக்கலாம். மானிடரை வாய்கொண்டு ஏத்துவதும் துதிப்பதும் விழுப்பம் தருமோ?

குரு :—ஒரு சாண் வயிற்றைக்கொடுத்து, அனைவரையும் ஆட்டிபபடைக்கிறான் ஆண்டவன். 'இடும்பை கூர் என் வயிறே! உன்னோடு வாழ்தல் அரிது!' என்று ஔவை பாடியிருக்கிறாள். அவ்வயிறு குளிர, அவள் கூழுக்குப் பாடினாள். அதுபற்றியே கம்பரும் ஒருபடி நெல்லுக்குச் சுவர் வைத்தார்.

காவ :—வயிற்றின் நிமித்தம் அப் புலவர் தங்களை விற்றனரோ? விழுப்பத்தில் குன்றினரோ? கல்லாதவனைக் கற்றவன் என்று சாற்றினரோ? பொல்லானை நல்லான் என்று போற்றினரோ? உண்மை வேதியராவோர் உலகநாயகனைப் பாடலாம், புகழலாம். ஒன்றுக்கும் உதவாத மனிதரைப் புகழ்வதோ?

குரு :—கந்தல் ஆடை, மெலிந்த உடல், வாடிய வயிறு, வதங்கிய மேனி, இந் நிலையில் அவ்வேதியருக்குச் செருக்கு ஏன்? பந்தமுள்ள மனிதர் பிறரைப் போற்றாது காலந் தள்ளக்கூடுமோ?

காவ :—குருக்களே! அவரது வடிவும் மேனியும் கிடக்கட்டும். அவரது வதனத்திலே ஓர் ஒளி கண்டேன்; வார்த்தையிலே உனைதப கொணடேன். அவர் மனத்திலும் மகிமை இருத்தல வேண்டும், ஆனது பறறியே, மமையே நீயே சதம் என்றார்.

குரு :—அப்படியா? அவரிடம் செருக்கு—ஏழைக்கிறுக்கு—ஓங்கிநிற்பதாகவே எண்ணுகின்றேன். இன்றேல், நமது மன்னன் சரபோஜியை அடைந்து, உரத்தநாட்டில் உயர்வாக வாழலாமே. எத்துணையோ வேத வித்தகர் ஆங்கு இருக்கின்றனரே.

காவ :—அவ் வேதவித்தகரை நம் வேந்தன் விரும்பி அழைத்தான்; அங்கே அன்புடன் அமர்த்தினான். அவ்வாறே இவரையும் அவன் விரும்பியழைக்கவேண்டாமோ? வலியச் சென்றால், வயிறே பெரிதென ஆகிவிடும் அல்லவா? இவ் வேத பாரங்கதரை நமது பார்த்திபன் அறியாதுபோனதேன்?



குரு :—வேந்தன் விரும்பியழைத்தாலும், இவர் அங்கே பொருந்தி இருப்பாரா? வித்யா கர்வம் வந்து, விபரீதம் விளைக்குமே.

காவ :—ஐயனே! இவர் கர்வி அன்று, மானியே. ஏன் அபவாதம் பேசுகின்றீர். அவரது முகமும் மனமும் என்னைப் பரவசப் படுத்திவிட்டன. அவரை வேதக்கொழுந்து, ஒழுக்க சேகரர், எனறே நான் கூறுவேன்.

குரு :—காவலாள! நமக்கேன் வீண்பேச்சு? மாளிகை குறுகிவிட்டது. நமது கடமையை முடித்துக்கொண்டு திரும்புவோம். ஊர்க் கவலைப்பட்டு உள்ளம் திரிவானேன்? எல்லாம் அவரவர் தலையெழுத்துப்போல் நடக்கும்.

* * *

உரத்த நாடு என்பது தஞ்சாவூருக்கு அருகே உள்ளது. அது ஒரு சிற்றூர். உரம் (வளம்) மிகுந்த பூமியாதலின், உரத்த நாடு எனப் பெயர்கொண்டது. ஆங்குள்ள மக்களும் நெஞ்சில் உரம் (வல்லமை) உள்ள வர்கள். தஞ்சை மராட்டிய மன்னரின் தர்ம சத்திரம் ஒன்று அங்கே உண்டு.

அந்த அன்னசத்திரத்தையடுத்து, முன் னம் அங்கே அந்தணர் பலர் வசித்துவந்த னர். அவர்கள் அனைவரும் சரபோஜி மன் னவனல் அங்கே, குடியேற்றப்பெற்றவர் கள். எல்லாரும் வேதம் வல்ல வித்வான்கள். ஒழுக்கத்தினல் விழுப்பம் வாய்ந்தவர்கள்.

நாள்தோறும் அவர்கள் தம் மரபுக்குரிய வேதநியமங்களை விதிப்படி ஆற்றவேண்டும். அனுடம சிவபூஜை செய்யவேண்டும். செய் ததும், தஞ்சைச் சீமை வாழ்க, சரபோஜி மன்னன் சிறப்பெய்துக என்று துதிக்க வேண்டும். பின்னர் அப் பார்த்திபனுக்கு மங்கள அட்சதை அனுப்பவேண்டும்.

அதற்காக அவ் வேதியருக்கு வருஷவாரி இவ்வளவு நெல் என்பது உண்டு. அவ் வித்வான்களின் வழியில் வந்தவர்கள் இன் றும் சத்திரம் இலாகாவிலிருந்து அதனைப் பெற்றுவருகிறார்கள். சிலரோ அந்த உரிமை யைப் பிறருக்கு விலைக்கு விற்றுவிட்டனர். அவ்விதம் ஏற்பாடுசெய்திருந்த அரசனது பக்தியைப் பார்ப்போம்.



மறையவர் மகாதேவனைத் துதித்துத் தரும் மங்களாட்சதையை ஒருவர் குதிரைமீதமர்ந்து, தஞ்சாபுரிசென்று, மன்னவனுக்கு அளிப்பார். அதனை அவன் தனது சிரசில் ஏற்றுக்கொள்வான்; கைகூபபிக் கும்பிடுவான், பின்பே போஜனம் கொள்வான். இஃது அவனது நித்தியவிரதம்.

ஒருநாள் அதிகாலை, உரத்தநாட்டு அந்தணர் அனைவரும் நீராடச்சென்றனர். ஒருவர் தவிர அனைவரும் வந்திருந்தனர். எங்கே அவர், எங்கே அவர் என்று எல்லோரும் வினவினர். நாற்புறமும் பார்த்தனர். தொலைவில் வருகிறாரோ என்று கூர்ந்து நோக்கினர். பேர்வழி தென்படவில்லை.

**ஒருவர்** :—அது ஒரு கர்நாடகம்! இன்னும் சௌசம் செய்துகொண்டிருக்கும். மகாசாந்தஸம்!

**மற்றவர்** :—அதிசயப் பிறவி அது. இங்கிதம் என்பதே அதுக்குத் தெரியாது. மூக்கைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டால், மலை புரண்டுவந்தாலும் அசையுமா?

**வேறொருவர்** ;—நேற்று மன்னவன் சரபோஜி வந்தானே. சட்டென்று எழுந்து வந்ததா? சீக்கிரமாகத்தான் பூஜையை முடித்ததா? மன்னவனுக்கு மரியாதை செய்ததா, மமதையா, மூர்க்கமா?

**இன்னொருவர்** :—மமதையும் இல்லை, மூர்க்கமும் இல்லை. மிக்க நெறி உள்ளவர், எதிலும் இம்மியளவும் பிசகாதவர். மந்திரலோபம், ஸ்வரலோபம் சிறிதும் அவரிடம் காண முடியாது. அவரை ஏன் பழிக்கிறீர்கள்?

**பின்னுமொருவர்** :—சுப்புக்குட்டி, மணிக்குட்டிக்கு வக்காலத்து வாங்கிவிட்டார். இரண்டும் சரி ஜோடிதான். இனம் இனத்தோடே, வெள்ளாடு தன்னோடே, இரண்டும் குட்டி, ஒன்று சுப்பு, மற்றொன்று மணி.

**மற்றுமொருவர்** :—பெயருக்கு ஏற்ப அவர் மணிதான். உச்சரிபபு, ஸ்வரம் இவற்றின் இலட்சணத்தை மணிக்குட்டியிடந்தான் காணமுடியும். வேதங்களை வகுத்த முனிவரன், அல்லது வேதன் என்றால அவருக்கே தகும். அவரிடம் எல்லாரும் பாடம் கேட்க வேண்டும்.

**ஒருவர்** :—எல்லாம் சரிதான். அதற்கு இங்கிதமே தெரியவில்லையே. எல்லாம் அறிந்தும், மோழையாக இருப்பதா? வெறும் படிப்பு என்ன பயன் தரும்?

**மற்றவர்** :—நேற்று இங்கே சரபோஜி வந்து எல்லாருக்கும் சால்வை வழங்கினரே, அப்போது எல்லாரும் மகிழ்பூத்தனர். அதுவோ மரம்போல் நின்றது மகிழ்ச்சியே காட்டவில்லை. மன்னவன் அதனைத் தனியே இட்டுச் சென்றான். ஏதேதோ பேசினான்.

**இன்னொருவர்** :—சரிதான். அரசனுடன்பேசி அது திரும்பியதும் அதன் முகத்தைப் பார்த்தேன். முகத்தில் பிரசன்னமேஇல்லை. அசடு வழிந்தது. மன்னவன் சினந்து பேசினான்போலும். அல்லது அதுதான் அவமரியாதையாகப் பேசியதோ என்னவோ?

**வேறொருவர்** :—இருவருக்கும் இடையே ஏதோ நடந்திருக்கிறது. அதனால்தான், அந்தச் சாந்தஸத்தை இன்று காணமுடியவில்லை. மன்னவன் அதன் சீட்டைக் கிழித்துவிட்டான் போலும். இரவோடு இரவாக அது எங்கேயோ போய்விட்டது.

**இன்னொருவர்** :—அது வீட்டில் இல்லையா என்ன? உமக்கு எப்படித் தெரியும்?

இவ்விதம் பலரும் பேசி நிற்கையில், குதிரைமீது அட்சதை கொண்டுபோகும் வேதியர் அங்கே வந்தார்; குட்டி சாஸ்திரிகள் எங்கே என்று எல்லாரையும் கவலையுடன் கேட்டார். எங்கும் அவரைத் தேடிப் பார்த்தார்; புலன் ஒன்றும் புலப்படவில்லை.

உடனே ஓடிச் சென்று வீட்டைப் பார்த்தார். வீட்டிலும் அவர் இல்லை. தர்ம பத்தினியைக் கேட்கலாம் என்றால், அந்த உத்தமியும் அங்கே காணப்படவில்லை. அவ்வளவில் கவலை தேங்கிய முகத்துடன் அவர் நீர்த்துறை திரும்பினார்.

* * *

திரும்பியதும், எங்கே அது? வீட்டில் இருக்கிறதா? என்று ஆவலுடன் எல்லோரும் வினவினர். வீடு திறந்துகிடக்கிறது. வீட்டில் பத்தினியையும காணோம் என்று அவர் சொன்னார். உடனே பலருக்கும் பிரமை தோன்றியது. மணிக்குட்டி மாயமாகப் போய்விட்டதே என்று எல்லோரும் மறுகினர்.

குதிரைமீது அட்சதை கொண்டுபோகும் அந்தணரோ கருத்தழிந்தார்; கண்ணீர் வடித்தார்; மணிக்குட்டியின் மறைவுக்கு நானன்றோ காரணம் என்று நைந்தார்; மன்னன் சரபோஜி இதனையறியின் மங்கி மடிவானே என்று ஏங்கினர். அதன்மேல், அனைவரும்

அவரையடுத்து விஷயம் யாதென வினவினர். அவர் கூறுவார்:—

"தினம்தினம் நான் குதிரைமீது மங்களாட்சதை கொண்டுசெல்வேன் அல்லவா? மணிக்குட்டி அட்சதை கொடுக்கநேரமாகும். அதனால் கடைசியிலே அவரது வீடு செல்வது என் வழக்கம். ஒருநாள் அவர்வீடு சென்று நெடுநேரம் காத்திருந்தேன.

"பின்பு சரபோஜியின சமுகம் சேர்ந்தேன். அன்று அரசனுக்குப் பசிவாதை அதிகம், ஆதலின், 'ஏன் இத்தனைநேரம்?' என்று அவன் கடுகடுத்தான், மணிக்குட்டி அட்சதை கொடுக்க நேரமாகிறது எனறேன். அப்படியா என்றான் அரசன். ஆம் என்றேன்.

"நேற்றையதினம் நிருபன் இங்கே வந்திருந்தபோது, அவரைத் தனிமையில் அழைத்து, 'சாஸ்திரிகளே! அனுஷ்டானங்களை விரைவில் முடித்துக்கொள்ளக்கூடாதா?' என்று கேட்டான். அவரோ நல்லது என்று நவின்றார். அரசனையும் ஏறிட்டுப் பார்த்தார். அப்போதே என் வயிற்றில் புளியைக் கரைத்ததுபோல ஆயிற்று.

"நேற்று இரவு அவர் பெரிதும் பெருமூச்சு எறிந்தார். அறுவகைத் தொழிலிலே —ஓதல், ஓதுவித்தல, வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்—ஏற்றல் இழிவுதான். ஆதலின் அதனைக் கடைசியில் நிறுத்தினர். அரசனிடம வருஷவாரி நெல்லை வாங்கியதனால், அது ஏற்றல் ஆயிற்று. அந்த ஏற்றலோ இப்போது ஊழியம் ஆக மாறிவிட்டது! இது பிராமணனுக்கு அடுக்காது. என்று நினைத்தவராய், இரவோடு இரவாக மனைவியுடன் எங்கேயோ போய்விட்டார்!"

அது கேட்டதும் அந்த அந்தணர் அனைவரும் பிரமித்தனர், வியந்தனர், வெட்கினர், வருந்தினர், வாழ்த்தினர். மணிக்குட்டியே! நீ மணிக்குட்டிதான் என்று போற்றினர்; மறையவரின் குலத்தினுக்கு நீயே மாமணி என்று துதித்தனர்; உன் து நெறியும் நேர்மையும் நவிலப்போமோ என்று நெக்குருகினர்.

பல சொல்லி என்ன? சரபோஜி அவ்விவரம் உணர்ந்தான், உத்தமரைப் பறிகொடுத்தேனே என்று உணர்வழிந்தான். வேதக்கொழுந்தின் தரிசனம் இனி என்று கிட்டும், என்று புலம்பினன். பெரியாரின் அருள் கிட்டவேண்டும் என்று அறம் வளர்த்த நாயகியைத் தொழுதான்.

அவ்வளவில், முந்தைய இரவு வடை, பாயச நிவேதனம் சுவையில்லாது தென்பட்டதின் காரணத்தை ஊகித்து உணர்ந்தான்.

அறம் வளர்த்த நாயகியின் சந்நிதியில் வருந்தி நின்ற சதிபதிகள் மணிக்குட்டி தம்பதிகள். மறுதினம் கதிரவன் தோன்றுமுன்னம் இருவரும் கால்நடையாக அத்திருவையாற்றை விட்டகன்றனர். ஊர் ஊராகச்சென்று உஞ்சவிருத்தி எடுத்துக் கொண்டு, வடநாடு நோக்கிச் சென்றனர்,

அப்போது இரண்டாம் பாஜிராவ், கடைசி பேஷ்வா பூனாவிலிருந்து அரசு செலுத்தி நின்றான். அவன் அருங்கலை விநோதன். ஆதலின், அவனது சபைசேர்ந்தார் மணிக்குட்டி. ஆங்கிருந்த புலவரனைவரையும் வாதில் வென்றார்; வேண்டிய பரிசுபெற்றார்.

பேஷ்வாவுக்கு உட்பட்ட சிற்றரசர், ஜமீன்தார்கள், பிரபுக்கள் முதலிய அனைவரும் மணிக்குட்டிக்குக் குடை, கொடி, பல்லக்கு முதலியன அளித்து மகிழ்ந்தனர். பின்பு அவர் தமது பிருதுகளுடன் நமது தமிழகம் சேர்ந்தார்.

அப்போது காஞ்சி காமகோடி பீடாதிபதிகளுக்கு ஒரு ராஜபிருது சமர்ப்பித்தார்; தமது பிறப்பிடமான திருவிசைநல்லூர் காஞ்சி வரதராஜப் பெருமானுக்கும் குடை பிருதொன்று காணிக்கையாகக் கொடுத்தார்.

ஆங்கிலக்கும்பினியார் அப் பேஷ்வாவைச் சிறைசெய்து, வடக்கே கான்பூர் நகருக்கு அனுப்புகையில், அருகேயிருந்த மணிக்குட்டி, "அரசே! இந்தக் கும்பினியரசு சின்னாளில் அழியும்" என்று கூறி, அப் பேஷ்வாவுடன் இருந்து ஆறுதல் கூறிவந்தார்.

மணிக்குட்டி அல்லது குட்டி சாஸ்திரிகள் என்பவரே வடநாட்டு வடமொழி வித்துவான்களின் விறடக்கி, நம் தமிழகவித்துவான்களுக்குத் தனிச்சிறப்பு ஊட்டியதும், பிறவும் மெய்ச் சரித்திரமாகும!

# போட்டியில் வெற்றி

ஆர். சுப்பிரமணியன்



'கலகல' வென்று குழந்தைகள் சிரிக்கும் சப்தம் கேட்டது. ஜன்னல் வழியே வெளியே எட்டிப்பார்த்தார் விசுவநாதசர்மா.

எதிர்வீட்டு நாட்டுப்பெண் கையில் தங்க விக்கிரகம்மாதிரி கைக்குழந்தையுடன் நின்றுகொண்டிருந்தாள். அவளைச் சுற்றி மற்றக் குழந்தைகள் நின்றுகொண்டு குழந்தையோடு விளையாடிக் கொண்டிருந்தன.

விசுவநாத சர்மா ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டார். ஆனாலும் அவர் இதயபாரம் நீங்கவில்லை. காற்றடிக்கும்போது நீறு விலகி நெருப்பாகப் பற்றிக்கொள்ளும் தணலைப்போல அவர் மனத்திலும் கடந்தகால நினைவுகள் வந்து சூழ்ந்துகொண்டன.

அவர் பார்வை தற்செயலாக மேலே மாட்டி இருந்த சிறு போட்டோவின் மேல்விழுந்தது. அதைக் கையிலெடுத்து அதன்மேல் படிந்திருந்த தூசியைத் துடைத்தார். முப்பத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் எடுத்த போட்டோ அது. காலப்போக்கில் மங்கிவிடும் அழகைப்போல அதன் பிரகாசமும் மங்கியிருந்தது. அந்தப் போட்டோவில் இரண்டு வாலிபர்கள், சுமார் இருபது வயதே நிரம்பியவர்கள் தோளோடு தோள் இடித்துக்கொண்டு நின்றார்கள். படத்தில் இருவரும் நெருங்கித்தான் நின்றார்கள். ஆனால் உண்மையில்? அவர்கள் உள்ளம் நெருங்கித்தான் இருந்ததா?

அந்தக் காலத்தில் திருவையாற்றிலிருந்து படிக்கப் போனவர்கள் நிரம்பக் குறைவு. பள்ளிக்கூடத்துக்குமேல் ஊரை விட்டு ஊர் போய் படிக்கிறவர்கள் நாகரிகம் என்று சொல்லிக்கொண்டு மதப்பற்றை விட்டுவிடுகிறார்கள். குணமும் பண்பும் சீர்கெட்டுப்போய்விடுகின்றன என்று பெரியவர்கள் புகார் செய்வதுண்டு. அதனால் வெளியூருக்குப்போய் காலேஜில் சேர்ந்துபடிக்கும் சாமர்த்தியம் இருந்தவர்கள்கூடப் பள்ளிக்கூடத்தோடு படிப்பை நிறுத்திவிட்டார்கள்.

விசுவநாதனும் ஸ்வாமிநாதனும் சேர்ந்து படித்துவந்தார்கள். இரண்டுபேரும் ஒரே தெருவில் வசித்தவர்கள். வகுப்பில் சமமாக முதல் மார்க்கு வாங்குவார்கள். இந்தத் தடவை விசுவநாதன் முதல் என்றால் அடுத்த தடவை அந்தப் பதவியை ஸ்வாமிநாதன் தட்டிக்கொண்டு போய்விடுவான். கடைசியாகப் பள்ளியைவிட்டு வெளியே வந்தபோதும் இந்தப் போட்டி விடவில்லை.

விசுவநாதனின் தகப்பனார் கொஞ்சநாள் யோசனை செய்தபிறகு கடைசியாக ஒருநாள் ரகசியமாக விசுவநாதனைக் களத்துமேட்டுக்குக் கூப்பிட்டுக்கொண்டுபோய், புத்தி சொன்னார். "இதோபார்! நம்முடைய ஆஸ்தி அப்படி ஒன்றும் அதிகமில்லை. நம்முடைய சொத்து நீ மேலுக்குப் படிப்பதனால் கொஞ்சம் குறைந்துபோகலாம். அதற்காக நான் வருத்தப்படவில்லை. ஆனால் நீ அதைவிடப் பலமடங்கு மேலான நம்முடைய

குல கௌரவத்தைக் குறைத்துவிடக்கூடாதே என்றுதான் கவலைப்படுகிறேன். செல்வத்தை இழக்க நான் தயார். மகனைப் பிரிந்துவிடவும் தயார். ஆனால் குலகௌரவம் நசித்துப் போவதைச் சகித்துக்கொள்ளக்கூடிய திடமும் துணிவும் எனக்குக் கிடையாது" என்று சொன்னார் விசுவநாதன் அவர் காலில் விழுந்து கண்ணீர் பெருக்கினான்.

கலாசாலையில் போய்ச் சேர்ந்தபிறகு ஒவ்வொரு நாளும் அந்தப் புத்திமதியை அவர் ஞாபகப்படுத்திக்கொண்டே இருந்தார். தான் மட்டுமே கலாசாலைக்கு வந்திருப்பதாக முதலில் அவருக்குச் சிறிது கர்வம் இருந்தது. முதல்நாளே அதுவும் பங்கம் ஆயிற்று. வகுப்பில் போய் உட்கார்ந்தவர் அகஸ்மாத்தாகப் பின்புறம் திரும்பினார். பின்னால் உட்கார்ந்திருந்த மாணவனைக் கண்டதும் அவர் முகம் வெளிறிவிட்டது. அங்கே உட்கார்ந்திருந்தவன் ஸ்வாமிநாதன்.

பள்ளிக்கூடத்தில் தொடங்கிய போட்டி கலாசாலையிலும் விடவில்லை. அவருடைய வாழ்க்கையில் அந்தத் துறையில் அவருக்கு நிம்மதி இல்லாமலே போயிற்று. ஸ்வாமிநாதன் தூங்குகிறவரைக்கும் அவரும் படித்துக்கொண்டிருப்பார். அவன் ஒரு பாடத்தில் முதல் மார்க்கு வாங்கிவிட்டால் அடுத்த தடவை அதே பாடத்தில் முதல் மார்க்கு வாங்குகிறவரைக்கும் அவருக்கு மன நிம்மதி இருக்காது. படிப்பிலும், விளையாட்டிலும், சின்னஞ்சிறு விஷயங்களிலும்கூட அந்தப் போட்டி நிற்கவில்லை.

இருவரும் வக்கீலுக்குப் படித்தார்கள். சேர்ந்தாற்போல் முன்சீப் ஆனார்கள் விசுவநாதன் கொஞ்சம் முந்திக்கொண்டார். ஹைகோர்ட் நீதிபதியாகப் பதவியிலிருந்து கௌரவத்துடன் விலகி ஓய்வெடுத்துக்கொண்டார். ஆனால் அவர் மனம் நாடிய நிம்மதி அவருக்குக் கிடைக்கவில்லை. அவருடன்கூடவே உயர்ந்த பதவியிலிருந்து ஸ்வாமிநாதசர்மாவும் நீதிபதியாகவே விலகிக்கொண்டார்.

வருஷப்பிறப்பு. மாட்சிமை தங்கிய மன்னர் தம் பிரஜைகளில் சிலருடைய அத்தியந்த விசுவாசத்தைப் பராட்டிப் பட்டங்களை வாரிவழங்கி இருந்தார். ராவ்பகதூர் விசுவநாத சர்மா என்ற பெயரைக் கண்டு அவர் தேவாமிர்தம் பருகின மாதிரி சந்தோஷப்பட்டார். கூடவே இருந்த அடுத்தபெயர்......ராவ்பகதூர் ஸ்வாமிநாதசர்மா ......ஈசுவரா! இந்தப் போட்டிக்கு எல்லைதான் ஏது? முடிவு எங்கே?

அவருடைய வாழ்க்கையும் நிம்மதி இல்லாமலே நடந்துவிட்டது. ஒவ்வொரு நிமிஷமும் ஒருவரை ஒருவர் முந்திவிடப் போட்டியிட்டார்கள். அந்தப் பந்தயத்திற்கு ஓய்வு என்பதாகவே ஒன்று இருக்க முடியவில்லை. ஒவ்வொரு கணமும் ஒவ்வொருவரும் மற்றவரை முந்திவிட எந்தச் சந்தர்ப்பம் கிடைத்தாலும் அதை உபயோகித்துக்கொள்ளத் தயாராக இருந்தார்கள். அவருடைய பிள்ளை சுந்தரம் நன்றாகப் படித்துக்கொண்டுவந்தான்.



ஸ்வாமிநாத சர்மாவின் பிள்ளை ஒருவனும் அவ னுடனேயே படித்துக்கொண்டுவந்தான்.

விசுவநாத சர்மாவுக்கு அவன் ஒரே பிள்ளை. எவ்வளவோ அருமையாக வளர்த்தார். காலே ஜுக்கு அனுப்புவதற்கு முன்னால் பையனைக்கூப் பிட்டுப் புத்தி சொன்னார்.

"போய் நல்ல பெயருடன் படி. உன்னால் முடிந்தவரை முயற்சிசெய்து படி. அதுபோதும். நீ முதல் மார்க்கு வாங்காவிட்டால் நான் உன் னைக் கோபித்துக்கொள்ளமாட்டேன். ஆனால் கெட்ட பெயருடன் திரும்பிவராதே. நம்முடைய குலப்பெயருக்குக் கேடு தேடிவைக்காதே. கல் லூரியில் எத்தனையோ விதமான பையன்கள் இருப்பார்கள். என்னென்னவோ சொல்லிக் கொடுப்பார்கள். அதையெல்லாம் காதில் வாங் கிக்கொள்ளாதே. இந்தப் புரட்சி ஒன்றிலும் சேர்ந்துவிடாதே" என்று சொல்லி அனுப்பினார்.

அந்தக்காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து வடக்கே ஒரு வயதான மனிதர் கிளம்பினார். அவரைத் தொடர்ந்து இன்னும் பலபேர் கிளம்பி னார்கள். வெள்ளைக்காரனைப் பார்த்து, "எங்க ளுக்குச் சுதந்தரம் கொடுத்துவிட்டு வெளியேறு" என்று கேட்டார்கள். அந்தக் கொள்கைகளில் சில பேருக்கு நம்பிக்கை இருந்தது. சில பேருக்கு நம்பிக்கை இல்லாமலும் இருந்தது. "ஆறுயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வந்தவன் இவர்கள் கூச்சலுக்குப் பயந்து ஓடிப்போய்விடுவானா?" என்று சில 'பெரிய மனிதர்கள்' சொன்னார்கள் அதில் விசுவநாத சர்மாவும் ஒருவர்.

ஆனால் அந்த மகாத்மாவின் கட்சி வரவர வலு வடைந்தது. பெரிய பெரிய மனிதர்கள் அவர் சொன்னார் என்பதற்காகப் பெரிய உத்தியோகங் களையும், செல்வ சுகங்களையும் விட்டுவிட்டுத் தியாகிகளாக மாறினார்கள். தேசம் முழுதும் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. அதனால் விசுவநாத சர்மாவைப்போன்ற சில பெரிய மனிதர்களுக்கு ஒரு கிலியும் ஏற்பட்டது. பிள்ளைகளைக் கல்லூ ரிக்கு அனுப்பினால் எங்கே இந்தக் கட்சியில் சேர்ந்து கொண்டுவிடுவார்களோ என்று பயப்பட் டார்கள். அதனால்தான் அவர் அவ்வளவு தீவிரமா கச் சுந்தரத்துக்குப் புத்திமதி சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

கல்லூரியில் சேர்ந்த ஒரு வருஷத்துக்குச் சுந் தரம் அவர் சொற்படி கேட்டுக்கொண்டிருந்தான். அடிக்கடி ஒழுங்காகக் கடிதம் வந்துகொண்டிருந் தது. அப்புறம் கொஞ்சம் நாட்கள் பணம் வேண்டுமென்கிறபோது மட்டும் சுருக்கமாகக் கடிதம் வந்துகொண்டிருந்தது. கடைசியாக அது வும் நின்றுவிட்டது. ஹாஸ்டல் வார்டனுக்கு ஒரு கடிதம் எழுதினார். அவரிடமிருந்து வந்த பதில் விசுவநாத சர்மாவைக் கதிகலங்க அடித் தது.

"உங்கள் பையன் ரொம்பக் கெட்டுப்போய்விட் டான். படிப்பைப்பற்றி அவன் கவலைப்படுவ தாகத் தெரியவில்லை. விடுதலை இயக்கத்தைப் பற்றிய கூட்டங்களிலும், பிரசாரங்களிலும் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொள்கிறான். அவ னைக் கண்டிக்க வேண்டியது உங்கள் பொறுப்பு. அவனுடைய முன்னேற்றத்தில் அக்கரை உள்ள வர் என்பதனால் உங்களுக்கு இதைத் தெரி விக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்"

அதற்குப் பதிலாக அவர் காரசாரமாகச் சுந்த ரத்துக்கு ஒரு கடிதம் அனுப்பினார். "உடனே நீ நேரில்வந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டால் ஒழிய, உனக்கு இனிமேல் பணம் அனுப்பமாட் டேன்" என்று அதில் எழுதியிருந்தார். ஒரு வாரம் எதுவும் நடக்கவில்லை. மறுபடி அவர் எழுதிய கடிதத்தில் "நான் செய்தது தப்பு என்று ஒப்புக்கொள். பணம் அனுப்புகிறேன்" என்று எழுதினார். அதற்கும் பதில் வரவில்லை. பெற்ற மனம் தளர்ந்தது. பணத்தை அனுப்பினார். பெற்றுக்கொண்டதாக ரசீது மட்டும் வந்தது. அவர் மனம் கொதித்தது.

அடுத்த மாதம் அவருக்கு வார்டனிடமிருந்து ஒரு தந்தி வந்தது. உடனே புறப்பட்டுப்போனார். சுந்தரம் சத்தியாக்கிரகம் செய்த குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டிருந்தான். அவர் அவனுக் காகத் தீவிரமாக வாதாடியிருந்தால் அவன் விடு தலை அடைந்திருக்கலாம். அப்போது அவர் பதவி மளமளவென்று உயர்ந்துகொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் ஒரு கைதிக்கு—விடுதலை இயக் கத்தைச் சேர்ந்தவனுக்காக—அவர் வாதாடினால் சர்க்கார் அவரிடம் வைத்திருந்த நன்மதிப்பு அனைத்தும் பாழாகிவிடும். தவிர ஸ்வாமிநாதன் அவரை அடுத்து வந்துகொண்டிருந்தவன் நிரந்தர மாக அவரை முந்திக்கொண்டு போய்விடுவான்.

அதிகம் யோசிக்க அவர் மனம் இடம்கொடுக்க வில்லை. அதுவும் ஒரு வெறி என்றுதான் சொல்ல வேண்டும். பதவிக்கும், கௌரவத்துக்கும், அந் தஸ்துக்குமாக மகனைப் பலிகொடுத்தார். சுந்தரத் துக்கு இரண்டு வருஷம் கடுங்காவல் கிடைத்தது. அதில் தமக்குச் சம்பந்தம் இருப்பதாகவே அவர் காட்டிக் கொள்ளவில்லை.

சுந்தரம் இரண்டு வருஷத்துக்கப்புறம் விடுதலை யானான். பெரிய அந்தஸ்திலிருந்த தகப்பனாரைத் தேடிக்கொண்டு வரவில்லை. எங்கேயோ போய் விட்டான். இன்று அவரைப் பொறுத்தவரையில் சுந்தரத்தை அவர் இழந்துவிட்டார். அவர் உடல் தளர்ந்துவிட்டது. மனமும் தளர்ந்தது. எதன்மேலும் இப்போது அவருக்கு ஆசையில்லை. ஆசைக்கு ஒரு பேரன், பெருமைக்கு ஒரு பிள்ளை, வீட்டில் விளக்கேற்றிவைக்க ஒரு நாட்டுப்பெண். இதுதான் அவருடைய ஆசை. அந்த ஆசை ஒருவேளை நிறைவேறி இருக்கலாம்; சுந்தரத்தை அப்போதே அவர் காப்பாற்றி இருந்தால்—ஆனால் இப்போது எல்லாம் முடிந்துபோய்விட்டது. அணைந்துபோன நெருப்பைப்பற்றிக் கவலைப்பட்டு என்ன பிரயோஜனம்?



## எமது முதல்தரமான
## சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன !

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும் !

# கே. சுவாமிநாதன் & கம்பெனி

**24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.**

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.
No. 8/44, ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.
தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

# MEHTA'S SPECIALITIES

*Well-known for their efficacy and Medicinal values*

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJ*
A great Blood Purifier & Digestive & Potential Tonic.

# K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

## ஏன் உங்கள் குழந்தை நோயுற்றிருந்தது?



உங்கள் குழந்தை நோயுற்றிருப்பதின் மூலகாரணத்தைப் பற்றி நிச்சயமாக புரிந்துக் கொள்ளுங்கள். சிகிச்சைக்கு பிறகும் மறுபடி மறுபடி வருவதும், அல்லது அதற்கு கட்டுப்படாமல் நிலைத்திருப்பதுமான உபத்திரவத்தின் சிறிய அறிகுறிகள் ஈரல், குலை நோயைக் குறிப்பதாயிருக்கலாம். இவைகளை ஒரு டாக்டரால் தடுக்க முடியும்.

பசியின்மை — சோம்பல் — சிடுசிடுப்பு — மலச்சிக்கல் அல்லது வயிற்றுப்போக்கு — வாந்தி — பருத்த அல்லது உஷ்ணமான வயிறு — இடைவிடா ஜ்வரம் — சரீர இளைப்பு.

**ஜம்மியின்**

# லிவர்க்யூர்

ஈரல், குலை நோய்களுக்கும் அவைகள் வராமல் தடுப்பதற்கும் உதவுகிறது. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

பெரிய கடை தெரு, தெப்பக்குளம். திருச்சிராப்பள்ளி. பெரிய தெரு, கும்பகோணம். ஆர்காட் ஸ்ரீனிவாசாச்சார் தெரு, பெங்களூர் ஸிடி. மற்ற சிகிச்சை ஸ்தாபனங்கள்:— பம்பாய் - நாகப்பூர் - லக்னோ - கல்கத்தா - விஜயவாடா - விஜயநகரம்.

**ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்**

3, பிராகல் ரோடு, மைலாப்பூர், மதறாஸ்.



# DON'T WORRY!!



Try "KUMARI" (Tablets) to remove your anxieties over difficult days and fear of periodical delays at any stage, under any circumstances and prevent future troubles! Speedy and harmless!! Thousands satisfied!!! Normal potency Rs. 3. Special Rs. 5. Extra Special Rs. 8. (V. P. Extra)

## Mrs. P. DEVEE, F. D. S. (C. M.)

TOLLYGUNGE, CALCUTTA-33.

கீழ்க் கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

(1) நாதம் & கோ.
மட்டஞ்சேரி
கொச்சின்

(2) இண்டோ மெடிகல் சப்ளைஸ்
205, தங்கசாலைத்தெரு,
(மிண்ட் ஸ்டிரீட்)
மதராஸ்-1

(3) நியூ டவுன் ஏஜன்ஸீஸ்
804-B. "ஹரிநிவாஸ்"
வின்ஸெண்ட் ரோடு
தாதர் - பம்பாய் - 14

(4) L. M. முகர்ஜீ & ஸன்ஸ் லிமிடெட்
167, தாரம்தலா தெரு
கல்கத்தா

(5) ஆந்திரா எம்போரியம்
76-78, டூப்ளெக்ஸ் தெரு
புதுச்சேரி

(6) பயனீர் பார்மஸி
183, மெயின் ரோடு
பேட்டா - கொளும்பு
(இலங்கை)

(7) ஓவர்ஸீஸ் ஜெனரல் ஏஜன்ஸி
72, அம்பாங் தெரு
கோலாலம்பூர் (மலேயா)

*Wanted Stockists in Unrepresented Areas on Favourable Terms*

**READ WHAT SATISFIED CUSTOMERS SAY!**

**K. P.,** Bombay-"More than four months' overdue was restored to its usual state after using only 2 phials of Special Tablets."

**V. K.** East Africa-"Tried many similar products. None ever worked but only one packet of your Extra-Spl. tabs. brought wonderful results."

K. L. R., Ceylon—"Remember. I bought two phs. of your medicine which relieved my patients wonderfully. Send 6 phs. more per return."

Mrs. David Bangalore—'Your KUMARI is a miraculous preparation. You have saved my life. I must introduce this to my friends.'

*Almost daily, lot of unsolicited appreciations pouring in our files from differnt parts of the World.*

கடைசியாக ஸ்வாமிநாதனுக்குத்தான் வெற்றி. இனிமேல் அவருடன் போட்டியிட அவருக்கு யோக்கியதை இல்லை. ஸ்வாமிநாத சர்மாவுக்கு மணிமணியாக ஆறு பிள்ளைகள். போன வருஷம் அவருக்கு அறுபது வயது ஆனபோது எல்லோரும் அங்கே வந்து அந்த வைபவத்தை அமோகமாகக் கொண்டாடினார்கள். அவர் கொடுத்துவைத்தவர். இல்லாவிட்டால் கிடைத்தற்கரிய இத்தகைய சந்தோஷம் கிடைக்குமா?

அடுத்தாற்போல், தான் நாளைக்குக் கண்ணை மூடினால் ஏனென்று கேட்க யார் இருக்கிறார்கள்? அவருடைய சொத்தின்மேல் கண் வைத்திருப்பவர்கள் வேண்டுமானால் வந்து கூட்டமாகக்கூடலாம். ஆனால் உண்மையாக அவர் பிரிந்து போவதற்காக மனம் உருகி வருந்துபவர்கள் யார்? பிறக்கும்போதாவது அவரைப் பார்த்துக்கொள்ள எவ்வளவோ பேர் இருந்தார்கள். அறுபது வருஷ வாழ்க்கைக்குப் பிறகு அவர் தன்னந்தனியாகிவிட்டார். அவர் இப்படியே அநாதையாகிக் கண்ணை மூடவேண்டியதுதானா ?

அவர் கண்களில் நீர் பெருகியது. பனிப் படலத்தில் ஏற்கனவே மங்கியிருந்த பொருள்கள் கண்ணீரில் அவர் பார்வைக்கு இன்னும் மங்கித் தெரிந்தன. ஒளி பெருகிக்கொண்டு வந்தது. அவரவர்கள் எழுந்து வேலையைக் கவனிக்க ஆரம்பித்து விட்டார்கள். அவருக்கு என்ன அவசரம்?

ஜன்னல் வழியே அன்றைய பேப்பர் உள்ளே வந்து விழுந்தது. அவர் அதைக் கவனிக்கவே இல்லை. சமையற்காரன் காப்பி கொண்டுவந்தபோது அதை எடுத்து மேஜைமேல் வைத்தான். அகஸ்மாத்தாக அவர் பார்வை ஒரு தலைப்பின்மேல் விழுந்தது.

"தியாகிகளுக்கு நிலம்" என்ற தலைப்பின் கீழ் சில பெயர்களைப்பற்றி எழுதியிருந்தது. தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த சுந்தரம் என்பவர் 1942ஆம் வருஷ சத்தியாக்கிரஹத்தில் படிப்பைத் துறந்துவிட்டுத் தொண்டில் சேர்ந்துகொண்டவர் என்ற குறிப்புக்கு நேரே அவருக்கு மதுரை ஜில்லாவில் நிலம் கொடுக்கப்பட்டிருப்பதாக எழுதி இருந்தது.

சுந்தரம் என்பது வேறுயாராக இருக்கமுடியும்? அவர் மனம் படபடத்தது. கடைசியாக ஒரு ஆசை, ஒருவேளை அவன் கிடைக்காவிட்டால் மறுபடி இங்கே வந்து என்ன செய்யப் போகிறார்? சொத்தைத் தர்மத்துக்கு எழுதி வைத்துவிட்டு, தேசாந்தரியாகவாவது போகலாம்.

அன்று சாயங்காலம் மதுரைக்கு டிக்கட் வாங்கினபோது அவர் அந்தக் காரியம் எவ்வளவு கஷ்டமானது என்று தெரிந்துகொள்ளவில்லை. மதுரைக்கு வந்த பிறகுதான் அந்தச் சிரமம் தெரிந்தது.

ஒரு நாள் முழுதும் டாக்ஸி வைத்துக்கொண்டு சுற்றினார். சுந்தரம் மதுரையில்தான் இருக்கிறானா? என்பதுகூட அவருக்குத் தெரியாது. இதில் அவனை எப்படிக் கண்டு பிடிக்க முடியும்? மறு நாள் நடந்தே சில இடங்களில் தேடினார். அவர் கால்கள் ஓய்ந்து விட்டன. மனத்திலிருந்த ஆர்வத்துக்கு இணையான வலு கால்களில் இல்லை. கால்கள் நடக்க மறுத்தன.

தள்ளாடிக்கொண்டே அவர் ஹோட்டலுக்கு வந்தபோதுதான் அந்த இளைஞனைச் சந்தித்தார். அவனைப்போல அன்பு கனிய யாருமே அவருக்குப் பதில் சொல்லவில்லை.

"நீங்கள் யாரைச் சொல்கிறீர்கள் மாமா! நீங்கள் சொல்கிறமாதிரி சுமார் முப்பத்தைந்து வயதில் எனக்குச் சுந்தரம் என்றொரு நண்பன் உண்டு, அவனுக்குக் காங்கிரஸ் பற்றுக் கொஞ்சம் உண்டு, வேண்டுமானால் அவனைப் பார்க்கலாம். நீங்கள் என்னோடு என் வீட்டுக்கு முதலில் வாருங்கள், கொஞ்சம் களைப்பாறிவிட்டு அப்புறம் பார்க்கலாம்." என்று கூப்பிட்டான்.

அவன் குரலில் ஒரு கனிவு இருந்தது, அறிமுகமான ஏதோ ஒரு பண்பு இருந்தது. அதை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. இருந்தாலும் அவர் மனத்தில் அன்பு சுரந்தது. அவனைப் பின்பற்றி அவன் வீட்டுக்குப் போனார்.

எப்படிப்பட்ட குடும்பம்? அவருடைய மகனுக்கும் இப்படித்தான் ஒரு மனைவியும் குழந்தையும் இருப்பார்கள். அவனுடைய வீட்டிலும் இப்படித்தான் சந்தோஷமும் அமைதியும் நிலவிக்கொண்டிருக்கும். ஆனால் அவருடைய துரதிருஷ்டம் அவனை அவரால் பார்க்கமுடியவில்லை. அங்கே நிலவும் மகிழ்ச்சியில் ஒரு துளியைக்கூடப் பருக முடியவில்லை.

"வீட்டில் கொஞ்சம் இருங்கள். நான்போய்ப் பார்த்துவிட்டுவருகிறேன். அவன் வீட்டில் இருந்தால் இருவரும் போகலாம்." என்று சொல்லிவிட்டுப் போனான். அவனுடைய மனைவி கால் கழுவ ஜலம் கொண்டுவந்துவைத்தாள். உள்ளேயிருந்து ருசியான சமையலின் மணம் வந்துகொண்டிருந்தது. முதன் முதலாக எவ்வளவோ நாட்களுக்குப் பிறகு யாரோ முன்பின் தெரியாத ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அவரிடம் அன்பும் ஆதரவும் காட்டுகிறார்கள். அவர் உடல் புல்லரித்தது.

பௌர்ணமி நிலா. மணி எட்டு ஆகிவிட்டது. அவரவர் வீடு திரும்பிக்கொண்டிருந்தார்கள். கோயில் மணி ஓசை காற்றில் மிதந்துவந்தது. எவ்வளவோபேர் அந்தக் கணத்தில் அநுபவித்திருக்கக்கூடிய அமைதியையும் சந்தோஷத்தையும் அவர் மட்டும் அனுபவிக்கக் கொடுத்துவைக்கவில்லை.

அந்த இளைஞன் வந்து அவரை அழைத்துக் கொண்டு போனபோது அவர் உடல் முழுதும் படபடத்தது. ஒருவேளை சுந்தரத்தைப் பத்து

வருஷங்களுக்குப் பிறகு பார்க்கப்போகிறோமோ? மறுபடியும் இவ்வளவு நாட்களுக்கப்புறம் ஒருவேளை அவருக்கும் குடும்ப சுகம் காத்திருக்கிறதோ? பிள்ளையென்றும் பேரன் என்றும் வந்து வீடு நிறையப்போகிறதோ?

"இதுதான் வீடு" என்று அவன் சொன்னதைக் கேட்டு அவர் தலை நிமிர்ந்தார். அவர் உடல் புல்லரித்தது. நடுங்கும் கால்களுடன் அவர் உள்ளே அடி எடுத்துவைத்தார். அவர் மனம் படபடத்தது.

"யாரது?" என்று கேட்டுக்கொண்டு உள்ளிருந்து ஒருவன் வந்தான். சுந்தரமேதான் அது.



வயதுகொஞ்சம் ஆகியிருந்ததால் முகம் முற்றிப் போயிருந்தது. லேசாகத் தலையில் நரைமயிர் விழுந்திருந்தது. மற்றப்படி காலம் அவருடைய பிள்ளையை அவர் கண்களிலிருந்து மறைத்துவிட முடியவில்லை.

"என்னைத் தெரியவில்லையா சுந்தரம்! பத்து வருஷத்துக்கப்புறம் உன்னைத் தேடி வந்திருக்கிறேன். இங்கேபார்! நான் உன் பழைய தகப்பனார் அல்ல. அந்த நாட்களில் என்னிடமிருந்த கடுமையும் கோபமும் இப்போது இல்லை. உன்னிடம் மன அமைதிக்காகவும் சுகத்திற்காகவும் பிச்சை கேட்க வந்திருக்கிறேன். நான் பிழை செய்திருக்கலாம். ஆனால் நீ அதை மன்னித்து விடு. நீ செய்த எவ்வளவோ தவறுகளை நான் பொறுத்துக்கொள்ளவில்லையா? என்னை மன்னித்துவிடு. என் வீட்டுக்கு வா. என் வீட்டில் விளக்கேற்றி வை. இருண்டு கிடக்கும் என் வாழ்வில் எனக்கு வழிகாட்டு." அவரால் பேச முடியவில்லை. உணர்ச்சி வசப்பட்டு நாத் தழுதழுத்தது. குரல் கம்மிப் போயிற்று.

அவனுடைய முகமும் ஒரு கணம் மாறியது. கண்களில் நீர் பெருகியது. ஆனால் மறுகணமே அவன் மனம் மாறிவிட்டது. "இவ்வளவு நாள் கழித்துப் பிள்ளை என்று ஒருவன் இருப்பதாக உங்களுக்கு நினைவு வந்திருக்கிறது. பத்து வருஷத்துக்கு முன்னால் நான் அனாதையாகச் சிறைக்குப் போனேன். எனக்காக அப்போது யாரும் வருந்தவில்லை. அப்போது என் மனம் எப்படி இருந்ததென்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் என்னைச் சுகபோகத்தில் வைக்க வேண்டாம். ஆனால் சாதாரணமாக ஒரு தகப்பனார் மகனுக்குச் செய்யவேண்டிய கடமையைக்கூட நீங்கள் செய்யவில்லை. பத்து வருஷம் எவ்வளவோ சிரமப்பட்டேன், இப்போது எப்படியோ சமாளித்துக் கொண்டு விட்டேன்.

அந்த நாட்களில் என்னை உங்கள் பிள்ளையென்று சொல்லிக் கொள்ள அவமானப்பட்டீர்கள். நான் சிறைக்குப்போனது உங்களுக்குக் கௌரவக் குறைவாக இருந்தது, இன்று காலம் மாறிவிட்டது. அன்று சிறைக்குப் போனவர்கள் தான் இன்று ஆளுகிறார்கள். அதனால் என்னைப் பற்றிய அக்கறை உங்களுக்கு உண்டாகிவிட்டது.

உங்களுக்காக நான் ஏங்கின காலம் உண்டு; மனம் நொந்த நாட்கள் உண்டு. இப்போது என் மனம் கல்லாகிவிட்டது. உங்களிடம் காட்ட என் மனதில் அன்பும் கருணையும் இல்லை. விருந்தாளியாக வேண்டுமானால் என் வீட்டில் தங்குங்கள். ஆனால் மறுபடியும் வந்து உங்களோடு உறவாட என் மனம் இடம் கொடுக்கவில்லை. ஒரு வேளை சோற்றுக்கு இல்லாதவர்களுக்காக என் சுக சௌக்கியங்களைத் துறந்துவிட்டேன், இப்போது வறுமைதான் எனக்கு இனிக்கிறது. செல்வத்தில் மூழ்க நான் ஆசைப்படவில்லை, என்னை மன்னித்து விடுங்கள்."

அவர் கால்கள் நிலைதடுமாறின. மனம் நிலை கொள்ளாமல் நின்றது. பத்து வருஷங்களுக்குப் பிறகு அவர் சுந்தரத்தைக் கண்டார். ஆனால் அவருடைய பிள்ளையை அந்த உருவத்தில் காண முடியவில்லை. அன்பும் கனிவும் ததும்பிய அந்த முகம் எங்கே? கருணையும் தயாளமும் நிறைந்த அந்த உள்ளம் எங்கே மறைந்து போயிற்று? கொடூர சுபாவத்துடன் அடியோடு மாறிப்போய் விட்ட இவனைத் தேடியா அவர் இவ்வளவு தூரம் வந்தார்? இதற்காகவா ஒவ்வொரு கணமும் மனம் நொந்து நின்றார்?

மனம் சலித்தது. எப்போது வெளியே வந்தார் என்று அவருக்கே தெரியாது. ஆனால் யாரும் அவரைத் தடுக்கவில்லை.

வெளியே நிலவொளி வீசியது. அவர் மனம் மட்டும் இருண்டு கிடந்தது. கால்கள் பின்னின. கீழே விழப்போனார். அவன் — அந்த இளைஞன் — அவரைப் பிடித்துக் கொண்டான்.

"அப்பா! ஏன் இப்படி மனம் கலங்கிப் போகிறீர்கள்?"

அவர் மனம் உருகியது. யாரோ முன்பின் தெரியாத இளைஞன், அவனுடைய மனதில் இருக்கும் பச்சாத்தாபம்கூட அவருடைய மகனுக்கு இல்லையே?

"மனம் கலங்காதீர்கள், வீட்டில் தவழ ஒரு குழந்தை. ஆதரவுகாட்ட ஒரு மகன் இல்லையே என்று கவலைப்படாதீர்கள். உங்களைப் பொறுத்த வரை நான் அந்நியனாக இருக்கலாம். ஆனால் என் மனம் உங்களுக்காகப் பச்சாத்தாபப்படுகிறது. என் அப்பாவுக்கு என்னைத்தவிர ஐந்து பிள்ளைகள் இருக்கிறார்கள். நான் உங்கள் மகனாக இருந்துவிட்டுப் போகிறேன்."

அவர் கண்களில் ஒளி சுரந்தது. நடுங்கும் கைகளுடன் அவனைப் பற்றிக்கொண்டு "அப்பா! நீ யார்? இப்படிப்பட்ட குணம் படைத்த உன்னைப்பெற்ற அந்த பாக்கியசாலி யார்?" என்று கேட்டார்.

"திருவையாற்றிலிருந்தாரே ஹைகோர்ட் நீதிபதியாக இருந்த ராவ்பகதூர் ஸ்வாமிநாத சர்மா, அவரைத் தெரியுமா? அவர்தான் என்தகப்பனார்!"

ஒருகணம் அவர் சிந்தனையில் எத்தனையோ நினைவுகள் இழையோடின. இறுதி வெற்றி ஸ்வாமிநாதனுக்குத்தான். ஆனால் அவர் மனம் அதைப் பரிபூர்ணமாக அங்கீகரித்தது.



## எமடோன்

பச்சிலைகளினால் தயாரிக்கப் பட்ட மருந்து உபயோகிப்பவர் உடையில் 5x10 ராத்தல் அதிகமாகவும், வயதில் 10x15 வருஷ இளமையையும், ரத்த விருத்தி, சிவந்த கன்னங்கள், உடலுக்கு வலு, வீர்யம், மூளைக் குளிர்ச்சி இவைகளை நிரந்தரமாக அடைவர். 24 மணி நேரத்தில் புத்துயிர் பெற்று அபூர்வமான மாறுதல்களையும் குணங்களையும் பெறுவர். உத்தரவாதமானது. பெரிய புட்டி விலை ரூ. 5-0-0. சிறிய புட்டி விலை ரூ. 3-0-0. தபாற் செலவு 0-12-0.

## BLEACH YOUR SKIN



அமரிக்கா, ஐரோப்பா முதலிய வெளி நாடுகளின் சாஸ்தீரியமான ஆராய்ச்சியின் கண்டுபிடிப்பு நம்முடைய இந்தியநாட்டின் புராதன சாஸ்திரங்கள்தான்.

**"ஹேர்க்ரீம்"** இதுவரையில் யாராலும் கண்டு பிடிக்கப்படாத ஓர் ஆபூர்வ தயாரிப்பு. கறுப்பாக உள்ள முகத்தின் சருமத்தை வெண்மையாகவும், வழவழப்பாகவும் மாயமாகச் செய்கிறது. ரம்யமான வாசனையுடன் கூடியது. ஒரு பாட்டில் விலை ரூ. 5-0-0. அரை பாட்டில் விலை ரூ. 3-0-0. தபால் செலவு 0-12-0.

## தாமத மாதவிடாய்

**மென்ஸோலியன்** விலையுயர்ந்த மருந்துகளினால் புது முறையில் தயாரித்தது. நின்று போனதும், தாமதமானதுமான எந்தவித மாதவிடாய்க் கோளாறுகளையும் 24 மணிநேரத்தில் தவறாமல் ஒழுங்குபடுத்துகிறது விலை ரூ. 5—0—0.

**மென்ஸோலியன் ஸ்பெஷல்** இது மிகவும் சௌகர்யமாக, உடனே மாதவிடாயைச் சரியாக்குகின்றது. விலை ரூ. 10—0—0.

எச்சரிக்கை: கர்ப்பிணிகள் இதைக் கண்டிப்பாய் உபயோகிக்கக்கூடாது.

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில்தான்.

ANGLO AMERICAN MEDICAL STORES, (c m.) PUIL BANGASH, DELHI. 6

ஸ்தாபிதம் 1920

தந்தி NASYAM, MADRAS.
RAJANCO, ARKONAM.

### பல எக்ஸிபிஷன்களில்

தங்க, வெள்ளி மெடல்கள், ஸர்ட்டிபிகேட்டுகள் பரிசு பெற்றது. காரம், மணம், குணம், வாசனை எல்லாவற்றிலும் நிகரற்றது. பல நாட்கள் கெடாமல் நீடித்திருப்பது. இந்தியாவில் பல பாகங்களில் உடனுக்குடன் சப்ளை செய்யப்பட்டு நற்பெயருடன் விளங்கி வருவது

# பி. வி. ராஜன் & கம்பெனியாரின்

## அசல் பட்டணம் பொடி &
## R. S. சுகந்த மூக்குத்தூள்

ஒரு தோலா முதல் எல்லா ரகம் டின்களிலும் பாக்கிங் உண்டு.

விலை விவரங்களுக்கு எழுதவும்

தயாரிப்பவர்கள்:- **பி. வி. ராஜன் & கம்பெனி**

பட்டணம் பொடி & R. S. சுகந்த மூக்குத்தூள், அரக்கோணம் (N. A. Dt.)

மதராஸ் ஆபீஸ்:— 44, கோவிந்தப்ப நாயக்கன் தெரு.

வெகுநாள் நீடித்து இருப்பதற்காக

**ஏஸிஸி** சிமெண்டால் கட்டப்பட்டது




**தி அஸோஸியேடட் சிமெண்டு கம்பெனீஸ் லிமிடெட்**

இவர்களின் வியாபார மானேஜர்கள்

**தி சிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்**

SISTAS-CMI 33-TAMIL




The Cauveri Colour Press, Kumbakonam